செந்தமிழ் இன்பம்

S. V. வரதராஜ ஐயங்கார்.

THE MADURA TAMIL

தமிழ் இன்பம்

ஆசிரியர் :
S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.,
விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

கல்யாணி நிலையம்
46, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
விலை ரூ. 1-8-0

முதற் பதிப்பு—பிப்ரவரி 1951

உரிமை ஆசிரியருக்கே.

THE MADURA TAMIL SANGAM

Kabeer Printing Works, Madras-5

கவிமணி

திரு. சி. தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்

வழங்கியுள்ள

அணிந்துரை

திரு. எஸ். வி. வரதராஜ ஐயங்கார் அவர்கள் எழுதித் தொகுத்துள்ள 'செந்தமிழின்பம்' என்னும் கட்டுரைத் தொகுதியைப் படித்தேன்; ஆவலோடு படித்தேன். சுவை மிக்க பன்னிரண்டு கட்டுரைகள் இதில் உள்ளன. இவை ஆசிரியரால் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு காரணங்களுக்காக எழுதப்பட்டவையாயினும், அனைத்தும் ஒரே தன்மையவாய் இனிமையும் எளிமையுங்கொண்டு விளங்குகின்றன. தமிழ்ச் சுவை யூட்டுபவை, தமிழ்ப் பண்புணர்த்துபவை, அறநெறியுணர்த்துபவை, வரலாறு காட்டுபவை, ஆராய்ச்சி முடிபுணர்த்துபவை முதலிய பல திறத்தன இவை. முதற் கட்டுரை செந்தமிழின்பத்தின் கருவூலமாக இருக்கிறது. திருமங்கை மன்னனின் கால ஆராய்ச்சிக்கு உதவுவதாக ஆசிரியர் காட்டும் சாசனச்சான்று, அவருக்கு அத்துறையிலுள்ள பயிற்சியையும், ஆராய்ச்சித் திறனையும் விளக்கி நிற்கும். பரணர், கருணாகரன், வீரத்தாய்மார் முதலிய கட்டுரைப் பொருள்கள் வேறு பலரால் கையாளப்பட்டனவாயினும், ஆசிரியர் கையாளும் முறையில் ஒரு தனிப்பட்ட நயம் இருக்கக் காண்கிறோம்.

ஆங்காங்கே மிளிர்ந்து கிடக்கும் சீரிய பொருள்களை ஓவ்வோர் தலைப்புக்குட்படுத்திப் பலவகை மணிகளை நிரல்படக் கோத்தாற்போலத் தொகுக்கப் பெறும் இத்தகைய கட்டுரைக் கோவைகள் தமிழின்பம் பெற முனைவார்க்குப் பெரிதும் பயன்தர வல்லவை என்பதில் ஐயமில்லை. அவருள்ளும் மாணவர் இத்தகைய உரைநடைகளால் மிக்க பயன் பெறுவர் என்பது என் கருத்து. ஆசிரியர் இத்துறையில் முனைந்து தமிழன்னைக்கு அருந்தொண்டுகள் பல இன்னும் புரிவாராக. அவருக்கு எல்லா நன்மைகளும் பெருக இறைவனை வழுத்துகின்றேன்.

புத்தேரி,
26–9–'51.

தேசிக விநாயகன்.

முன்னுரை

'தமிழ் இன்பம்' என்னும் பெயருடன் வெளிவரும் இந் நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் யாவும் தமிழ் இலக்கியச் சார்புடையவை. முதற் கட்டுரையின் தலைப்பையே நூலுக்கும் தந்துள்ளேன்.

'திருமங்கை மன்னன்' என்னும் கட்டுரையின் பிற்பகுதியான 'காலவாராய்ச்சி' என்பது, மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திவரும் 'செந்தமிழ்' என்னும் திங்கள் வெளியீட்டில் விரிவாக என்னால் எழுதப்பெற்றது. அது இந்நூலில் மாணவர்க்கு ஏற்ற அளவில் சுருக்கிச் சேர்க்கப்பெற்றுள்ளது. 'முடத்தாமக் கண்ணியார், பரணர்' என்னுங் கட்டுரைகள் அகில இந்திய ரேடியோ வின் சென்னை நிலையத்தில் என்னால் நிகழ்த்தப்பெற்ற பேச்சுக்களின் படிகள். 'இரு பெரு நோன்புகள்' என்னுங் கட்டுரையிலுள்ள 'காமநோன்பு' என்னும் பகுதி 'சிந்தனை'யில் வெளிவந்தது. இவைகளைச் சேர்த்துவெளி யிட இசைவு தந்த மேற்குறித்த பத்திரிகைகளின் ஆசிரியர் களுக்கும், சென்னை ரேடியோ நிலையத்தார்க்கும் எனது நன்றி உரியதாகும்.

தமிழரிடையே, சிறப்பாகத் தமிழ் மாணவரிடையே தாய்மொழி ஆர்வம் பெருக வேண்டும் என்ற நோக்குடன் இக்கட்டுரைகளை எழுதியும் தொகுத்தும் வெளியிட முன் வந்தேன். இந்நூலிலுள்ள குற்றம் களைந்து, குறை பெய்து ஏற்றுக்கொள்ளும்படி தமிழன்பர்களை வேண்டு கின்றேன்.

திருவல்லிக்கேணி,
22-2-51.

இங்ஙனம்,
எஸ். வி. வரதராஜ ஐயங்கார்

உள்ளுறை

	பொருள்		பக்கம்
1.	தமிழ் இன்பம்	...	1
2.	இருபெரு நோன்புகள்	...	14
3.	முடத் தாமக்கண்ணியார்	...	26
4.	பரணர்	...	34
5.	திருமங்கை மன்னன்	...	42
6.	ஆயிரத்தில் ஒருவன்	...	52
7.	நானிலப் பாகுபாடு	...	60
8.	ஆதிரையார்	...	69
9.	கலிங்கம் எறிந்த கருணாகரன்	...	76
10.	வீரத் தாய்மார்	...	84
11.	அறநெறி உணர்த்திய அறிஞர்	...	95
12.	பேகன்—கண்ணகி	...	109

தமிழ் இன்பம்

1. தமிழ் இன்பம்

TAMIL SANGAM

ஆயிரம் பிறைகண்டவர்

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர் விருந்தமுதம் என்றாலும் வேண்டேன்" என்ற கடைப்பிடியுடன் தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணிபூண்டு வாழ்ந்த மகாமகோபாத்தியாய ஐயரவர்களைத் தமிழகம் என்றும் நன்றி மறவாது போற்றும் என்பதில் ஐயமில்லை. அவர் தமிழார்வமுள்ளாரனைவரும் தமிழின்பந்துய்க்கும் பொருட்டு ஏட்டுச்சுவடிகளிலிருந்த சங்க இலக்கியங்களை வாசித்த வண்ணம், தாம் அவற்றின் சொற்சுவை பொருட் சுவைகளில் தோய்ந்து துய்த்த தமிழின்பத்தை மதிப் பிட்டு உரைக்கமுடியுமோ? அன்னார் பண்டைத் தமிழரின் உயரிய நாகரிக நிலையினை நம்மனோர் அறிந்து இன்புறும் படி சங்க இலக்கியங்களை ஆய்ந்து அச்சியற்றி அழகிய உருவில் நமக்கு அளித்துள்ளார். நன்முறையில் சங்க நூல்கள் வெளிப்பட அப்பெரியார் பட்டபாட்டை "ஏடு தேடி யலைந்த ஊரெத்தனை! எடுத்துவிற்ற பல்பண்டங்களெத்தனை!" என்னும் அடிகள் ஓரளவு விளக்கக் கூடியவை.

ஐயரவர்களோடு நெருங்கிப் பழகும் பேறுபெற்றவர்கள் அவரைத் தமிழ்ப் பழம் என்றும், தமிழின்பம் என்றும் போற்றிவருவதற்குத் தக்க காரணம் உண்டு. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்பால் பயின்ற இளம் பிராயத்தில் பிஞ்சாயிருந்து, வித்துவான் தியாகராச செட்டியாரவர்களோடு பழகிய நாட்களில் முதிர்ந்த ஐயரவர்களின் அறிவு, தமிழிலக்கியங்களைப் பதிப்பிக்கத் தொடங்கிய காலத்தில் பழமாகக் கனிந்து பழுக்கலாயிற்று.

பின்னர்த் தமிழுக்காகவே வாழ்ந்த பல பேரறிஞரோடும், இராமநாதபுர சமஸ்தானத்தின் மனேசராக விளங்கிய **பொன்னுசாமித்தேவர்** போன்ற தமிழ் வள்ளல்களோடும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஐயரவர்களுக்குக் கிடைத்தது. இக்காலத்தில் ஐயரவர்கள் தாம் கண்டும் கேட்டும் உணர்ந்த அரும்பொருள்களும் செய்திகளும் பல. வயது அறிவு ஒழுக்கம் ஆகிய மூன்ருனும் சிறப்புடையவராக விளங்கிய ஐயரவர்களின் உள்ளம் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியால் பண்பட்டுப் பதமுற்று விளங்கியது. ஆயிரம் பிறை கண்டவராகி அந்த முதிர்ந்து தளர்ந்த உடல்நிலையிலும், அவரது உள்ளம் ஊக்கமுடையதாகவே உழைப்பில் முனைந்துநின்றது. இதற்கு அடிப்படையான காரணம் அவர் துய்த்துவந்த தமிழின்பமேயன்றிப் பிறி தெதுவுமன்று. தமிழ்க் கனியாக விளங்கிய அவரை யடுத்துப் பயின்ற மாணவர்களும், அவருடன் அளவளாவிப் பழகிய மேதைகளும், பிறரும் அத் தமிழின்பத்தைத் தாமும் நுகர்ந்துவந்தார்கள். இதுபற்றியே அவர்கள் ஐயரவர் களைத் தமிழ்ப் பழம் என்று போற்றிவருகிருர்கள்.

பேச்சு நயம்

ஐயரவர்கள் பாடம் சொல்லும்போதும், உரையாடும் போதும் தமிழின்பம் ததும்பும். அவரது உரைகள் இரு பொருள் படுவனவாகவும் தொனிப்பொருள் தருவனவாக வும், அறிவுறுத்தும் கருத்துக்கள் பொதிந்தனவாகவும் அமைந்திருக்கும். இத்தகைய சுவை நிறைந்த அவரது பேச்சிலே ஈடுபட்ட அறிஞர்கள் அவரைப் பிரிந்திருக்க ஒருப்படார். பிரிய நேர்ந்தாலும்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்ற மறைமொழியின்படியே ஒழுகுவர் என்பது ஒருதலை.

ஐயரவர்கள் உரையாடும்போதும் அதில் நயம் பொதிந்திருக்கும். இதற்கு ஒருதாரணம் தருவல் :

எண்பதாவது ஆண்டுநிறைவுவிழா நிகழ்ந்த பின், ஒருகால் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஐயரவர்கள் பேருரையொன்று நிகழ்த்துமாறு ஒருப்பட்டனர் ; அதைக் கேட்டு இன்புற விழைந்து அங்குச் சென்றவருள் யானும் ஒருவன். ஐயரவர்கள் கல்லூரியின் வாயிலில் வந்து இறங்கி உள்ளே நுழையும்போது, அப்பெரியாருடைய தள்ளாடும் நிலைமையையும் பார்வைக் குறைவையும் கருதிய அன்பர் ஒருவர் "ஐயா, படி, படி" என்றுசொல்லி, காலெடுத்து வைத்துப் படியேறவேண்டும் என்பதைக் குறிப்பித்தார். உடனே ஐயரவர்கள் "ஐயா, படிக்கிறேன்! படித்துக்கொண்டே இருக்கிறேன். தாங்கள் சொல்லிய படியே செய்கிறேன்" என்று நயமுறக் கூறினார்கள். இது கேட்ட அனைவர் உள்ளத்திலும் இன்பம் நிறைந்தது.

இத்தகைய தமிழின்பத்தை இடையறாது அளித்து வந்த பேரறிஞர் வேறு சிலரும் இருந்தனர். அவர்கள் **மகாவித்துவான் ரா. இராகவையங்கார், சர்க்கரை இராமசாமிப்புலவர், பொன்னோதுவார்** முதலானவர்கள். இன்னாருள் இராகவையங்காரவர்கள் இலக்கியச் சுவையில் தோய்ந்து,

> " கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாஞ் சொல் "

என்பதற்கு இலக்கியமாய் விளங்கியதைத் தமிழகம் இதற்குள் மறந்திருக்க முடியாது. நகைச் சுவை ததும்பும்படி எந்தப் பொருளையும் எப்பொழுதும் பேசித் தம்முடன் பழகுவோரை மகிழ்விப்பதில் இணையற்றவர், சர்க்கரைப் புலவர். பதமறிந்து பாடஞ்சொல்லுவது, நயந்தோன்றப் பொருள் உரைப்பது, பொருளாழத்தை எட்டிப் பார்ப்பது என்னும்

இவைபோன்ற துறைகளில் நிகரில்லாதவர், பொன்னேது வார். இவர்களோடெல்லாம் இடைவிடாது நெருங்கிப் பழகும் பேறு வாய்த்திலதேனும், நேர்ந்தபோது பழகிப் பயன்பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துவந்தது. நூற் பொருள்களை விளக்கும் இவர்கள் பெருமை தனிப்பட்டது. அதனைக் குறித்து எழுதுவது இங்கு எனது நோக்கமன்று; இவர்களோடு பழக நேர்ந்தபோது, பேச்சின் இடை யிடையே இவர்கள் வாயிலாக வெளிவந்த அரிய கருத்துக் கள் சாதுரியமுள்ளனவும் சமயோசிதமாயினவுமாக இருந்தன. அவற்றுள் சிலவற்றை விவரிப்பதே இங்கு யான் மேற்கொண்ட பணி.

மேற்குறிப்பிட்ட பேரறிஞருள் இராகவையங்கார் அவர் களோடு பலமுறை நெருங்கிப் பழகும் பேறு பெற்றவருள் யானும் ஒருவன். அவர்களது சாதுரியமும் இனிமையும் பொருந்திய பேச்சில் ஈடுபடும் வாய்ப்பு எனக்குப் பலமுறை கிட்டியது. அச்சமயங்களில், 'இவர்களோடு எந்நாளும் கூடவேயிருந்து தொண்டுபுரியும் பேறுகிட்டவில்லையே!' என்று யான் ஏங்கி வருந்தியதுண்டு. அவரோடு பழக நேர்ந்த காலங்களில் யான் நேரிலறிந்த சில நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே குறிக்கின்றேன். இவையாவும் அவர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராக விளங்கிய காலத்தில் நிகழ்ந்தவை யாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழா

தஞ்சையில் தமிழ்த் தொண்டாற்றிவரும் இச்சங்கத் தின் ஆண்டுவிழா ஒவ்வோராண்டிலும் மிகவும் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அத் தமிழ்விழாவில் அறிஞர் பலர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். 1935-ல் ஆண்டு

விழா மகாவித்துவான் இராகவையங்காரவர்கள் தலைமை யில் நிகழ்ந்தது.[1] சொற்பொழிவாற்றுவதில் புகழ்பெற்ற தமிழறிஞர் சிலர் பேசினார்கள். மாலை ஐந்துமணியளவில் விழா நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. தஞ்சைவாசிகளான பேரறிஞர், பெரும்பதவியாளர் முதலாக அன்று அங்கே கூடியிருந்தோர் பல்லாயிரவர். யாவரும் அறிஞர்களின் பேச்சில் ஈடுபட்டிருந்ததால் அமைதி குடிகொண்டிருந்தது. எட்டரைமணியளவில் சொற்பொழிவுகள் முடிந்தன. தாம் சொல்ல விரும்பியவைகளைப் பின்னுரையில் கூறலாம் என்று தலைவர் கருதியிருந்தமையால், அவரது முன்னுரை மிகவும் சுருக்கமாக இருந்ததென்பதை அவருடன் பழகிய வர்கள் தெரிந்திருந்தார்கள். முடிவுரையில் அவரது பேச்சைக் கேட்டு இன்புற யாவரும் ஆவலுடன் இருந்ததால், இடையில் எவரும் எழுந்து செல்லவில்லை. ஆயினும், மணி எட்டுக்குமேலாகிவிட்டதால், மேடையின் முன் வரிசையில் அமர்ந்திருந்த அறிஞரும் பதவியாளருமான மூவர் எழுந்துபோக முயன்றனர். அதே சமயத்தில் தலைவரவர்கள் முடிவுரையைத் தொடங்கும்பொருட்டு எழுந்து நின்றார். வெளியேற எண்ணியவர்கள் எழுந்ததும், தம் கட்டுரையைத் தொடங்குகையில் அவ்வமயத்திற்கு ஏற்பத் தலைவரவர்கள் "தஞ்சைவாசிகளுக்குத் தமிழறிவு கிடையாது என்று ஓர் அபவாதம் உண்டு!" என்றார். என்றதும், எழுந்து ஏக நினைத்தவர்கள் திடுக்கிட்டு அமர்ந்து விட்டனர். பேச ஆரம்பித்த தலைவர் அப்பொழுது கூறிய கவி,

"பிரம்பைக் கரம்பற்றிப் பின்னியந் தக்கூடை
நிரம்பக் கவியை நிரப்பிச்—சிரம்பற்றிக்
கற்றார்கள் தஞ்சைக் கடைத்தெருவெ லாங்கூவி
விற்றாலுங் கொள்ளார் விலைக்கு"

என்பது. முதலில் அவர் கூறியதும், அதற்கு மேற்

1 இவ்விழா 16-2-1935-ல் நடைபெற்றது.

கோளாக எடுத்துரைத்த பாடலும் ஒரு நிமிடநேரம் அங்கிருந்தோரைத் திகைக்கச் செய்துவிட்டன. பின்பு அவர் பேசலானார் :

"அன்பர்களே! பாடலை உற்றுநோக்குங்கள். மேல் நோக்கில் பார்க்கும்போது,—தஞ்சைவாசிகள் தமிழறிவு இல்லாதவர்கள்; தமிழின்பம் அறியாதவர்கள்—என்றுதான் சொற்போக்கினால் பொருள்தோன்றும். ஊன்றிப் பார்த்தால்,—கவியைக் கற்றார்கள் (நிறைந்து வாழும்) தஞ்சையின் கடைத்தெருவெல்லாம் கூவி விற்றாலும், அங்குள்ளோர் கல்விமான்களாக இருப்பதாலும், தெருவில் விலை கூவி விற்கும்பொருட்டு வரும் பாடல் பொருட்சிறப்பற்றதாக இருப்பதாலும், அவற்றினுஞ் சிறந்த கவிகளைத் தாமே பாடியும் கேட்டும் இன்புற்றவர்களா யிருப்பதாலும், அன்னார் விலைக்குக் கொள்ளார்" என்பதே இச்செய்யுளின் முடிந்த பொருள். இப்பாட்டு தஞ்சைவாசிகளின் மேம்பட்ட தமிழறிவை விளக்குவதேயன்றி வேறன்று. தஞ்சைவாசிகள் தமிழறிவு இல்லாதவர்கள் என்ற அபவாதத்தை வெளியிடுவதாக இச்செய்யுளுக்குப் பொருள் கொள்ளுவது தவறு. என்னிடம் இப்பாடலைச்சொல்லி, அங்ஙனம் பொருளுரைத்த ஒருவரை யான் மறுத்துரைத்தேன்" என்று அவர் தமது முடிவுரைக்கு ஓர் முன்னுரையமைத்துக்கொண்டு பேசினார். அந்தப் பேச்சு அன்றுகேட்டு உவந்த அறிஞர் உள்ளத்தில் தமிழின்பத்தைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தது. இனி, மற்றொரு நிகழ்ச்சிக்குச் செல்வேன்.

பிள்ளையார் பூசனை

ஐயங்காரவர்கள் ஆழ்ந்த வைணவப்பற்று உள்ளவர் ; ஆழ்வார்களின் அருளிச் செயலில் ஈடுபட்டு உருகுவார் ; உணர்ச்சி பொங்கப் பாடிக் கண்ணீர் பெருக்குவார் ; உட

னிருப்பவர்களுக்குப் பாசுரங்களின் பொருள் நயத்தை விளக்கி, "இவர் நம்பிள்ளையின் புனரவதாரமோ!" என்று வியக்கும்படி செய்வார். அவரது சொல் வன்மையும் பேச்சினிமையும் இணையற்றவை. அவரது உள்ளத்தினின்றும் பீரிட்டெழும் சுவை பொதிந்த உரைகளைக் கேட்டின்புற விரும்பியே **புலவர் கந்தசாமியாரவர்களும்** சர்க்கரைப் புலவரவர்களும் அடிக்கடி அவர் இல்லத்திற்கு வருவார்கள். இவருள் கந்தசாமியார் ஐயங்காரவர்களின் பழைய மாணவருள் ஒருவர். அவர் சற்று விநயங் கொண்டவராகவே பழகுவார். சர்க்கரைப் புலவரவர்கள் வேடிக்கையாகப் பேசிப் பேசி ஐயங்காரவர்களை உவப்பித்து, அதற்கு ஈடாக அவரைப் பேசுவித்துத் தாமும் இன்புறுவார். இவர்கள் பேச்சில் தமிழின்பம் ததும்பி நிற்கும்.

ஒருகால், விநாயக சதுர்த்தி நாளன்று காலையில் யான் ஐயங்காரவர்களைக் காணும் பொருட்டு அவரில்லத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். வேலையாள் ஒருவன் அச்சில் அடித்தமைத்த மண் பிள்ளையார் ஒன்றும், வில்வம் அறுகு அரளி கொன்றை போன்ற பத்திர புஷ்பங்களும் வாங்கியெடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். அச்சமயம், சர்க்கரைப் புலவர் நீராடித் திருநீறும் குங்குமப் பொட்டும் அணிந்தவராய்க் கச்சமாக ஆடையணிந்து கம்பீரமான தோற்றத்துடன், "சுவாமிகளே!" என்று அழைத்த வண்ணம் உள்ளே வந்தார். "புலவரே! வாருங்கள்" என்று ஐயங்காரவர்கள் அவரை வரவேற்று, தாம் பிள்ளையார் பூசனைக்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார். புலவரவர்கள் "சுவாமி! தாங்கள் பரம வைணவராயிற்றே! பிள்ளையார் பூசை செய்யலாகுமா?" என்றார். இப்பேச்சில் ஈடுபட்டிருந்த யான் ஐயங்காரவர்களின் விடையை ஆவலுடன் எதிர்பார்த்தேன்.

"புலவரே! நான் பரம வைணவன் என்று தாங்கள்

சொன்னது முற்றும் உண்மைதான். திருமாலே பரம் பொருள் என்பதுதான் எங்கள் முடிவு. பிள்ளையார் எங்கள் பெருமாளைக் காட்டிலும் தாழ்ந்தர் என்பதுதான் எமது கொள்கை. ஆனால், அவர் என்னைக் காட்டிலும் பெரியவர்தானே! அதில் எனக்கு ஐயமில்லை. அதனால், அவரைப் பூசிப்பதில் என்ன தடை?'' என்றார் ஐயங்கா ரவர்கள். இந்த விடையைக் கேட்ட எங்கள் இருவருள்ள மும் இன்பத்தால் பூரித்துவிட்டன.

திருவையாறு

ஒருநாள் சர்க்கரைப் புலவரும் கந்தசாமியாரும் ஐயங்காரவர்கள் முன்னிலையில் திருவையாற்றின் தல மகிமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ''திருநா வுக்கரசர் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த பதி, திருவை யாறு. ஆயினும், அவர் அங்கே மடம் கட்டாமல், திருநல் லூரிற் கட்டியதற்குக் காரணம் இன்னதென்று விளங்க வில்லை'' என்று திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் தமது ''பெரியபுராண ஆராய்ச்சி'' என்ற நூலில் எழுதி யுள்ளார். அந்தப் புத்தகத்தை எடுத்துத் திறந்தபோது இந்த வரிகள் என் கண்ணிற் பட்டன'' என்று புலவர் கூறினர்.

உடனே ஐயங்காரவர்கள் ''புலவரே! திருவையாறு மிக வும் புனிதமான திருப்பதி. அங்கே வரும் அடியார்கள் சிவ தரிசனம் செய்தபின், அங்கு இராத் தங்காமல் அயலூர்க் குச் சென்று விடுவதால், அபசாரப்படாமல் இருப்பார்கள் என்று நாவுக்கரசர் கருதியதே அங்கு அவர் மடம் கட்டாத தற்கு உரிய காரணமாயிருக்கலாம். என் அனுபவத்தி லிருந்து ஒரு காரணம்தோன்றுகிறது. யான் ஒருமுறை திரு வையாற்றுக்குச் சென்றிருந்தேன். அன்றிரவு அங்கே தங்க நேர்ந்தது. அன்றிராப்பொழுது எனக்குச் சிவராத்திரி

யாகவே கழிந்தது! யான் கண்கொட்டவில்லை! வண்டுருவம் பெற்றிருந்த கொதுகுகள் இசைத்த வண்ணம் மொய்த்துக் கடிக்கத் தொடங்கிவிட்டன. முன்புறம் கடித்தவற்றுடன் ஓரளவு போராட முடிந்தபோதிலும், முதுகுப்புறம் வந்து தாக்கத் தொடங்கியவற்றை என்னால் ஓட்ட முடியவில்லை. அதுமுதல் புதிய ஊர்களுக்குச் செல்லும்போது இராத் தங்க நேர்ந்துவிட்டால், திருவையாற்று நினைவு எனக்கு வந்து விடும். 'சிவதரிசனத்தின் பொருட்டுத் திருவையாற்றுக்கு வரும் அடியார்கள் இரவில் தங்க நேரிட்டால் கொதுகு கடிக்கு ஆளாகி வருந்த நேருமே என்று எண்ணி, அவர்கள் அங்கே தங்கலாகாது என்ற குறிப்பினால்தான் நாவுக்கரசர் அங்கே மடங்கட்டாமல் விடுத்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது " என வேடிக்கையாகக் கூறினார்கள். புலவர் "பேஷ்! பேஷ்!" என்று சொல்லிக்கொண்டே கலகலவென்று சிரித்தார். கந்தசாமியார் அமைதியான நகைப்பால் தமது வியப்பைப் புலப்படுத்தினார்.

கைலாசம்

ஐயங்காரவர்கள் அண்ணாமலை நகரிலிருந்தபோது யான் அடிக்கடி அங்குச் சென்று, அவர்கள் இல்லத்தில் தங்கி, அவர்களது அன்பைப் பெறுவது உண்டு. அவரோடு நெருங்கிப் பழகி அவரது அன்பையடைந்த பலருள் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறை அலுவலகத்தின் சேவகரா யிருந்த **கைலாசம்** என்பவரும் ஒருவர். இராமாநுசரிடம் வடுகநம்பிக்கு எவ்வளவு ஈடுபாடு இருந்ததோ, அவ்வளவு ஈடுபாடு ஐயங்காரவர்களிடம் கைலாசத்திற்கு உண்டு. அவர் நாள்தோறும் காலைமாலைகளில் ஐயங்காரவர்கள் இல்லத்திற்கு வந்து, அவருக்குப் பணிவிடை செய்வார். அமைதியான தன்மையும், சிரித்த முகமும், பணிவும், கல்விமான்களிடம் மிக்க விநயமாக நடந்து கொள்வதும்

அவரிடம் குடிகொண்டிருந்தன. இந்த நல்லியல்புகளை ஐயங்காரவர்கள் பாராட்டுவதுடன் அவரிடம் உள்ளன்பும் உடையவராயிருந்தார். ஐயங்காரவர்கள் வீட்டில் அவர் ஒரு செல்லப் பிள்ளையாகவே இருந்தார்.

ஒருநாள் அந்தக் கைலாசம் வீட்டின் பின்கட்டில் கிணற்றிலிருந்து நீரிறைத்துத் துணிகளைத் தோய்த்துக் கொண்டிருந்தார். கடையிலிருந்து சில பொருள்களை வாங்கிவரவேண்டும் என்று வீட்டில் பெண்பாலார் ஐயங்காரவர்களிடம் தெரிவித்தார்கள். கடைக்கனுப்பும் பொருட்டு ஐயங்காரவர்கள் '' அப்பா! கைலாசம்,'' என்று இரண்டு மூன்றுமுறை அழைத்தார்கள். அக்குரல் துணி தோய்த்துக் கொண்டிருந்த கைலாசத்தின் செவியில் விழாததால், அவர் வரவில்லை. ஐயங்காரவர்கள் மற்றும் ஒருமுறை உரத்த குரலில் கூவி அழைத்தார்கள். அந்த அழைப்பு கைலாசத்தின் காதில் விழவே, அவர் தோய்த்த துணியை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்து முன்னே நின்றார். ஐயங்காரவர்கள் சர்க்கரைப் புலவரை நோக்கிச் சிரித்த வண்ணம் '' புலவரே! நானோ ஒரு வைணவன். ஒரு நாளில் நான் எத்தனை முறை 'கைலாசம் கைலாசம்' என்று அழைக்கிறேன் தெரியுமா? ஏறக்குறைய நூறு எனலாம். வைணவனான எனக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? முன் பிறவியில் யான் சிவ நிந்தனை செய்திருக்க வேண்டும். அதற்குக் கழுவாயாகவே இறைவன் இப்படிக் 'கைலாசம், கைலாசம்' என்று அழைக்கும்படி விதித்திருக்க வேண்டும் என்றுதான் நான் நினைக்கின்றேன் '' என்றார். இந்த உரை, கைலாசம் உள்பட எங்கள் எல்லோருக்கும் இன்பம் அளித்தது. இவ்விதமாக, அவரோடிருக்கும்போது நாங்கள் இடைவிடாமல் பெற்றுவந்த தமிழின்பம் எங்களுக்கு விருந்தளிப்பாகவே இருந்தது.

அம்மான் சேய்

இனி, மற்ருெரு சுவையார்ந்த நிகழ்ச்சியைக் கூறுவேன். ஒரு சமயம் அண்ணுமலை நகருக்கு வந்திருந்த மகாமகோபாத்தியாய ஐயரவர்கள், ஐயங்காரவர்கள் அழைப்பிற்கிணங்கி அவர் இல்லத்திற்கு வந்தனர். அப்பொழுது அங்கே ஒரு சிறு புலவர் கூட்டம் கூடியது. வழக்கமாக வருபவர்களேயன்றி மற்றும் பலர் அங்கே வந்திருந்தார்கள். ஐயங்காரவர்கள் வசித்த இல்லத்தை யடுத்த மேலண்டை வீட்டில் வாழ்ந்த பண்டித மணி கதிரேசச் செட்டியார் அவர்களும் வந்திருந்தார் என்றே நினைவு. அச்சமயம் ஸ்ரீ. மு. இராகவையங்கார் அவர்களும் அங்கிருந்தார். இவர்களுக்கிடையே நடந்த பேச்சு மிகவும் சுவாரசியமாக இருந்தது என்று சொல்லவும் வேண்டுமோ?

அங்கு வந்திருந்த புதியவரான புலவர் ஒருவர் ஐயங்காரவர்களோடு மிக நெருங்கிப் பழகாதவர் என்று எனக்குத் தோன்றிற்று. பேச்சின் இடையே அவர் "சுவாமி! இராகவையங்கார் என்ற பெயருள்ள நீங்கள் இருவீரும் அத்தான் அம்மாஞ்சி முறையினர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களில் யார் அத்தான்? யார் அம்மாஞ்சி?" என்று கேட்டார். அதற்கு மூத்த இராகவையங்கார் விடையிறுக்க இடமின்றி மு. இராகவைங்கார் அவர்கள் முந்திக்கொண்டு, "என்னைப் பார்த்தால் அம்மாஞ்சியாகத் தோன்றவில்லையா தங்களுக்கு!" என்று மறுமொழி கூறினுர். யாவரும் 'கொல்' என்று சிரித்தார்கள். ஐயங்காரவர்கள் "அவர் அம்மாஞ்சியல்லர். எனது அம்மான் சேய்!" என்ருர்.

திருப்புளியாழ்வார்

அதன்பின் ஐயங்காரவர்கள் ஐயரவர்களை மறுநாள் பகலில் தமது இல்லத்தில் விருந்துணவு கொள்ள வேண்டும் என்று வேண்டினுர்கள். ஐயரவர்களும் அதற்கு இசைந்தார். "நான் பல ஊர்களுக்குச் செல்ல நேர்ந்த போது, பல சமயங்களில் ஸ்ரீவைஷ்ணவர் இல்லங்களில் உணவருந்த நேர்ந்ததுண்டு. அவர்களில் தென்கலையார் வீடுகளில் எங்களைப் போலவே கறி, கூட்டு, பச்சடி முதலியவைகளையே முதலில் பரிமாறுவது வழக்கம். பாகம் மிகவும் நன்ருயிருக்கும். ஓதனங்களை அளவறிந்து கலப் பதில் வைணவர்கள் இணையற்றவர்கள். அவற்றுள், புளியோரை நிகரற்றது. ஆனுல், குழம்பு ரசங்களில் மட்டும் புளிப்புச் சற்று தூக்கலாகவே இருக்கும். ஆயினும் சுவை குன்ருதிருக்கும். மதுரைக்குத் தெற்கிலுள்ள இடங் களில் வாழும் வைணவக் குடும்பத்தினர்க்குப் புளிப்பைச் சற்றுக் கூட்டியே உண்பதில் விருப்பம் அதிகமாகவே காணப்படுகிறது" என்று ஐயரவர்கள் கூறினுர்கள்.

ஐயரவர்கள் நயமாகவும் மெதுவாகவும் சுவையாகவும் சொல்லிவந்ததை அங்கிருந்தோர் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் நிறுத்தியதும், ஐயங்காரவர் கள் "ஐயரவர்களுக்கு ஒரு விண்ணப்பம். வைணவர்க ளாகிய எங்களுக்குப் புளிப்பில் ஆர்வம் அதிகம் என்பது உண்மைதான். அதற்கு அடிப்படையான காரணம் எங்கள் தரிசன முதல்வரான நம்மாழ்வார் புளியமரத்தை ஆச்சிரயித்துள்ளமைதான்! ஆழ்வார் உகந்த புளிய மரத்தை நாங்கள் அபிமானித்து வருகிறோம். அந்த மரத்தை நாங்கள் **திருப்புளியாழ்வார்** என்று அழைப்பதே இதற்குச் சான்று" என்ருர்.

தமிழின்பம் எங்களனைவரையும் ஆட்கொண்டு

விட்டது. இவ்வாறு சமயோசிதமாகவும் சாதுரியமாகவும் ஐயங்காரவர்கள் பேசியவை பல. அவற்றுள் சிலவற்றை இக்கட்டுரையில் குறித்துள்ளேன்.

இத்தகைய தமிழின்பத்தை இடையறுது அளித்து வந்த பேரறிஞர் பலர் மறைந்துவிட்டார்கள். பழைய வரன் முறை வழுவாத மரபிலே தமிழ்ப்புலமை நிரம்பிய இத்தகைய பேரறிஞர்களையும் கண்ணிலியாகிய காலன் கொண்டு போய்விட்டான். அவர்களோடு அளவளாவித் தமிழின்பம் துய்த்த காலம் இனி எங்கே வரப்போகிறது!

2. இருபெரு நோன்புகள்

மார்கழி நோன்பு

தமிழ் இலக்கியங்களிலே பெருவழக்குடைய செய்திகள் பலவற்றுள் தமிழ் மக்களால் சிறப்பாகக் கைக்கொண்டு நடத்திவரப்பெற்ற நோன்புகளும் குறிப்பிடத்தக்கவை யாகும். அவற்றுள் **மார்கழி நோன்பு, காம நோன்பு** என்பவை தமிழ் மகளிரால் பெரிதும் போற்றப்பெற்றவை. இவை சைவ, வைணவ சமயச் சார்புடையனவாக இந்நாளில் தோன்றிய போதிலும், மிகவும் பழமை யுடையவை. சங்க நூல்களில் இவற்றைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆதலின், சைவ வைணவ சமயப் பெரியார்கள் காலத்திற்கு முன்பே இவை வழக்கி லிருந்தன என்பது தெளிவு. இவை தமிழ் நாட்டிலேயே தோன்றி வழங்கப்பெற்று, சைவ, வைணவ சமயப் பெரியார்கள் காலத்திலே வளர்ந்தவையாகும். இந் நோன்புகள் இல்லறத்தார்க்கு உரியவை என்பதும், கன்னிப்பெண்களால் மேற்கொள்ளப் பெற்றவை என்பதும் நாம் அறியத்தக்கவை. இவை பற்றித் தமிழ் நூல்களில் காணப்படும் செய்திகளை இக்கட்டுரையில் கூறுவேன்.

மார்கழி நோன்பு சைவம், வைணவம் ஆகிய இரு சமயத்தாராலும் சிறப்பாகக் கொள்ளப்பெற்றது. மாணிக்க வாசகர் அருளிய **திருவெம்பாவை**யும், ஆண்டாள் அரு ளிய **திருப்பாவை**யும் இந்நோன்பு பற்றிய செய்திகளை விளக்கி யுரைக்கின்றன. இவற்றுள் திருவெம்பாவை இரு பது பாடல்களையுடையதாய்த் திருவாசகம் என்ற நூலில் சேர்ந்துள்ளது. திருப்பாவை முப்பது பாசுரங்கள்

கொண்டதாய், ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் முதலாயிரம் என்ற பகுப்பில் அடங்கிய ஒரு தனிப் பகுதியாக இருக்கிறது.

நாடு வளங்குன்றியபோது மழை பெய்யவேண்டியும், தாம் உத்தம நாயகரையடையும் பொருட்டும் கன்னியர் காத்யாயநீ தேவியைக் குறித்து மார்கழி மாத முழுவதும் நோற்கும் நோன்பு இது. இந்நோன்பை மேற்கொள்ளும் கன்னியர் வைகறையில் துயிலெழுந்து, துயிலெழாத பிற கன்னியரையும் அவரவர் இல்லம் சென்று எழுப்பி யழைத்துக் கொண்டு திரளாக ஆற்றங்கரையை அடைவர். யாவரும் நீராடித் தேவியின் உருவத்தை வணங்கித் தமது விருப்பம் நிறைவேறவேண்டி வழிபடுவர். இவ்வாறு தேவியின் பாவையை வழிபடும் நோன்பாதல் பற்றியே திருப்பாவை, திருவெம்பாவை என்ற நூற்பெயர்கள் வழங்கலாயின. பாவை என்பது பெண்தெய்வத்தின் பிரதிமையைக் குறிக்கும் பெயரேயாகும். "நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்," "நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்" என்னுந் திருப்பாவைத் தொடர்கள் இதற்குச் சான்றாகும்.

மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவெம்பாவைச் செய்திகளை நோக்குவோம். அவர் திருவண்ணாமலையில் சிவதரிசனம் செய்தவண்ணம் தங்கியிருந்த காலத்தில் மார்கழி மாதம்வர, மகளிர் திருவாதிரை நாளுக்குப் பத்து நாட்கள் முன்பிருந்தே தொடங்கி, அந்தப் பத்து நாட் களிலும் அதிகாலையில் எழுந்து, பிற கன்னியரையும் துயிலெழுப்பி அழைத்துச் சென்று பொய்கையில் நீராடி வந்ததை அப்பெண்கள் வாக்காக அமைத்துப் பாடிய தாகும், இது.[1] திருப்பாவைப் பாடல்களைப் போலவே

1. திருவாதவூரர் புராணம்—திருவம்பலச் சருக்கம்.

திருவெம்பாவையிலடங்கிய ஒவ்வொரு பாடலும் "எம் பாவாய்" என்றே முடிகின்றது. இருநூல்களில் கூறப் படும் நோன்பு பற்றிய செய்திகளிலும் ஒற்றுமை காணப் படுகிறது. திருவாதவூரர் அருளிய திருவெம்பாவை சிவபிரானைக் குறித்தும், ஆண்டாள் அருளிய திருப்பாவை கண்ணபிரானைப் பற்றியும் வேறான தெய்வச் சார்புடையன வேனும், நோன்பின் நோக்கம் பொதுவானதேயாகும். திருவெம்பாவைக்குத் தரப்பெற்றுள்ள தலைப்பு **சத்தியை வியந்தது** என்பது. இதனால் (பார்வதி) தேவியைப் புகழ்வதே இந்நூலின் நோக்கம் என்பது தெளிவாகும்.

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்."

(திருவெம்பாவை—14)

என்பது இக்கருத்தை விளக்குதல் காணலாம்.

தொல்காப்பியப் பொருளதிகார உரையில் 'பாவைப் பாட்டு' என்னும் பெயருடன் வழங்கப்பட்டது திருப்பாவை போன்ற பிரபந்தமேயாகும்.

"கோழியுங் கூவின குக்கி லழைத்தன
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்
கூழை நனையக் குடைந்து குளிர்புனல்
ஊழியுண் மன்னுவோ மென்றேலோ ரெம்பாவாய்"

என்னும் உதாரணப்பாடல் யாப்பருங்கலவிருத்தி என்னும் இலக்கண நூலின் இறுதிச் சூத்திர உரையில் காணப்படு கிறது. இதில் குறித்துள்ள செய்திகளால் அருகக் கடவுளையோ அல்லது புத்தரையோ வழிபட்டுச் செய்யப் படும் பாவை நோன்பு பண்டை நாளில் உண்டு என்பது தெளிவாம்.

ஆசிரியர் நல்லந்துவனார் என்பவர் இயற்றிய

பரிபாடல்[1] செய்யுளில் இந்நோன்பைப் பற்றிய செய்திகள் உள்ளன :

" கரிய மேகங்களின் இடிக்கும் ஒலி நீங்கிப் பனிமிகுந்தது; குளிர் நடுக்கும் முன்பனிப் பருவம். சூரிய வெப்பம் உறைக்காத கடைமாரிக்காலம் ; மார்கழி மாதத்தில் நிறைமதி நாளாகிய திருவாதிரையில் வழிபாட்டு வரன் முறையறிந்தவர் தெய்வத்திற்குத் திருவிழாவைத் தொடங்கினர். 'பூமி மழைவளம் பெற்றுக் குளிர்வதாக' என்று சொல்லி அம்பா வாடலைச் செய்வதற்குக் கன்னிப் பெண்கள் கூடி, சடங்கு அறிந்த முதிய பார்ப்பனிமார் நோன்பு நோற்கும் முறைமையைத் தெரிவிக்க, பனிமிகுந்த வைகறையில் நீராடினர் ; நீர்வாடை வீசுவதால், கரையில் தங்கியிருக்கும் அந்தணர் வளர்த்துள்ள வேதாக்கினியை அக்கன்னியர் வணங்கியவராய், அதில் தம் ஈரத்தைப் புலர்த்தி நின்றுர்கள். ஓலையைப் பிடித்து வாசிக்கும் இளைஞரான ஆண் மக்களோடு விளையாடும் கூட்டத்தாராகிய அச்சிறுமியர், புலன்களையடக்கித் தீயின் முன்பாகச் செய்யும் தவத்தை முன்பிறவிகளில் அடுத்தடுத்துச் செய்ததனுல் தாயருகாக நின்று தவமாகிய தைந்நீராடல் ஆகிய நோன்பைச் செய்யும் வாய்ப்பை அடைந்தனர்."

இதிலிருந்து கன்னிப்பெண்கள் வையைக்கரையில் மார்கழித் திங்களில் நீராடி நோன்பு நோற்கும் வழக்கம் சங்கநாளிலே உண்டு என்பது விளங்கும். அப்பாடலிலிருந்து, இந்த நோன்பு மார்கழித் திங்களில் மதிநிறைந்த நன்னுளில் தொடங்கி அந்த மாத இறுதியில் முடிவுறும் என்றும் அறியலாகும். ஆசிரியர் நல்லந்துவனுர் இந்நோன்பை 'அம்பாவாடல்' என்று குறிப்பிடுகிருர். நோன்பு நோற்கும் கன்னியர் சிறுமியராதலின், அவர்கள் நீராடும்போது அவர்களது தாய்மாரும் உடனிருப்பது பற்றியே இப்பெயர் வழங்கியிருக்கலாம். 'அம்பாவாடல்'

1. பரிபாடல்–14.

என்பதற்குத் தேவி (அம்பா)யின் பொருட்டு நிகழ்த்தப்படும் நீராட்டம் எனப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

'மார்கழி நீராடல்' ஆகிய இந்நோன்பு 'தைந் நீராடல்' என்றே நற்றிணை[1], ஐங்குறு நூறு[2], கலித் தொகை[3] போன்ற சங்க நூல்களில் குறிப்பிடப்படு கின்றது. நிறைமதிநாளும் திருவாதிரையும் மார்கழியின் பிற் பகுதியிலிருந்து முடிவிற்குள் ஒன்று சேர்வது உண்டு. மாதங்களைக் கணக்கிடும் முறைகளில் மார்கழியின் இடையில் நிறைமதிக்குப் பின்வரும் மாதம் தையின் முற்பாதி வரையில் ஒரு மாதமாகக் கணக்கிடப்படுவதும் உண்டு. இது பற்றியே 'மார்கழி நீராடல்' ஆகிய நோன்பு 'தைந்நீராடல்' எனவும் வழங்கப் பெற்றிருக்க லாம். இந்நோன்பு சங்ககாலத்துக்குப் பின் பொதுவாகக் கன்னியர் யாவராலும் மேற்கொள்ளப் பெற்றுத் தமிழக மெங்கும் பரவியது.

சங்க நாளிலும் அதையொட்டிய காலத்திலும் நாடு மழை வளம் பெறவும், தாம் உத்தம நாயகனை அடையவேண் டியும் கன்னியரால் கைக்கொள்ளப்பெற்ற இந்நோன்பு, பிற்காலத்தில் மறுமைப்பயனை வேண்டி, அடியார்களால் தெய்வத்தைக் குறித்துப் பாடப்படும் பிரபந்தமாயிற்று. நாளடைவில் கன்னிப் பெண்கள் இந்நோன்பைக் கை விட்டனரேனும் திருப்பாவையும் திருவெம்பாவையும் அடி யார்களால் பெரிதும் போற்றிக் கொள்ளப்பெற்றன. அடி யார்கள் மார்கழி மாதத்தில் வைகறையில் எழுந்து நீராடி, அப்பாசுரங்களைப் பக்தியுடன் இல்லங்களிலும், கோயில்களிலும் ஓதி வரலாயினர். இவ்வாறு இப்பிரபந்தங் களை ஓதுவது சமயாசாரமாகக் கொள்ளப் பெற்றது. வைணவர்கள் மார்கழி மாதம் முப்பது நாளும் நாளொன்

---

1 நற்றிணை 22, 2 ஐங்குறுநூறு - 84,
3 கலித்தொகை - 59, 80.

றுக்கு ஒரு பாசுரமாக முப்பது பாசுரங்களையும் ஓதுவர். சைவ சமயத்தார் திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன்பு தொடங்கித் திருவாதிரைவரை திருவெம்பாவையை ஓதி முடிப்பர். முன்னோர் திருவாதிரை நாளையே நீராட்டத்திற்கு உரியதாகக் கொண்டார்கள். ஆயினும், பிற்காலத்தில் மாறுதல்கள் ஏற்பட, இந்நோன்பு மார்கழி மாதம் முழுதுமே கொண்டாடப்படும் நிலையை அடைந்தது.

இதுகாறும் கூறியவற்றால் 'மார்கழி நோன்பு' எனவும் தைந்நீராடல் எனவும் வழங்கப்படும் நோன்பினைப் பற்றிய பல செய்திகள் கூறப்பட்டன. இனி **காமநோன்பு** என்றும் **பாவை நோன்பு** என்றும் வழங்கிய மற்றொரு நோன்பைப் பற்றித் தமிழ் இலக்கியங்களிலிருந்து நாமறியத் தகும் செய்திகளைக் காண்போம்.

காமநோன்பு[1]

மார்கழி நோன்பு முடிவு பெற்றது. கோப கன்னியர் தாங்கள் காதலித்த கண்ணபிரானை நாயகனாக அடைய விரும்பிக் காத்யாயநீ தேவியைக் குறித்து நோற்றது இந்நோன்பு. 'பாவை நோன்பு' என்றும் இது வழங்கப்படும். மார்கழி முப்பது நாளும் இவ்விரதத்தை விடாது நடத்திய கோபியர், அம்மாத முடிவில் தங்கள் விருப்பத்தைக் கண்ணனருளால் அடையப் பெற்றார்கள் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது[2]. முற்காலத்தில் தமிழ் நாட்டுச் சிறு பெண்களும் நல்ல நாயகனைப் பெறவும் நாடு வளமுறவும் இந்நோன்பை நடத்தி வந்தார்கள் என்பது சங்கநூல்களால் அறியலாம்.

---

1. இப்பகுதி 'தையொரு திங்களும்' என்னும் தலைப்புடன் 'சிந்தனை' என்னும் மாத இதழில் (தொகுதி 1–பகுதி 8) வெளிவந்தது.

2. தசமஸ்கந்தம்–22-ஆம் அத்தியாயம்.

அத்தகைய நோன்பின் சிறப்பை அறிந்து, பெரியாழ்வார் மகளான கோதைப் பிராட்டியும் அதைக் கைக்கொண்டாள். இதற்குக் காரணம் கண்ணபிரானிடம் இவள் வைத்திருந்த காதல் மிகுதியேயாம். கோபியர்கள் அப்பெருமானிடம் கொண்டிருந்த பிரேமைப் பெருக்கிற்குச் சிறிதும் குறைந்ததன்று, இவளது காதற் பெருவெள்ளம். அப்பெருமானை அடைந்தாலன்றி உயிர் தரியாத நிலையிலிருந்தவள் இப்பிராட்டி. ஆகவே, கோபஸ்திரீகள் நோற்ற நோன்பைத் தானும் கைக்கொண்டு, தான் விரும்பிய தெய்வ நாயகனை அடைய முயன்றாள் இக்கோதை நாயகி. அதற்காக அக்கோபியருள் ஒருத்தியாகவே தன்னைப் பாவித்துக் கொண்டு, மார்கழி முப்பதும் கடுமையாகவே நோற்பாளாயினள். நோற்று வந்த மாதம் முடிந்து விட்டது ; தையும் பிறந்தது. ஆனால் பெருமானோ தன்னைச் சிறிதும் கடைக்கணித்தானில்லை. என் செய்வாள், பாவம்! வேறு எத்தெய்வத்தைத் துணைக்கொண்டு இனி அவனை அடையலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்தாள். அப்போது, உடனொத்த கன்னியர் பலர், தாங்கள் உகந்த நாயகரைப் பெறுவதற்காகத் தைமாத முதலே காமநோன்புக்கு அடிகோலுவதை நேரிற்கண்டு உள்ளம் பூரித்தனள். கண்ணபிரான் தங்கையான காத்யாயநீ தேவியை மார்கழியில் வழிபட்டது போலவே, அவன் திருமகனான காமதேவனைக் கால் பிடித்தாலாயினும், தன் எண்ணம் நிறைவேறுதா என்பது அவள் கருத்து. அடைய விரும்பும் பொருளின் கனமானது, ஒரு சிறு துரும்பையும் பெருந் துணையாகப் பற்றும்படி செய்யக் கூடியதன்றோ? ஆகவே, உடனொத்த கன்னியர் இறங்கிய காமனோன்பில் தானும் இறங்கி விட்டனள் நம்பிராட்டி. அந்நோன்பில் இருந்து கொண்டு, காதற்பெருவெள்ளம் கரை புரண்டோட, காமதேவனை நோக்கி இப்பெரியாள் உருகிப் பாடியதே

" தையொரு திங்களும் " என்று தொடங்கும் திருப் பதிகம்.

'நாச்சியார் திருமொழி' யின் முகப்பில் நாயக மணி போல் விளங்கும் இப்பதிகத்திலிருந்து, காமநோன்பை அக்காலத்துக் கன்னியர் நோற்று வந்த முறைகள் சில வெளியாகின்றன. முதன் முதல் நோன்பெடுக்கும் கன்னிப் பெண்கள், தங்கள் இல்லங்களிலே வெண்சாந்து பூசிய சுவர்த் தலங்களில் மன்மதன் திருவுருவை அவன் பேருடன் வரைந்து, அதனைத் தெய்வ சந்நிதியாக அமைத்துக் கொள்வர். வரலக்ஷ்மி விரதத்தில் இக்காலத்து மகளிர் சுவர்களில் சித்திரித்துக் கொள்ளும் முறை போன்றதே இது. தை, மாசி மாதங்களில், இக்கன்னியர் அந்தத் தெய்வ சந்நிதியைத் திருவலகால் விளக்குவதும், அதனை மண்டலாகாரமாக மெழுகிடுவதும், வீட்டு வாயில்களைக் கோலங்களால் அலங்கரிப்பதும் மரபு[1]. கிழக்கு வெளுப்ப தன் முன்பே இவர்கள் நீர்த்துறை சென்று நீராடி மீண்டு, பின் நோன்பு தொடங்குவர். மார்கழி நோன்பையொட்டி நடைபெறும் இதனைத் 'தைந்நீராடல்' என்பது தமிழ் வழக்கு.

> " தைஇத் திங்கள் தண்கயம் படியும்
> பெருந்தோட் குறுமகள் "
>
> (கலித்தொகை. 80)
>
> " தையினீராடிய தவந்தலைப் படுவாயோ "
>
> (கலித்தொகை. 59)

என்று முன்னோர் இதனை சிறப்பித்துள்ளனர். இந்த நோன்பில், வேதம் வல்ல அந்தணர்கள் மந்திரமோதவும் 'உருவுடையார், இளையார்கள், நல்லார்' ஆன மங்கையர்

1. நாச்சியார் திருமொழி—முதல் திருமொழி. வைணவர் இல்லங்களில் மகளிர் காலையில் எழுந்து கோலமிடும்போது 'தையொரு திங்களும்' என்ற முதல் பாசுரத்தை ஓதுவது மரபு.

உடன்நின்று சடங்கு முறைகளைத் தெரிவிக்கவும்[1] முள்ளில்லாத சுள்ளி விறகுகளைக் கொண்டு ஓமம் வளர்த்துப் பங்குனி நாள் வரை காமதேவனைப் பூசித்து வழிபடுபவர் இக்கன்னியர். இப்பூசனையில் ஊமத்த மலரும் முருக்க மலரும் அருச்சனைக்கு உபயோகப்படுவனவாம். முற்றிய நெற்கதிர், கரும்பு, பாகுகலந்த காப்பரிசி, அவல் இவற்றை கடவுளுக்கு நிவேதனமாகப் படைப்பர். காம தேவனுக்குரிய மகரக் கொடியும், குதிரைகளும், கரும்பு வில்லும் அத்தெய்வத்தின் சந்நிதி முன்பு நிறுத்தப்படும். கவரிவீசும் பெண்கள் இருபுறமும் நின்று சாமரை பரி மாறுவர்.

இந் நோன்புக்காலம் முழுதும் தரையிற் படுத்தலால் மாசு படிந்த மேனியும், நெய்யாடாமையால் உலறிய கூந்தலும், பட்டினி விட்டு உண்ணுவதால் வெளுத்த அதரங்களும் உடையவர்களாய், ஒரு போது உணவே கொண்டு நோற்று வந்தனர், இவ்விளம் பெண்கள். இவையே பழைய முறைகள்.

மேற்கூறியபடி யெல்லாம் நம் ஆண்டாளும் மூன்று மாத காலம் வரை விடாது நோற்றனள். நோற்று வந்த போது, காமதேவன் திருமுன்பு நின்று கொண்டு,

> ''அனங்கதேவா ! உய்யவு மாங்கொலோ என்று சொல்லி
> உன்னையும் உம்பியையும் தொழுதேன்
> ....வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே''
>
> (நாச்சியார் திருமொழி, 1)
>
> ''மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
> வாழகில்லேன் கண்டாய் மன்மதனே''
>
> (ஷை 5)

1. ''விரிநூலந்தணர் விழவுதொடங்க,'' ''முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட'' (பரிபாடல், 2) மார்கழி நோன்பு பற்றிய செய்தி.

"பாற்கடல் வண்ணனுக்கே பணி செய்து
வாழப் பெறுவிடில் நான்
அழுதழுது அலமந்து அம்மா வழங்க[1]
ஆற்றவும் அஃதுனக்கு உறைக்குங் கண்டாய்"
(ஷை 9)

என்றும், பிறபடியாகவும் அவனைப் பிரார்த்தித்துப் பாடிய பாசுரங்களில் இவளது காதற் பெருங்கடல் கரைகடந்து அலையெறிகின்ற தன்மையைக் காணலாம்.

இனி, இக்காம விழாவின் செய்திகள் சில, ஆண்டாள் வாக்கின்படியே, பழைய தமிழ் நூல்களாலும் அறியக் கிடக்கின்றன. சுரமஞ்சரி என்ற நங்கை சீவகனைத் தன் நாயகனாக அடைய வேண்டிக் காமக்கோட்டம் சென்று அங்கே கோயில் கொண்ட மன்மதனை நோக்கி,

"தாமரைச் செங்கண் செவ்வாய்
தமனியக் குழையினாய்! ஓர்
காமம் இங்குடையேன் காளை சீவகன்
அகலம் சேர்த்தின்
மாமணி மகரம், அம்பு, வண்சிலைக்
கரும்பு மான்தேர்
பூமலிமார்ப! ஈவல் ஊரொடும்
பொலிய என்றாள்"

என்று வேண்டினள் என 'சீவகசிந்தாமணி' (2057) கூறுகின்றது. இது, "சுறவ நற்கொடிகளும் துரங்கங் களும் கவரிப் பிணாக்களும்[2] கருப்பு வில்லுங் காட்டித் தந்

1. "அம்மா வழங்கிய யரற்றுதே" என்றார் வாதவூரடிகளும். அம்மா வழங்குதல்—அம்மாவென்று வாய்விட்டுக் கூறுதல்.

2. கவரிப்பிணாக்கள் - சாமரை வீசும் பெண்கள். "திரு விடை மருதாருடையார்க்குக் கவரிப்பிணாக்கள் வேண்டுமென்று, கவரிப்பிணாக்கள் பேர் கல்மேல் வெட்டின படி" என்று அப்பெண் கள் பேருடன் சாஸனம் அமைந்துள்ளமை அறியத்தக்கது. (S. I. I. Vol. 5 – பக். 301)

தேன் கண்டாய் காமதேவா '' (நாச்சியார் திருமொழி—4) என்ற ஆண்டாள் வாக்கோடு ஒத்திருத்தல் நோக்கத் தக்கது. இவ்வாறே, பதுமாபதி என்னும் இராச கன்னிகை மன்மத விழாவில் காமக்கோட்டஞ் சென்று நோன்பு எடுத்ததும், அந்நோன்பு இறுதியில் தானங்கள் அளித்த தும், அதன் பயனாக உதயணன் அவளுக்குக் கணவனாக வாய்த்ததும் ஆகிய செய்திகளைப் 'பெருங்கதை 'யில் காணலாம்.

பெரிய நகரங்களிலெல்லாம் காமனுக்குக் 'கோட்டங் கள்' அல்லது ஆலயங்கள் இருந்தன.[1] அவற்றில் காமனோடு அவன் தம்பியான 'சாமன்' என்பவன் உருவ மும் உண்டு. அவ்விருவரும் இராமலக்ஷ்மணர் போலவும், பலராம கிருஷ்ணர்கள்போலவும் இணைபிரியாதிருந்தவர்கள் என்பர். 'காமனுஞ் சாமனு மென்னுங் காட்சிய' என்றார் சிந்தாமணியாசிரியர்(43). இவருள் காமனைக் கண்ண னுக்கு உருக்குமிணி தேவியிடம் பிறந்த திருமகனாகவும், சாமனை ஜாம்பவதி தேவியிடம் பிறந்த புதல்வனாகவும் சைன நூல்கள் கூறும். பிரிவின்றியிருந்த இவ்விருவரையும் நோக்கி '' உன்னையும் உம்பியையும் தொழுதேன் '' என்று ஆண்டாள் பேசுகிறாள். இதனால், தன்னூரிலிருந்த காமக் கோட்டத்துக்கே சென்று இப்பாடல்களைப் பாடியவளோ என்று தோன்றுகிறது.

பெரிய நகரங்களிலே காமன் திருவிழாத் தொடங்கும் போது, அதனை ஊரார்க்கு முரசறைந்து தெரிவிப்பதுண்டு. அவ்விழா, ஏழு நாள் வரை நடைபெறும்; எட்டாம் நாளில், நோற்ற கன்னியர், தானங்கள் வேண்டுவன வழங்கி விரதத்தை முடிப்பர். இச்செய்திகள் 'பெருங்கதை'யில் பது மாபதி சரித்திரத்தால் வெளியாகின்றன. பங்குனியினிறுதி

1. '' பூமென்கணையும் புரிசிலையும் கைக்கொண்டு, காமன் திரியும் கருவூரா ''—என்பது பழம்பாடல்.

காமன் வெளியேறித் தன் தொழில் நடத்தும் காலமாதலால், அம்மாதத்தின் இடையில் இவ்விழா முடிவு பெறுவது போலும். "காமன் போதரும் காலமென்று பங்குனி நாள் கடை பாரித்தோம்" என்பது ஆண்டாள் வாக்கு. "ஐந்தின் முதலா ஒன்பதின்காறும் ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்" என்பது பிங்கல நிகண்டு. இதனால், ஐந்து முதல் ஒன்பது வரை வயதுள்ள கன்னியர்கள் காம நோன்பு[1] நடத்தி வந்தவர் என்று தெரிகின்றது. ஆயினும், தக்க பருவமெய்திய ஆண்டாளும் இந்நோன்பை மேற்கொண்டிருத்தலால், ஒன்பதிற்கு மேற்பட்ட கன்னியரும் இதனை அனுஷ்டித்தனர் என்றே தோற்றுகிறது.

'தையொரு திங்களும்' என்ற பதிகம் ஆண்டாளுடைய பக்திப் பெருக்கைக் காட்டுகிறது. அது மட்டுமன்று. ஆண்டாள் காலத்தில் பெரு வழக்காய் இருந்த காம நோன்பின் முறையையும் நமக்குச் சித்திரிக்கிறது.

---

1. இந்நோன்பு ஹோளீ, ஹோளகம் என்ற பெயருடன் ஒரு பெரிய பண்டிகையாக வட தேசமெங்கும் பெருவழக்காகக் கொண்டாடப்பட்டுவருகிறது. ஹோளிப் பண்டிகை என்றும் இதனைக் கூறுவதுண்டு. இது பங்குனி மாதம் பௌர்ணமிக்குப் பின் நடைபெறுவது.

3. முடத் தாமக்கண்ணியார்

[வானொலிப் பேச்சு]

முடத் தாமக்கண்ணியார் என்பவர் தமிழ் இலக்கியம் ஆக்கிய சிறந்த கவிகளுள் ஒருவர். இவர் கடைச் சங்க காலத்தில் விளங்கிய ஒரு பெரும்புலவர். மோசியார் என்ற ஒரு கவி இருந்தார். அவர் முடவராய் இருந்ததால் அவரை முடமோசியார் என்று அழைத்தார்கள். அவரைப் போலவே தாமக்கண்ணியார் என்பவரும் முடமாயிருந்த தால் முடத் தாமக்கண்ணியார் என்று பெயர் பெற்ருர் போலும்! தாமக்கண்ணியார் என்பது தலைமேல் வட்ட மாகப் பூமாலையைச் சூடியிருந்த காரணத்தால் இவருக்கு ஏற்பட்ட பெயராக இருக்கலாம். தாமக்கண்ணி என்ற பெயரோடு ஆர் என்பதைச் சேர்த்துத் தாமக்கண்ணியார் என்று இவரை மரியாதையாக அழைத்து வந்ததாகத் தெரிகிறது. தாமக்கண்ணி என்று பெயர் அமைந் திருப்பதைக் கொண்டு, இவரை ஒரு பெண்பால் என்றும் சிலர் கருதுகிருர்கள். இங்கே சொல்லியதைத் தவிர இவரைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

தமிழ் மக்களுக்கு அழியாத ஒரு பெருஞ்செல்வத்தை அளித்துள்ளவர் முடத் தாமக்கண்ணியார். அதுவே '**பொருநராற்றுப் படை**' என்பது. இது ஒரு சங்க கால நூல். பத்துப்பாட்டு என்னும் தொகைநூலிலுள்ள பத்துப்பாட்டுக்களில் இது இரண்டாவது பாட்டு. இதி லிருந்து, விஷயங்களைக் கூர்ந்து நோக்கி அறிந்து, அவைகளைக் கவிகளில் அமைத்துப் பாடும் இவருடைய திறமையை நாம் அறியலாம்.

ஆற்றுப்படை என்பதற்கு வழியில் செலுத்துவது அல்லது வழிகாட்டுவது என்பது பொருள். பொருநர் ஆற்றுப்படை என்பது பொருநனை வழியில் செலுத்துவது என்று பொருள்படும். முற்காலத்தில் கூத்தர் என்ற ஒரு வகுப்பார் இருந்தனர். இவர்கள் தம் குடும்பத்தோடு கும்பல் கும்பலாக ஊர்ஊராகச் சென்று, அங்கேயுள்ள கொடையாளிகளைப் பாடி மகிழ்வித்துப் பரிசில் பெறுவது வழக்கம்.

இவ்வாறு பரிசில் பெற்றுச் செல்லும் ஒரு கூத்தன் வழியில் ஓரிடத்தில் தங்கியிருக்கும்போது, யதேச்சையாக அந்த வழியாக வந்த மற்றொரு கூத்தன் அவனைக் கண்டதாகவும், வந்த கூத்தனின் வறுமை நிலையைக் கண்டு மனமிரங்கிய கூத்தன், 'இன்ன வழியாகச் சென்றால், இன்ன ஊரில் இன்ன கொடையாளியைக் காணலாம். அவனைப் பாடினால் அளவற்ற பரிசில் அளிப்பான். நானும் அவனிடம் பரிசில் பெற்றுத்தான் வருகிறேன்' என்று சொல்லி அவனுக்கு வழிகாட்டிய தாகவும் பாடுவதற்குத்தான் '**ஆற்றுப்படை**' என்று பெயர்.

முடத்தாமக்கண்ணியார் இயற்றிய ஆற்றுப்படைக்குப் பொருநர் ஆற்றுப்படை என்பது பெயர். பொருநர் என்பதற்கு மற்றொருவரைப்போல் வேடம் போட்டுக்கொண்டு கூத்தாடுபவர் என்பது பொருள். இப்படி வேடம் போட்டுக் கொண்டு கூத்தாடுபவரை இப்போதுகூட நாம் காண்கின்றோம் அல்லவா? ஒருவன் வேடம் போட்டுக்கொண்டு ஆடுவான். மற்றொருவன் மத்தளம் வாசிப்பான். இன்னொருவன் தாளம் போடுவான். இவர்கள் இப்படி ஆடிப்பாடி நடிப்பதெல்லாம் யாசகம் பெறுவதற்குத்தான். இதுவே இவர்கள் பிழைப்பும் ஆகும். முற்காலத்திலும் இப்படிப்பட்ட கூத்தர் இருந்தார்கள். அவர்களுக்குப் பொருநர் என்றும் பெயர் உண்டு. இந்தப் பொருநர் **ஏர்க்களம் பாடுவோர், போர்க்**

களம் பாடுவோர், பரணி பாடுவோர் என்று மூன்று வகைப்படுவர். இவர்களுள் போர்க்களம் பாடும் பொருநன் பாடுவதாக அமைத்து, இந்த ஆற்றுப்படையை முடத்தாமக் கண்ணியார் பாடியிருக்கிருர். இந்தப் பொருநன் தடாரிப் பறை என்னும் ஒருவகை வாத்தியத்தைக் கொட்டுபவன். பொருநர்கள் திருவிழா நடக்கும் ஊர்களுக்குப் போய்த் தங்கள் இசைப்புலமையைக் காட்டி யாசகம் பெறுவார்கள். விழா முடிந்ததும் விழா நடக்கும் மற்ருேர் ஊரை நோக்கிப் போவார்கள்.

ஆற்றுப்படை என்பது கூத்தரால் பாடப்பட்ட நூல் என்று நீங்கள் எண்ணிவிடலாகாது. ஒரு கூத்தன் மற்ருெரு கூத்தனுக்கு வழி சொல்லி அனுப்புவதாகக் கவி கற்பனை செய்து பாடும் நூல், இது. இப்படி நூல் இயற்றுவதற்குத் தொல்காப்பியம் என்னும் இலக்கணம் இடம் கொடுக்கிறது. ஆகவே, பொருநர் ஆற்றுப்படை என்பது முடத்தாமக் கண்ணியார் என்பவரால் கற்பனையாக இயற்றப்பட்ட ஓர் இலக்கியம் என்பது நாம் அறிந்து கொள்ளக் கூடியது.

இந்தப் பொருநர் ஆற்றுப்படை ஒரு கற்பனைக் களஞ்சியம். இதில் கூறப்படும் செய்திகளை நீங்கள் சுருக்கமாகத் தெரிந்துகொள்வது அவசியம். தஞ்சாவூர் ஜில்லாவில் **வெண்ணி** என்று ஓர் ஊர் உண்டு. அது தேவாரம் பெற்ற ஒரு பாடல் ஸ்தலம். அதற்கு இப்பொழுது **கோயிலுண்ணி** என்று பெயர் வழங்குகிறது. இந்த ஊருக்குப் பக்கத்தில் ஒரு பெரும்போர் நடந்தது. அப்போரில் **இளஞ்சேட்சென்னி** என்ற சோழனின் புதல்வனை **கரிகாற் பெருவளத்தான்** தன் இளமைப் பருவத்தில் சேர பாண்டியர்களை வென்ருன். அப்போர்க்களத்தை வருணித்தும், அவன் வெற்றியைப் புகழ்ந்தும் சென்ற தனக்கு அவன் உபசாரம்செய்து பரிசில் அளித்ததை விவரித்துச் சொல்லி,

'நீயும் அவனை நாடிப் பரிசில் பெறுவாய்' என்று தூண்டு கிறான் பொருநன். இதன் கதைச் சுருக்கம் இதுதான்.

பொருநன் வழியில் தங்கியிருக்கும் இடம் யானைகள் திரியும் ஒரு பாலைக்காடு. நூல்வலையைப் பந்தலாக இட்டால் எவ்வளவு நிழல் இருக்குமோ, அவ்வளவு அற்ப மான நிழலுள்ள இலையுதிர்ந்த ஓர் ஆச்சாமரத்தின் நிழலில் அவன் மற்றொரு பொருநனைச் சந்திக்கிறான். வந்த பொருநனோடு ஒரு பாடினியும் வந்திருக்கிறாள். அவள் கையில் ஒரு யாழ் இருக்கிறது. அந்த யாழின் பத்தல்—அதாவது குடம், மானின் குளம்பு அழுந்தின இடத்தைப் போல இருக்கிறது. அதை அவள் ஒரு தோலால் மூடி எடுத்துக்கொண்டு நிற்கிறாள். அந்தத் தோலுறை நழுவாமல் இருப்பதற்கு இரண்டு ஆணிகள் உண்டு. அவை வளையில் இருக்கும் நண்டின் கண்களைப் போல இருக்கின்றன. யாழின் நீண்ட தண்டானது பாம்பு பட மெடுத்து நிற்பதுபோல் காணப்படுகிறது. நன்றாகக் குத்தித் தீட்டின தினையரிசியின் நிறத்தை ஒத்திருக்கின்றது அந்த யாழ் நரம்பின் நிறம். யாழானது கலியாணப் பெண்ணைப் போல அழகாக இருக்கிறது என்கிறார் முடத் தாமக் கண்ணியார்! அதைப் பாடினி வாசித்தால் எப்படி இருக்கும் தெரியுமா? அந்த இசையைக் கேட்கும் வழிக் கொள்ளைக்காரர்கள் கூடத் தங்கள் இயற்கையான கொடிய குணம் மாறி, அருள் உண்டாகித் தங்கள் கையிலுள்ள ஆயுதங்கள் தம்மையறியாமலே நழுவி விழ, மெய்ம் மறந்து கேட்டுக்கொண்டே இருப்பார்களாம்.

"ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவுஇன்பாலை"

என்கிறார், முடத்தாமக்கண்ணியார். நரம்புகளைத் தழுவி யும், உருவியும், தெறித்தும், ஒன்றைவிட்டு ஒன்றைத் தெறித்தும் தன் குரலோடு இசைத்துப் பெண் மயில்

போன்ற சாயலையுடைய அந்தப் பாடினி பாடுவாளாம். அந்தப் பாணிக்கு ஏற்பப் பொருநன் தடாரி வாசிப்பானும்.

பெருமைக்கு ஏற்ற செல்வமும், செல்வத்தால் வந்த கீர்த்தியும், வல்லமையோடு பொருந்திய விடாமுயற்சியும், வெற்றி முரசு முழக்கும் பெரும் படையும் உடைய சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரும் ஒரே சபையில் சேர்ந்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்! அதுபோல வாத்தியம், நிருத்தம், கீதம்—அவையாவன கொட்டு, ஆட்டம், பாட்டு—ஆகிய மூன்றும் பொருந்தச் சிறந்த ஓர் இசை விருந்து அளிக்கின்ற பொருநனும் அவன். அவனை **ஏழின் கிழவன்** அதாவது, "ஏழிசைக்கும் உரியவன்" என்று அழைக்கின்றார் முடத் தாமக் கண்ணியார்.

பொருநன் தான் கரிகால் பெருவளத்தானையடைந்து பரிசில் பெற்ற விதத்தைப் பின்வருமாறு கூறுகின்றான் :

"பழுத்த மரத்தைத் தேடிச்செல்லும் வௌவால்போல நான் கரிகால் பெருவளத்தானை நாடியடைந்தேன். காணவேண்டும் என்று ஆவலோடு வந்தவர், தடையில்லாமலும், வாயில்காப்போர் அனுமதி பெறாமலும் நேராக உள்ளே செல்லக்கூடிய கரிகாலன் மதிலுக்குள்ளே போனதும், என் களைப்பு தானாகவே நீங்கிவிட்டது. அதிகாலையில் சுக்கிரன் உதிக்கும் வேளையில் ரூபக தாளத்தில் தடாரியைக் கொட்டி ஒரு பாட்டுப்பாடி முடிப்பதற்குள், அவ்வேந்தன் என்னை அழைப்பித்து, அருளோடு பார்த்து உபசரித்து, என் மனத்தைக் குளிரச் செய்தான் ; ஈரும் பேனும் வாசம்பண்ணும் இடமாயும், வேர்வையால் நனைந்ததாயும், எங்கும் தையல் மயமானதாயும் இருந்த என் அரையாடைக்குப் பதிலாக ஓர் அருமையான ஆடையைத் தந்து உடுக்கச் செய்தான். அரண்மனையில் எனக்குச் சிறந்த விருந்து கிடைத்தது.

வேளை தப்பாமல் விலாப்புடைக்கப் பலநாள் இடைவிடாமல் உண்டதனுல் எனக்கு உணவில் வெறுப்பு ஏற்பட்டு விட்டது; ஊருக்குப் போகவேண்டும் என்ற எண்ணமும் வந்துவிட்டது. விடை கேட்டேன். அவன் பிரிய மனமில்லாமல் விடை கொடுக்கத் தயங்கினுன். அப்பால் யான் மன்ருடி விடைகொள்ளும்போது, எனக்கு வேண்டிய யானைகளையும் யானைக் கன்றுகளையும் கொண்டுபோகும்படி சொல்லிப் பொன்னுபரணம் முதலான பல வரிசைகளுந் தந்து அனுப்பினுன், கரிகாலன்.

நல்ல வேளை வருமளவும் தாய் வயிற்றில் தங்கி யிருந்து, கடலில் உதித்துக் கம்பீரமாகக் கிளம்பும் பால சூரியனைப்போலப் பிறந்ததனுல் அரசுரிமை பெற்றவன், அக்கரிகாலன். பகைவர் அவனைப் பணிந்து ஏவல் செய்வார்கள். வெண்ணிப் போர்க்களத்தில் நெடுஞ் சேரலாதனும் பாண்டியனும் அவனை எதிர்த்துத் தோல்வி யடைந்தார்கள். நீங்கள் அவனையடைந்து உங்கள் வறுமை நிலை தோன்ற நிற்பீர்களானுல், சமீபத்தில் கன்று போட்ட பசுவைப்போல அவன் உங்களிடம் அன்பு கொள்வான். உன் பாடினி யாழை மீட்டி ஓர் இசை பாடுவதற்குள், உங்கள் கந்தையாடையைப் போக்கிப் பட்டாடை வழங்குவான். உண்டியும் உறைவிடமும் தந்து உபசரிப்பான்.''

பரிசில் பெற்றுவந்த பொருநன் தன் எதிரே வந்த பொருநனை நோக்கி இவ்வாறெல்லாம் பரிசில் பெறுவதற் கான உபாயங்களைச் சொல்லியனுப்புவதாக முடத் தாமக் கண்ணியார் மிகவும் அழகாகக் கற்பனை செய்து பாடி யிருக்கிருர். கரிகாற் பெருவளத்தானுடைய வீரம் தியாகம் என்ற இரண்டு அருங்குணங்களையும் யாவரும் அறியச் செய்வதுதான் கவியின் முக்கிய நோக்கம். அதற்கு இப் படி ஒரு துறை வகுத்துக்கொள்வது கவிகளின் வழக்கம்.

யாழின் அமைப்பையும் அதனைப் பாடினி மீட்டி வாசிக்கின்ற பாங்கையும், கொடிய மனமுள்ளவரையும் இளகிய மனமுடையவராக்கும் இசையின் தன்மையையும் முடத்தாமக் கண்ணியார் மிகவும் அழகாகக் கூறியுள்ளார். இதிலிருந்து இவர் ஒரு சங்கீத ரசிகர் என்று தெரிகிறது. இக்காலத்துப் பெண்களைப் போலவே முற்காலப் பெண்களும் நாகரிகமாக உடையணிவதும், முத்துமாலை பொன்னரிமாலை போன்ற ஆபரணங்கள் பூண்பதும் உண்டு என்றும் புலனாகிறது. தேரின் மொட்டு என்னும் உறுப்பு தந்தத்தால் அமைந்து சித்திர வேலைப்பாடுகள் உடையதாக இருக்கும் என்பதால், தந்தத்தால் பதுமை முதலியவை செய்யும் சிற்பத் தொழில் தமிழ் நாட்டிற்கு மிகவும் பழமையானது என்று நாம் அறிகிறோம். குதிரைக்குத் தலையாட்டம் என்னும் ஒருவகை அணி இடப்படும் என்றும், தேர்களில் நான்கு வெண்ணிறக் குதிரைகள் ஒருசேரப் பூட்டப்படுதல் உண்டு என்றும் தெரிகிறது. சரிகைப்பூ வேலைப்பாடமைந்த பட்டாடைகளையும், இழைகளுக்கு இடையே இடைவழி தெரியாதபடி மிக மெல்லியதாக நெய்யப்பெற்ற பருத்தியாடைகளையும் முடத் தாமக்கண்ணியார் பாராட்டிக் கூறுவதால், பழந் தமிழ் நாட்டில் பருத்தி நெசவுமட்டுமல்லாமல், பட்டு நெசவுத் தொழிலும் நன்கு நடைபெற்றுவந்தது என்று நாம் கருதலாம்.

சோழ நாட்டையும் அதனை வளம்படுத்தும் காவிரி யாற்றையும் நம் கவி மனமாரப் போற்றுகின்றார். இதனால் அவரது தேசாபிமானம் நன்கு விளங்குகிறது.

'' சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு கிழவோனே ''

என்று கரிகாற் பெருவளத்தானைப் போற்றுகிறார் நம் கவி.

இதனால் கவியின் ராஜபக்தி நமக்குப் புலனாகிறது. காவிரியின் இருகரையிலுமுள்ள சோலைகளையும், காவிரியின் பாசனத்தால் செம்மாந்து விளைந்து தலைநிமிர்ந்து நிற்கும் நெற்கதிர்களையும், நெல் வயல்களுக்கு இடையே காணப்படும் கரும்புத் தோட்டங்களையும், இவை தரும் கண்கொள்ளாத இன்பக் காட்சிகளையும் கண்டு களிப்பு மேலிட்டுப் பாடியுள்ளார் நமது தாமக் கண்ணியார். அவரது கவனம் குலைகள் நிறைந்த தென்னை மரத்தின் மட்டைமீது உட்கார்ந்துகொண்டு, திரும்பித் திரும்பிப் பார்க்கும் ஆந்தையைக் காண்பதிலும் சென்றிருக்கிறது. 'தண்ணீரும் காவிரியே, தார் வேந்தன் சோழனே, மண்ணாவதும் சோழ மண்டலமே' என்று பாடிய ஔவையின் வாக்கு இங்கே நம் நினைவில் வருகிறது. தமிழ் நாட்டில் விசேஷமாகச் சோழ மண்டலத்தில் இருந்த பலவகை மரங்கள், நறுமண மலர்கள், இசைக் கருவிகள், அவை செய்யப்படுவதற்கு உரிய மரங்கள் முதலான பல செய்திகள் இவர் வாக்கால் நமக்குத் தெரியவருகின்றன. காவிரியின் படித்துறைகளில் மகளிர் இறங்கிக் குடைந்து குடைந்து நீராடுவதையும் தாமக் கண்ணியார் கூறாமல் விடவில்லை. சோழன் கரிகாற் பெருவளத்தானால் ஆதரிக்கப் பெற்ற பெரும் புலவருள் ஒருவரான முடத்தாமக் கண்ணியார் நமக்களித்துள்ள ஓர் இலக்கியம் 'பொருநராற்றுப்படை'. அது ஒரு கற்பனைக் களஞ்சியம்.

4. பரணர்

[வானொலிப் பேச்சு]

கடைச்சங்க காலத்தில், அதாவது சுமார் 1800 ஆண்டுகளுக்குமுன் பேரும் புகழும் உடையவராக வாழ்ந்திருந்த பண்டைய தமிழ்க் கவிகளுள் பரணரும் ஒருவர். **கபிலர், மாமூலனார், நக்கீரர்** என்பவர்களும் பரணரைப்போலவே கீர்த்தியுடன் விளங்கினர். ஆயினும் ஏனைய புலவர்களிடம் மிகவும் அருமையாகக் காணப்படும் தன்மை ஒன்று, இவரிடம் சிறப்பாகக் காணப்படுகின்றது. அதாவது, இவர் தம் காலத்தில் வாழ்ந்த தமிழ் நாட்டுச் சிற்றரசர் பேரரசர்களால் நன்கு மதிக்கப்பெற்று வந்தவர் என்பதே. சங்க நூல்களிலுள்ள பரணர் பாட்டுக்களை வாசித்தால் இந்த உண்மை விளங்கும். அவற்றால், இவர் தம் வாழ்நாளெல்லாம் அரசர் பெருமக்களுடன் பழகியே கழித்தவர் என்று அறியலாம். பிற்காலத்து நூல்களான இரண்டு திருவிளையாடற் புராணங்களும், கடம்பவன புராணமும் இவரை மிகவும் உயர்த்திக் கூறுகின்றன. ஹாலாஸ்ய மகாத்மியம் '' பரணோபி கவிஸ்ரேஷ்ட:'' என்று இவரைப் புகழ்ந்து கூறுகின்றது. ஆகவும் கெடவும் பாடல்தரும் கவிகளுள் பரணரும் ஒருவர் என்று யாப்பருங் கலவிருத்தி என்னும் இலக்கண நூல் சொல்லுகிறது. இதனால் இவர் தெய்வத்தன்மையுள்ள ரிஷிகளைப் போல மதிக்கப்பெற்றவர் என்று அறியலாம்.

பரணருடைய குலம், பெற்றோர் பெயர், இளமைப் பருவம், கல்விப்பயிற்சி, சமயநிலை, தொழில் முதலிய விவரங்களை அறிவதற்கு ஆதாரமான செய்திகள் அதிகம் இல்லை. இவர் பாணர் குடியிற்பிறந்து பெரும்புகழ்

பெற்றிருந்ததால், அக்குடிப்பெயரே இவருக்குச் சிறப்புப் பெயராக வழங்கி, அப்பெயர் பிற்காலத்தில் பரணர் என்று திரிந்து வழங்கியிருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். சங்கப் புலவருள் ஒருவரான ஔவையார் இவர் பெயரைப் பரணர் என்றே எங்கும் குறிப்பிடுவதால், இது சற்றும் பொருந்தாது. இவர் ஒரு பெரும்புலவராகி அரசர் பெருமக்களால் மதிக்கப் பெற்றிருந்தவராதலால், இளமைப் பருவத்தில் தக்க ஆசிரியரை அடுத்துக் கல்விப்பயிற்சி பெற்றிருத்தல் கூடும்.

பரணர் பாடியுள்ள "நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்" என்ற அகநானூற்றுப் பாடலின் அடியை ஆதாரமாகக் கொண்டும், திருத்தொண்டர் புராணசாரம், திருவந்தாதி முதலான பிற்காலத்துச் சைவ நூல்களைக் கொண்டும் இவரைச் சைவ சமயத்தவர் என்று சிலர் கூறுகின்றனர். இவர் வாழ்ந்திருந்த காலத்தில் தமிழ் நாட்டில் சைவ வைணவ சமயங்கள் நாயன்மார்கள் காலத்தைப் போல பிரபலம் அடைந்திருக்கவில்லை. சங்க காலத்துப் புலவர்களாக அறியப்படும் சுமார் 500 பேரும் சிவ பெருமானைப் பற்றிப் பாடிய பாடல்கள் இல்லை. இயற்கையில் இறைவன் அருளைக் கண்டு வியந்து போற்றுவதே அக்காலத்துப் புலவர் வழக்கம். ஆகையால், பரணர் எல்லாம்வல்ல இறைவன் ஒருவன் உண்டு என்ற பொது நோக்குடையவர் என்றே நாம் கருதலாம்.

பரணர் பாடியுள்ள செய்யுட்களின் இலக்கணங்களைப் பார்த்தால், இவர் தொல்காப்பியர் காலத்துக்குப் பிற்பட்டவர் என்று சொல்ல இடமேற்படுகிறது. திட்டமாகக் கூற முடியாவிட்டாலும், இவர் கி. பி. முதல் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர் என்று கூறுவது பொருந்தும்.

பரணர் பிறந்த ஊர், வாழ்ந்த இடம்—இவைகளைப் பற்றித் திட்டமாக அறிய முடியவில்லை. பதிற்றுப்பத்து

என்னும் நூலில் வரும் இவர் பாடல்களிலிருந்து, இவர் சேர நாட்டில் தம் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித் திருக்கலாம் என்று தோன்றுகிறது. இவர் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்தவர் ; சேர வேந்தரையும், சோழ மன்னரை யும் வள்ளல் பலரையும் அடைந்து, அவர்களைப் பாடியிருக் கிறார். கடல் பிறக்கோட்டிய வேல்கெழு குட்டுவனைப் பாடி **உம்பற்காடு** என்னும் அவனுடைய நாட்டின் ஒரு பகுதியி னுடைய வருவாயைப் பரிசிலாகப் பெற்றவர் இவர். அச் சேர வேந்தன் தன் மகனை **குட்டுவஞ் சேரல்** என்பவனைக் குருகுலவாசம் செய்யும்படி இவரிடம் விட்டிருந் தான் என்றும் தெரிகிறது.

வையாவிக் கோப் பெரும்பேகன் என்பவனை இவர் பாடிய புறப்பாட்டிலிருந்து, இவர் மிகவும் வறுமையுடையவ ராக இருந்தார் என்றும், அவன் பெருஞ்செல்வம் அளிக்க, அந்த வறுமை நீங்கப் பெற்றார் என்றும் தெரிகிறது. இந்தப் பேகனை இவர் பாடியுள்ள மற்றொரு பாட்டில் '' பசித்தும் வாரேம் பாரமும் இலமே '' என்கிறார். இதிலிருந்து இவர் மிக்க செல்வம் உடையவராய் இருந்தார் என்றாவது, அல்லது குடும்ப பாரமே இல்லாதவராய் இருந்தார் என்றாவது கொள்ள வேண்டியிருக்கிறது.

பரணரைப் போன்ற பண்டைய கவிகள் இயற்கைப் பொருள்களின் தன்மையை ஊன்றிப் பார்த்து அறிந்து, அவற்றை அமைத்துப் பாடல்கள் இயற்றுவது வழக்கம். இவர் தமிழ் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று, ஆங்காங்கேயுள்ள மலைகள், ஆறுகள், காடுகள் முதலிய வற்றின் இயற்கை யழகைக் கண்டு இன்புற்றுப் பாடி யிருக்கிறார். அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த மன்னர்கள், சிற்றரசர்கள், கொடையாளிகள் ஆகியவர்களின் குண திசயம், போர்த்திறமை, கொடை, அறிவு முதலிய நல்ல இயல்புகளை நேரில் அறிந்து பாடல் இயற்றியிருக்கிறார்.

இந்த விஷயத்தில் முதல் இடம் பெறத்தக்கவர் பரணர். பழந்தமிழ் நாட்டில் இவர் செல்லாத நாடும், காணுத காட்சியும் இல்லை என்றே சொல்லலாம்.

மற்றப் புலவர்களால் பாடுவதற்கு முடியாத அரிய செய்திகளை நல்ல அமைப்புக் கொடுத்து அழகாகப் பாடும் ஆற்றல் இவருக்குண்டு. அதியமானஞ்சி என்ற தலைவன் மலையமானுடைய திருக்கோவலூரை அழித்து வெற்றி பெற்ற சிறப்பை ஒளவையார் பாடும்போது, ''பரணரைப் போலப் போர்ச் செயலையும் வெற்றியையும் பாடும் திறமை எனக்கில்லையே'' என்று கூறுவதிலிருந்து, ஒளவையார் பரணரது பாடும் திறமையை எவ்வளவு மதித்திருந்தார் என்பது விளங்கும்.

அரசர்களுக்குள் பகை ஏற்பட்டுப் போர் நேர்ந்தால், அவர்களைச் சமரசப்படுத்துவதற்கு முன்வரும் இயல்பு இவருக்குச் சிறப்பாக உண்டு. இவரிடம் தேசாபிமானம் குடிகொண்டிருந்தது. தமது நாட்டிற்குத் தீங்கு நேர்வதா யிருந்தால், அதைத் தடுக்கப் பாடுபடுவது இவரது குணு திசயங்களுள் ஒன்று. வீரர் குடிகளை இவர் பெரிதும் மதித்து வந்தவர். வேந்தர் ஒழுங்கு தவறி நடந்தால், இடித்துக் கூறி அவர்களை நல்வழிப் படுத்துவதில் இவர் சற்றும் தயங்கமாட்டார். பேகன் தன் மனைவியை வெறுத் திருந்தபோது, அவன் மனம் உருகி நல்வழிப் படுமாறு பாடியவர் இவர்.

சங்கப்புலவருள் மற்றவரிடம் காணப்படாத மற்ருெரு தனிப்பெருமை பரணருக்கு உண்டு. இவர் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்து, பற்பல வரலாறுகளை நேரில் அறிந்தவர். ஆகையால், தம் பாடல் களில் ஏதேனும் ஒரு சரித்திர நிகழ்ச்சியைக் கூருமல் செல்வதில்லை. இதனுல் இவர் பாடல்கள் பண்டைத் தமிழ் நாட்டின் சரித்திர ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாய்

இருக்கின்றன. இவரைச் சங்கப் புலவருள் சரித்திர ஆசிரியர் என்று சொல்வதில் தடையில்லை. இனி, இவர் வாயிலாக நாம் அறியும் சரித்திர நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கவனிப்போம்.

பரிசில் பெறுவதையே கருத்தாகக் கொண்டு, கொடையாளிகளை யடைந்து, இல்லாததும் ஒல்லாததும் சொல்லிப் பாடும் தன்மையைப் பரணரிடம் காணவே முடியாது. தமக்கு எது வந்தாலும் சரி, நற்குணம் இல்லாதவரைக் கண்டித்து உபதேசம் செய்வதிலும், தமக்கு உண்மை என்று உறுதியாகத் தெரிந்த விஷயங்களை அஞ்சாமல் கூறுவதிலும், நிகழ்ச்சிகளைத் தாம் நேரில் கண்டவாறு எடுத்துரைப்பதிலும் இவர் பின்வாங்கியதே கிடையாது.

இவர் காலத்தில் தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டியராகிய முடியுடை மூவேந்தரும் அரசு புரிந்துவந்தனர். இவர்களுக்கு அடங்கியும் சுயேச்சையாகவும் சிறு சிறு நாடுகளையாண்ட சிற்றரசரும் இருந்தார்கள். இவர்களுக்குள் அடிக்கடி போர் நடப்பதுண்டு. தவிர, தமிழ் நாட்டுப் பெருவேந்தர் வடநாட்டிற்குப் படையெடுத்துச் சென்று ஆரிய வேந்தரோடு அமர் செய்து, வெற்றி பெற்றுத் தம் கொடியை இமயமலையில் நாட்டியதுண்டு. இவையெல்லாம் பரணர்தம் பாடல்களில் குறிப்பிடும் போர்ச் செய்திகளாகும்.

சோழன் கரிகாலனுக்குத் தந்தையான **உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி** என்பவன் பரணரால் பாடப் பெற்றவருள் ஒருவன். இவனுடைய போர்க்களத்தை இவர் மிகவும் அழகாகப் பாடியுள்ள செய்யுள் ஒன்று புறநானூற்றில் உண்டு. சோழன் வேல்பஃறடக்கைப் பெருவிரல் கிள்ளியும், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் போர் புரிந்து, அக்களத்தில் இருவருமே மாண்டு வீழ்ந்த நிலையைக் கண்டு பரணர் மிகவும் இரங்கிப் பாடியிருக்கிறார். இவரால் பாடப்பெற்ற சேரருள், சேரமான்

கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் முக்கியமானவன். இவன் போரில் வெற்றி பெற்றுப் போர்க்களத்தில் கம்பீரமாக வீற்றிருந்தபோது, பரணர் அங்கே சென்று இவனைக் கண்டு, இவன் வெற்றியைப் பாராட்டிய பாடல் ஒன்றுண்டு. இச்சேரன் மேற்கடலில் ஒரு நிலப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்களையும், அந்நாட்டு அரசனையும் எதிர்த்து வென்றதைப் பரணர் பலமுறை எடுத்துப் பாராட்டுகிறார். இப்பாட்டிலிருந்து இச்சேர வேந்தனே தமிழரசருள் முதன் முதலாகக் கடற்படையால் வெற்றி பெற்றவன் என்று தெரிகிறது. இவன் ஏழு அரசர்களை வென்றதற்கு அடையாளமாக அவர்கள் முடிகளை மாலையாக அணிந்திருந்தான் என்பதை "எழுமுடி மார்பின் எய்திய சேரல்" எனப் பாராட்டுகிறார்.

சேரன் செங்குட்டுவனைப்பற்றிய செய்திகள் பல இவரால் தெரிகின்றன. அவன் தன் பாசறையில் பலநாள் தங்கியிருந்து சேனாதிபதிகளோடு பகைவெல்லும் சூழ்ச்சியை ஆராய்தல், அவன் வல்லமையைக் கண்டு அஞ்சிய மன்னர்கள் அவனோடு உறவாடி வாழ்ந்தமை, வணங்கா முடிமன்னனான இச்சேரன் தன்னைப் பாடிவரும் புலவரை மட்டும் வணங்குதல்—ஆகிய செய்திகள் பரணரால் நாம் அறிகின்றவையாகும்.

செங்குட்டுவனுக்கு நண்பனாக அறுகை என்ற சிற்றரசன் ஒருவன் இருந்தான். இந்த அறுகைக்கும் மோகூர் மன்னனான பழையன் என்பவனுக்கும் போர் மூண்டது. மோகூர் மன்னன் தனக்குப் படைத்துணை புரியும்படி செங்குட்டுவனை வேண்டினான். செங்குட்டுவன் அதற்கு இணங்காமல் அறுகைக்கு உதவி புரிந்து, பழயனைத் தோற்கடித்து, அவன் காவல் மரமாகிய வேம்பை வெட்டி எடுத்துச் சென்று முரசு செய்தான் என்று பரணர் தம் பதிற்றுப்பத்துப் பாடலிற் கூறுகிறார்.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனான வையாவிக்

கோப் பெரும்பேகன் என்பவன் பரணரால் பாடப்பெற்ற மற்ருேர் அரசன். இவன் கார்காலத்தில் ஒருநாள் வெளியே சென்று உலாவிவரும்போது, ஓரிடத்தில் மேகத்தைக் கண்ட மோகத்தால் தன் தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்த ஒரு மயிலைக் கண்டான். கண்டதும், தன் இயல்பான இளகிய மனத்தால் "இது குளிர் பொறுக்காமல் நடுங்குகிறது" என்று வருந்தித் தனது போர்வையை அதன்மேல் போர்த்தினுன். கொடையினுல் பெரும் புகழ் பெற்றிருந்த இவனைப் பாடிப் பரணர் தாமும் பெருஞ் செல்வம் பெற்றதாகக் கூறுகிருர்.

சோழன் கரிகாலனையும் பரணர் பாடியுள்ளார். கரிகாலன் மிக்க பராக்கிரமசாலி; பல போர்களில் வெற்றி பெற்றவன். வெண்ணிவாயில் என்னுமிடத்தில் பல வேந்தரும், வேளிர் என்னும் சிற்றரசர் பதினெருவரும் கூடி இவனை எதிர்த்துப் புரிந்த போரில், இவன் அவர்களை வென்று விளங்கியதை நம் புலவர் பெரிதும் கொண்டாடுகிருர். மற்ெருரு சமயம் **வாகைப் பறந்தலை** என்னுமிடத்தில் இவன் தன்னை எதிர்த்த ஒன்பது அரசர்களை வென்ருன் என்பது பரணர் பாடலால் அறியப்படுகிறது.

பரணர் காலத்தில் ஆடலில் வல்லவனுன **ஆட்டன் அத்தி** என்பான் ஒருவன் இருந்தான். அவனைக் காவிரிப் பெருக்கு அடித்துச் சென்றுவிட்டது என்றும், அவன் மனைவியான **ஆதிமந்தி** அழுது புலம்பிப் பல இடங்களிலும் சென்று தேடியும் காணுது, முடிவில் மருதி என்பவள் உதவியால் அவனைக் கண்டாள் என்றும் பரணர் கூறுகிருர்.

நன்னன் உதியன் என்ற ஒரு தலைவனுடைய வரலாறும் பரணரால் கூறப்படுகிறது. இந்த நன்னன் **புன்ஞடு** என்ற ஒரு சிறு நாட்டின்மீது படையெடுத்ததற்காக **ஆய் எயினன்** என்பவனுக்கும் இவனுக்கும் பகை

மூண்டது. இப் பகை காரணமாக நன்னனுக்கு நண்பனுன மிஞிலி என்பவன் ஆய் எயினனோடு போர்செய்து அவனைக் கொன்றான். அப்பொழுது சத்தியந் தவறாதவனுன அந்த எயினன் உடலின்மீது வெயில் படாதபடி பறவைகள் மறைத்துப் பறந்து திரிந்தன! எயினன் கொலைக்குக் காரணமான நன்னனைக் குடிமக்கள் பழித்தனர். இப்பழிக்கஞ்சி நன்னன் பகலில் வெளியே செல்லாது கோயிலினுள்ளே ஒளிந்திருந்து, இரவில் வெளிவந்து உலவினான். இவனைப் பகலில் வெளிப்படாத கூகை என்று பரணர் பழித்துப் பாடியுள்ளார்.

இந்த நன்னன் பெண் கொலை புரிந்தவன் என்று பரணரால் மட்டுமன்றி மற்றப் புலவர்களாலும் பழித்துப் பாடப்பட்ட வரலாறு ஒன்று உண்டு. நன்னன் தோட்டத்திலிருந்து மாங்காய் ஒன்று விழுந்து ஆற்று வெள்ளத்தில் மிதந்து சென்றதாம். நீராடச் சென்ற பெண் ஒருத்தி அதை எடுத்துத் தின்றுவிட்டாளாம். இக்குற்றத்திற்காக அவள் பெற்றோரும் உறவினரும் 81 யானைகளும், அவள் நிறையளவு பொன்னால் செய்த பதுமையும் அபராதமாகக் கொடுப்பதாகச் சொல்லி மன்றாடி வேண்டினார்கள். நன்னன் மறுத்து அவளைக் கொன்றே தீர்த்தான். இவ் வரலாற்றைக் குறுந்தொகைப் பாட்டொன்றில் பரணர் கூறி இவனைப் பழிக்கிறார்.

இவ்வாறு பரணர் நமக்குக் கூறும் சரித்திரங்கள் பல. சங்க இலக்கியங்களில் உள்ள பரணர் பாட்டுக்களை நெடுக ஊன்றி வாசித்துக்கொண்டேபோனால், இவரது கவி நயமும், வரலாறு கூறும் வகையும், இயற்கை வருணனைகளும், நீதி புகட்டும் முறையும், பரந்த நோக்கமும், தெளிந்த அறிவும் தூய வாழ்க்கையும் பிறவும் நன்கு விளங்கும்.

5. திருமங்கை மன்னன்

திருமால் சமயம்

வடவேங்கடம், தென்குமரி ஆகிய எல்லையுட்பட்ட தமிழகத்தில் தொன்று தொட்டு வழங்கிவரும் சமயங்களுள் திருமால் சமயமும் ஒன்றாகும். பூமிக்கு 'நானிலம்' என்னும் பெயரைத் தமிழர் வழங்கிய காலத்திலிருந்தே திருமால் வணக்கமும் தமிழகத்தில் வழக்காறுடையதாயிருந்தது. ஆசிரியர் தொல்காப்பியனார் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலங்களை, அவைகளுக்குரிய தெய்வங்களுடன் தெரிவிக்கும் இடத்து "மாயோன் மேய காடுறை யுலகமும்".[1] எனக் கூறியுள்ளார். இதனால் தொல்காப்பியனாருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழகத்தில் திருமால் வழிபாடு வழக்கில் இருந்தது என அறியலாம். திருமாலுக்குக் கோயில்களும் அக்காலமுதலே இருந்தன. அக்கோயில்களையும் அவைகளுக்கு மானியமாக விடப்பட்ட நிலங்களையும் அரசர் தாமே கண்காணித்து வந்தனர்.

காடும் காடுசார்ந்த இடமுமாகிய நிலம் முல்லை எனப்படும். இந்நிலத்திற்குரிய மக்கள் ஆயர்[2] எனப்படுவர். திருமால் இவர்களது தெய்வமாகக் கொள்ளப் பெற்ற போதிலும் இவர்கள் பெரிதும் உரிமையுடன் வழிபட்டு வந்தது கண்ணபிரானைத்தான். 'ஆயர் குலத்துத் தோன்றும் அணி விளக்கு' என ஆன்றோரால் போற்றப் பெற்றமையே அப்பிரானை இவர்கள் தம் கடவுளாகக்

---

1. தொல் பொருள் அகத். 5
2. ,, ,, 21

கொண்டதற்குத் தக்க சான்றாகும். கண்ணபிரான் சரிதம் பற்றிய வரலாறுகள் தமிழ் நாடெங்கும் பெருவழக்குப் பெற்றிருந்தன. அவற்றுள், அப்பிரான் ஆயர்குல மகளான நப்பின்னை என்பாளை 'ஏறு கோடல்' என்ற விதிப்படி, ஏவப்பெற்ற ஏழு எருதுகளையும் அடர்த்து மணம் புரிந்து கொண்ட சரிதம் மிகவும் பிரபலமாக வழங்கிவந்தது. இதனை இளங்கோவடிகளும்[1] சாத்தனாரும்[2] குறிப்பிடுதல் காணலாம்.

இவ்வாறு தொன்மையும் பெருமையும் பெற்றிருந்த திருமால் வணக்கத்திற்கு உரிய கோயில்களும் நிலவின. இவற்றுள் மிகவும் பழமையானவை திருவரங்கம், திருவேங் கடம், திருமாலிருஞ்சோலை, திருவெஃகா முதலியனவாகும். சிறப்பாக முல்லை நிலத்தில் வழங்கிய திருமால் வணக்கம், நாளடைவில் ஏனைய நிலங்களிலும் பரவலாயிற்று. காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் கண்ணபிரானுக் குக் கோயில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.[3]

திருமாலடியார்கள்

திருமால் வழிபாடு பரவிய காலத்தில், அதனை வளர்த்த அடியார்கள் **பாகவதர்** எனவும், **பகவர்** எனவும் பெயர் பெற்றிருந்தனர். இவர்களுள் இல்லறத்தில் ஒழுகியவர் **அடியார்** என்றும், துறவறம் பூண்டிருந்தோர் **பகவர்** என்றும் அழைக்கப்பட்டனர். சேர சோழ பாண்டியரான முடிமன்னர் மூவருள், **செல்வக் கடுங்கோ வாழியாதன்**[4] என்ற சேர வேந்தனும், **கோச் செங்கணான்**[5] என்ற

1. சிலப்-ஆய்ச்சியர் குரவை
2. மணிமேகலை - 19, 65-6
3. சிலப்–5, 171-2 14, 8-9
4. பதிற்றுப்பத்து - 7-ம் பத்து - பதிகம்.
5. பெரிய திருமொழி 6, 6, 1.

சோழவரசனும், **இளம் பெரு வழுதி**[1] என்ற பாண்டிய மன்னனும் திருமால் பக்தியில் சிறந்திருந்த வேந்தர்களாவர். இதுவரை கூறிய செய்திகளால் திருமால் சமயம் சங்க காலத்திலேயே தமிழகமெங்கும் பரவியிருந்தது என்பதை அறியலாம்.

சங்க காலத்திற்குப்பின், அதாவது ஏறக்குறைய ஆறும் நூற்றுண்டு முதல் இத்திருமால் வணக்கம் வைதிகக் கொள்கைகளைத் தழுவி வளரத் தொடங்கிற்று. இக்கால முதல் திருமால் சமயம் பெருகி வளருவதற்குக் காரணமாயிருந்தவர் **ஆழ்வார்கள்** எனப் பெற்ற அடியார்களேயாவர்.

திருமாலின் குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டவராதலின் இவர்கள் ஆழ்வார்கள் என்று அழைக்கப்பெற்றனர். இவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் என்னும் பதின்மராவர். இவர்களோடு ஆண்டாள், மதுரகவியாழ்வார் ஆகிய இருவரையும் சேர்த்துப் பன்னிருவராக கூறுவதும் உண்டு. இவர்கள் யாவரும் சங்ககாலத்திற்குப் பின்னரும் பத்தாம் நூற்றுண்டிற்கு முன்னரும் தோன்றி விளங்கியவராவர். இவர்களுள் ஒருவர் நாம் இங்கே கூற முன்வந்த திருமங்கை மன்னன்.

வாழ்க்கைக் குறிப்புக்கள்

ஆழ்வார்களுள் கடைசியாகத் தோன்றியவர் திருமங்கை மன்னன். அதுபற்றியே இவர் **கடைக்குட்டி** என்று அழைக்கப்படுகிருர். இவர் சோழநாட்டிலுள்ள ஆலி

1. பரிபாடல் 15.

நாட்டுக் குறுநில மன்னராக இருந்தவர். **நீலன்** என்பது இவரது பிள்ளைத் திருநாமம். **திருமங்கை, குறையல்** என்பவை இவரது தலைநகரங்களாகும். கள்ளர் குலத் தோன்றலாகிய இவரிடம் பெரியதொரு படை இருந்தது. இவர் யானைப் படையைத் தாமே தலைமை பூண்டு நடத்துவார் ; குதிரை வீரராகவும், வாளெடுத்துப் போர் புரிவதில் வல்லவராகவும் விளங்கினர். தமது தலைமைக்கு ஏற்ற செல்வமும், அச்செல்வத்திற்கு அழகான வள்ளன்மையும் உடையவர் இவர். தமிழ்ப் புலமையும் கவிபாடுந் திறமையும் இவரிடம் இணங்கிப் பொருந்தியிருந்தன. பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பவை இவர் இயற்றியுள்ள நூல்களாகும்.

மற்ற அரசர்களைப் போலவே இவரும் இளமையில் வேட்டை முதலான அரசர்க்குரிய செயல்களில் மிகவும் விருப்பங் கொண்டிருந்தார் ; தமது படைவலியால் அரசர் பலர்க்கு உதவி புரிந்துவந்தார். திருமால் பக்தியிற் சிறந்த குடியில் தோன்றிய இவர், **குமுதவல்லி** என்பாளை மணந்து இல்லறம் நடத்திப் பல மக்களைப்பெற்று வாழ்ந்து, பின் திருமால் பக்தியில் மனம் ஊன்றி ஈடுபட்டவர் ; அப்பால், அப்பெருமான் அருள்பெற்று, இல்லற வாழ்வில் பற்றுநீங்கி, திருமால் கோயில்கொண்டுள்ள பல திருப்பதிகளுக்கும் சென்று வழிபட்டு, பதிகங்கள் பாடியவர்.

இவரது வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல்கள் உளவேனும், இவரது வாக்கில் எழுந்த பாடல்களினின்றும் அநேக செய்திகள் தெரியவருகின்றன. ஆலிநாடர் எனப் பெற்ற இவர் கலிகன்றி, கலியன், பரகாலன் என்னும் காரணப் பெயர்கள் தமக்கு வழங்கியதாகக் கூறுகின்றார்.

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் நாடெங்கும் பரவும்படி செய்வதிலும், திருப்பணிசெய்து திருக்கோயில்களைச் சீர் திருத்தம் புரிவதிலும் இவர் ஈடுபட்டிருந்தவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குறுங்குடி என்னும் ஊரில் தம் இறுதி நாளைக் கழித்துத் தமது நூற்றைந்தாம் ஆண்டில் அங்கேயே இறைவனடி சேர்ந்தார் என்று கூறப்படுகின்றது.

கால ஆராய்ச்சி

இவர் விளங்கிய கால நிலை இன்னது என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர் பலர். அவர்கள் இவரது வாக்கையே ஆதாரமாகக் கொண்டு தம் ஆராய்ச்சிகளை நடத்தினார்கள். 'ஆழ்வார்கள் கால நிலை'[1] என்னும் நூலில் இவரது காலம் இன்னதாகவேண்டும் என்பது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அந்நூலாசிரியர் வரைந்துள்ள மற்றொரு கட்டுரையிலும்[2] இது தெளிவாக்கப் பட்டுள்ளது. இவற்றால், திருமங்கை மன்னன் வாழ்ந்திருந்த காலம் பல்லவ வேந்தனான **முதல் பரமேசுவர வர்மன்** காலம் (கி. பி. 675) முதல் **பல்லவ மல்லன்** காலம் (கி. பி. 770) வரை என்பது நன்கு விளங்குகிறது.

காலநிலை பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்ட ஆசிரியரவர்கள் கூறியுள்ளவைகளை விளக்குவது என் கருத்தன்று. இந்த ஆழ்வார் பல்லவ மல்லன்கீழ் ஒரு சிற்றரசராக இருந்தவர் என்ற முடிவில் சிறிதும் ஐயம் ஏற்பட இடமில்லை. இதற்கு இலக்கிய வாயிலாகவும் ஆழ்வார் வாக்கினின்றும் கிடைக்கும் சான்றுகள் பல உள்ளன. ஆயினும் இக்கொள்கை அக்காலத்திய சாஸன

1. ஸ்ரீ. மு. இராகவையங்கார் எழுதியது—பக். 84—153.
2. Dr. S. Krishnaswami Iyengar Commemoration Volume—பக். 201—211.

மூலமாகவும் நிலை நாட்டப்படுமானால் அசையாத வலியுறும் என்று யான் அடிக்கடி நினைத்து வந்தது உண்டு.

ஒருகால், பழைய 'செந்தமிழ்' இதழ்களை யான் பார்த்துக்கொண்டே வந்தபோது, என் உள்ளத்தைக் கவரக்கூடிய சாஸன ஆதாரம் ஒன்றைக் காண நேர்ந்தது. அதனை இங்கே சிறிது விவரிக்க விரும்புகின்றேன்.

பட்டத்தான் மங்கலத் தாமிரப் பட்டயங்களே[1] அச்சாஸனமாகும். ஐந்து செப்பேடுகள் கொண்ட அப் பட்டயம் திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் அரசாங்கத் தாருக்கு அகப்பட்டது. அப்பட்டயத்தின் முற்பகுதி வட மொழியிலும் பிற்பகுதி தமிழிலும் அமைந்தது. **கோவி ஜய நந்தி விக்கிரமனுடைய** 61-வது ஆண்டில் **மங்கல நாடாள்வான்** என்பவரது விண்ணப்பத்தாலும், ஆலப் பாக்க விசய நல்லூரான் என்பவரது ஆணத்தியாலும் அரசன் உத்திரவு பெற்றுச் சோழ நாட்டுத் தென்கரை ஆர்வலிக் கூற்றத்து[2] **நல்கூர்** என்ற ஊரில் அரசாங்கத் துக்கு உரிமையாயிருந்த 16 வேலி நிலங்களை அவ்வூர்ப் பார்ப்பனச் சிட்டர் பலருக்கு அந்த மங்கல நாடாள்வான் தானமாகக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுவது இச் செப்பேடு. இப்பல்லவ அரசனை 'இரணிய வர்மன் புத்ரன் கோவிஜயநந்தி விக்ரமவர்மன்' என்று அச்சாஸனம் கூறுவதாலும், இவனது 61-ம் ஆண்டில் இச்சாஸனம் அமைந்திருத்தலாலும் இவன் இரண்டாம் நந்திவர்மப் பல்லவனே என்பது தெளிவு.

இச்செப்பேட்டின் முற்பகுதி வடமொழிச் சுலோகங்

1. செந்தமிழ் தொகுதி 23—பக். 193.

2. தென்கரை என்பது காவிரியின் தெற்கு. 'ஆர்வலிக் கூற்றம்' திருத்துறைப்பூண்டி தாலூகாவில் இருக்கிறது. இப் பொழுது 'ஆரிவலம்' என்று வழங்கப்படுகிறது. (செந்தமிழ்—தொகுதி 23—பக். 197—அடிக்குறிப்பு.)

கள் பதினைன்று கொண்டது. இவற்றுள் முதலிரண்டு சுலோகங்களின் பொருள் பின்வருமாறு :—

"கடல் நீரைக் குடிக்கவரும் காரின் மின்னலோ இவ்வுருவெனச் சொல்லும்படி பல கைகளோடு மரகத வண்ணமாய் மார்பில் கௌத்துபத்தின் ஒளி விளங்கப் பாற்கடலிற் பள்ளிகொண்ட திருமகள் கேள்வனை திரு மால் உங்களுக்கு மங்களத்தை அருளட்டும்."

"மோட்சத்திற்குச் சாதனமாகவும், அசையாப் பொரு ளாகவும், யோகிகளின் தியானப் பொருளாகவும்..........., பேதமற்றதாயினும் முக்குண வசத்தால் காத்தல், அழித்தல், ஆக்கல் என்ற தொழில்களைச் செய்வதற்காகப் பேதத்தை யடைந்ததாயும் எங்கும் நிறைந்ததாயும் உள்ள பரம்பொருள் உங்களைக் காக்கட்டும்."

இதனால், இச்சாசனம் நிறுவிய மங்கல நாடாள்வான் அல்லது மங்களராஜன் சிறந்த திருமால் பக்தன் என்பது தெளிவாகும். மற்ற ஒன்பது சுலோகங்களும் பிரமன் முதல் இரணியவர்மன் என்ற பல்லவ அரசன் வரையுள்ள பல்லவ வேந்தர்களையும், அவன் மகன் நந்திவர்ம பல்லவ மல்லனது பெருமைகளையும் கூறி, அத்தகைய பேரரசின் கீழ் அவன் தொண்டனுகவும் சிற்றரசனுகவும் இருந்த இந்த மங்கல நாடாள்வானைப்பற்றி வருணிக்கின்றன. அவற்றின் மொழிபெயர்ப்பு வருமாறு :—

"இத்தகையவன் நந்திவர்மனுக்குத் தொண்டன், உத்தமன், தவத்திற்கும் குணத்திற்கும் இருப்பிடமானவன், வீரன், பெருந்தகையோன், பெரியோரால் மதிக்கப் பெற்றவன், தன் மானத்தையே தனக்குச் செல்வமாகப் படைத்தவன், எல்லாத் திக்குகளிலும் நிறைந்த புகழுடைய வன், தன் அரசனுக்கு அறிவித்துவிட்டுப் பார்ப்பனருக்கு வேண்டியவற்றைக் கொடுத்தவன். இத்தகையோன் மங்கள ராஜ்யத்தின் அதிபதியாயிருந்தான். பல்லவனது

தொண்டனை இந்த மங்கள ராஜ்ய அரசனது இந்த வாக்கானது நிலம், நீர், சந்திர சூரியர் உள்ளளவும் நடப்பதாக. ''

இதில் இச்சிற்றரசனைப் பற்றிக் கூறப்பட்டுள்ள குண விசேடங்களும் பிறசெய்திகளும் நாம் கூர்ந்து ஆராயத் தக்கவை. மங்கல ராஜ்யம், மங்கல நாடு என்று சாஸனங் களில் கூறப்படும் பெயர்களிலிருந்து, இவர் நாட்டுக்கு 'மங்கலம்' என்பது பெயர் என்பது நன்கு விளங்கும். இந்நாட்டின் பெயர் மங்கலம் என்ற தலைநகரடியாக வழங்கி யிருத்தல் கூடியதே. இந்நாட்டோடு தென்கரை ஆர்வலிக் கூற்றம் என்ற பகுதியையும் சாஸனம் குறிப்பிடுகிறது. மங்கல நாட்டில் இக்கூற்றம் அடங்கியதாக வேண்டும்.

'மங்கலம்' என்பது 'மங்கை' என மருவி வழங்கு வதைத் தமிழறிஞர் நன்கு அறிவர். வரகுண மங்கலம், சீவர மங்கலம் என்பன வரகுண மங்கை, சீவர மங்கை என வழங்குதல் காணலாம். 'இம் மங்கலம் அல்லது மங்கை நாடானது திருமங்கை மன்னனுக்குரிய ஆலி நாட்டை அடுத்துள்ளது; விலகியது அன்று. இவ்வா றுயின், 'மங்கல நாடாள்வான்' என்ற பெயருடன் 'திருமங்கையாழ்வார்' என்பதனை நாம் ஒப்பிட்டு நோக்கல் தகும். இவ்விரு பெயர்களையும் உடையவரின் குண விசேடங்களாகச் சாஸனமும் பெரிய திருமொழியும் கூறு வன பலவும் பெரிதும் ஒத்திருத்தலும் குறிப்பிடத் தக்கது.

'' வாட்டிறற்றானை மங்கையர் தலைவன் ''
'' கற்றார் பரவும் மங்கையர் கோன் ''
'' பொய்ம்மொழி யொன்றில்லாத மெய்ம்மையாளன் ''
'' அருள்மாரி, '' '' மானவேற் கலியன் ''
'' பாரணிந்த தொல்புகழான் கலியன் ''
'' அலைநீ ருலகுக் கருளே புரியும் காரார் புயற்கை கலிகன்றி ''

என்னும் திருமங்கை மன்னன் திருவாக்குகளும் மேற்

கூறிய சாஸன விசேடங்களும் பெரிதும் ஒப்புமை யுடையனவாதல் காணலாம். 'கலியன்' என்ற சொல் 'படைவீரன்' என்ற பொருளில் வழங்குவதாகும். "மான வர் வீரர் கலியர் தானைத் தறுகணாளர் பெயரே" என்பது திவாகரம். அருள்மாரி எனப் பெயர் கொண்ட திரு மங்கை மன்னனைப் போலவே முதல் பராந்தக சோழ னுடைய சேனாதிபதியொருவன் **அருள் தீதி கலியன்** என்று பெயர் பெற்றிருத்தல் அறியத்தகும். 'கலி' என்பது 'வீரம்' என்ற பொருளிலும் வரும். (கலி கன்றி—வீரத்தில் முதிர்ந்தோன்) கலியன் என்பதனையே 'வீர:' என்று சாஸனம் சிறப்பித்ததாக வேண்டும். ஆழ்வார் தம்மைப்பற்றிக் கூறும் பிறவிசேடணங்கள் பலவும் சாஸனத்திற்கண்ட மங்கல ராஜனது விசேடணங் களோடு மிகவும் ஒத்துள்ளமை நோக்கத்தக்கது.

பல்லவர் கீழ்ச் சிற்றரசர் என்று சாஸனம் இவரைக் குறிப்பிடுகிறது. இவர் தம் இளமை முழுதும் அரசர் பொருட்டே உழைத்துக் காலங்கழித்தவர் என்பது,

> "தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்
> பெரியே னாயினபின் பிறர்க்கே யுழைத்து ஏழையானேன்"
> (பெரிய திருமொழி, 1, 9, 7)

என்று தம் முதுமைக் காலத்தில் இரங்கிப் பாடுவதாலும் அறியத்தகும். இளமையில் அரசரிடம் படைத் தொண்டில் ஈடுபட்டிருந்தவர் ஆழ்வார் என்பது பதிக இறுதிகளில் இவர் தம்மைப்பற்றிக் கூறும் வீரச் சிறப்புக்களால் அறியப்படும். திருமால் பக்தியிற் சிறந்தவராதலால் இச் சாஸனத்தின் முதலிலுள்ள தெய்வ வணக்கங்கள் அத்திருமாலைப் பற்றியனவாகவே சிறந்து விளங்கு கின்றன. மேற்கூறியவற்றையெல்லாம் தொகுத்து ஒப்பு நோக்குமிடத்துச் சாஸனம் கூறும் மங்கல நாடாள்வானும்

திருமங்கையாழ்வாரும் ஒருவரேயாகலாம் என்ற சிந்தனை யில் நம்மை ஆழச் செய்யத் தடையில்லை.

ஆலிநாடு, மங்கைநாடு, மங்கை, குறையலூர் என்ற நாடு நகரங்கள் பரம்பரையாக இவர் ஆட்சிக்கு உட்பட்டவை என்றும், தமக்கு இறைவன் அளித்த இப்பரம்பரைச் செல்வத்தை,

'' வெந்திறல் களிறும் வேலைவா யமுதும்
விண்ணொடு விண்ணவர்க் கரசும்
இந்திரற் கருளி எமக்கும் ஈந்தரும்
எந்தையெம் மடிகளெம் பெருமான் ''
(பெரிய திருமொழி, 1, 4, 7)

என்று இவர் வியந்து பாராட்டலாயினர் என்றும் கொள் ளத்தகும்.

மேற்கூறியவற்றிலிருந்து பட்டத்தான் மங்கலத் தாமிர சாஸனப் பட்டயங்கள் பல்லவ மல்லன் ஆணை பெற்று, திருமங்கை மன்னன் தாமே வரைவித்தவை என்று கருத ஏதுக்கள் பலவும் காணப்படுதல் தெளியலாம்[1].

1. இப்பொருள் பற்றிய விளக்கமான எனது கட்டுரை '' செந்தமிழ் '' தொகுதி 45 பகுதி 3-ல் வெளிவந்துள்ளது.

6. ஆயிரத்தில் ஒருவன்

தமிழ் இலக்கியங்களில் போற்றியுரைக்கப்படும் உயரிய குணங்களுள் சிறந்தவை வீரமும் ஈகையுமாகும். இவை இரண்டையும் வாழ்க்கையின் இருகண்களாகத் தமிழர் கருதி வந்தவராவர். இவ்விரு குணங்களாலும் தம் புகழை நிறுவிய சான்றோர் வரலாறுகள் பல உண்டு. அவை கற்பார் மனத்தை உருக்கிப் பரவசமாக்கும் பெற்றிவாய்ந்தவை. இவ்விரு ஆன்ற குணங்களுள் முன்னது இன்றியமையாத காலங்களிலே மாந்தரிடத்துத் தோன்றுவதாகும். பின்னதோ, பிறர் துன்பங்கண்டுழி என்றும் இளகிய மனமுடையார் எவர்மாட்டும் உண்டாகத் தக்க உள்ள நெகிழ்ச்சியின் செயலாகத் திகழ்வது. தமிழர் ஈகையினை எவ்வாறு போற்றி வந்தனர் என்பது,

> '' சாதலின் இன்னாத தில்லை ; இனிததூஉம்
> ஈதல் இயையாக் கடை ''

என்ற மறைமொழியால் நன்கு விளங்கும். ஈகை யென்னும் பேரறத்தினால் ஈட்டுதற்குரியது புகழேயாகும். இதுபற்றியே வள்ளுவனாரும் ' ஈகை ' என்ற அதிகாரத்தை யடுத்துப் ' புகழ் ' என்ற அதிகாரத்தை யமைத்து,

> '' ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
> ஊதியம் இல்லை உயிர்க்கு ''

என்றனர். உரையாசிரியராகிய பரிமேலகரும் ' இது (புகழ்) பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன் பின் வைக்கப்பட்டது ' என்றார்.

தாம்பெற்ற செல்வத்தினைச் சிறைப்படுத்தாமல், தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு ஈதல் என்னும் அருங்குணம் பரந்த நோக்கமும் கனிந்த உள்ளமும் உடைய சிலரிடமே அமைவதாகும். இத்தகைய ஈகைக் குணம் மாந்தர் பசிப்பிணியை நீக்கிவந்ததுடன் கலை களையும் வளர்த்து வந்திருக்கிறது. ஈகையின் பயனை எய்தினோரது உள்ளத்திலே சுரந்த நன்றியறிவானது, பாடல்களின் உருக்கொண்டு நமது இலக்கியங்களில் ஆங்காங்கே மிளிர்கின்றன.

ஈகையென்னும் இன்குணத்தால் புகழ் நிறுவிய கடையெழுவள்ளல்களின் வரலாறுகளேயன்றிப் பிற் காலத்தே விளங்கிய கொடைவள்ளல்கள் சரிதங்கள் பல உள. அவற்றுள், இங்கு யாம் கூறப்புகுந்த சோழ நாட்டுத் தருமதேவதை என்று போற்றப்பெற்ற **சடையப்ப வள்ளலின்** சரிதமும் ஒன்றாகும்.

சடையப்ப வள்ளலார் சோழநாட்டிலுள்ள திரு வெண்ணெய்நல்லூரிலே தோன்றி விளங்கியவர். இவரது தந்தையின் பெயர் **சங்கரவள்ளல்** என்பது. இவர்கள் வமிசத்தினர் கடற்கரைப் பட்டினமாகிய புதுவை (புதுச்சேரி)யில் கப்பல் வாணிகம் நடத்தி வந்தனர். மற்றும் பல்லாயிரம் ஏர்வைத்து உழுவித்துண்ணும் செல்வ வளமும் இவர்களுக்கு வாய்த்திருந்தது. நம் வள்ளல் பெருந்தகைக்குச் **சடையன், சரராமன், கண்ணன், திரிகர்த்தராயன்** என்னும் பெயர்களும் வழங்கி வந்தன. அவற்றுள் சடையன் என்பது இவரது குலப் பெயராகும். சரராமன் என்பது இவர்க்கு இடுகுறியான் அமைந்த பெயர் என்பர். இவ்வள்ளல் தம்மை நாடிவந்த பல்லோர்க்குக் கண்போன்று உண்டியும் பரிசிலும் பரிவுடனளித்துக் காத்து வந்ததால், **கண்ணன்** என்று அழைக்கப்பெற்றார். ஒருகால் மூவேந்தரையும் அழைத்துச்

சிறப்பாக விருந்தளித்த காலத்து இவர்க்குத் திரிகர்த்த ராயன் என்ற பெயர் அன்னோரால் வழங்கப்பெற்றது.

இவ்வள்ளலை, 'ஆயிரத்தில் ஒருவர்' என்று கருதினர் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர். இவர் தமிழ் நாட்டிலே தோன்றியது அந்நாட்டின் தவப்பயனே என்று கூறத் தடையில்லை. இவர் தோன்றியிராவிடின் கம்பர் என்ற கவி திலகரைத் தமிழகம் அவரது தகுதிக்குத் தக்க அளவிலே பயன்படுத்திக் கொண்டிராது எனலாம். கம்பராமாயணம் நமக்குக் கிடைப்பதற்கு ஏவுதற் கருத்தாவாயிருந்தவர் இவரேயாவர். தம்போன்ற இன்கவிப் புலவர்களைச் சடையப்ப வள்ளல் எங்ஙனம் ஆதரித்தனர் என்பதைக் கம்பநாடர்,

"ஆன்பாலும் தேனு மரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும்போ தல்லால் இனி"

எனத் தம்முள்ளத்தே ஊறியெழுந்த நன்றியறிவினால் பாராட்டியுள்ளார்.

அணைத்தூட்டும் தாயையும், ஆதரித்து வளர்க்கும் தந்தையையும் இளம்பிராயத்திலேயே இழந்து, அனாதையாய்த் தமது வீட்டுவாயிலில் கம்பத்தைப் பற்றி நின்ற வண்ணம் வள்ளலின் வதனத்தைக் காண ஆவலுடனிருந்த கம்பரைச் சடையப்பர் கண்டார். கண்டதும் இரங்கி, அவரது ஆதரவற்ற நிலையை உசாவியறிந்து தமது இல்லத்திலேயே தமது குமாரருக்குத் தூக்குத் தூக்கியாக அமர்த்திக் கொண்டார். ஆயினும், கம்பரிடம் பொருந்தியிருந்த அறிவு வளம் கண்டு, அவர் கல்விபயில்வதற்கு ஏற்பாடு செய்தார். கல்வியில் கம்பர் பெரியவராகி வரவரத் தூக்குத்

தூக்கி வேலை நீங்கிற்று. வள்ளல் கம்பரைத் தமக்கு ஒப்பான நிலையில் வைத்துப் போற்றி வந்தார். அவரா லேயே கம்பருக்குக் குலோத்துங்க சோழமன்னர் அவைப் புலவராக விளங்கும் பதவி கிடைத்தது. இராமகதையைத் தமிழில் இயற்றுமாறு குலோத்துங்க சோழரைக்கொண்டு தூண்டியவரும் இவ்வள்ளலாரேயாவார்.

கம்பர் இராமாயணத்தைப்பாடி முடித்தபின், அதைத் திருவரங்கத்திலே அரங்கேற்றும்போது, அக்கதையில் நூறு பாட்டுக்கு ஒருபாட்டு வீதம் வள்ளலாரின் பெயரையும் அவரது ஈகைக் குணத்தையும் பாராட்டியிருப்பது கண்ட வைணவ அறிஞர்கள் 'படிகொண்ட சீர்த்தி இராமாயண மென்னும் பக்திவெள்ளம் குடிகொண்ட' இக்கதையில் அடிக்கடி நரஸ்துதி வருகின்றதே என்று தடைகூறலாயி னர். கம்பர், சடையப்ப வள்ளலாரிடம் தமக்குள்ள கடப் பாட்டை எடுத்து விண்ணப்பிக்க, அந்த வைணவ அறிஞர் கள், 'ஆயின், ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடலில் சடையன் பெயர் வரலாம்' என்று பணித்தார்கள். கவி திலகர் 'இதுவும் நன்றே. சரராமன் நூறில் ஒருவர் அல்லர். ஆயிரத்தில் ஒருவரே யாவார்!' எனக்கொண்டு மனந்தேறி அவ்வாறே அமைக்கலானுர். ஆயினும் அனை தையான தம்மைக் கவியரசராக்கிய வள்ளல் பெருந் தகைக்கு எவ்வாறு நன்றி காட்டுவது என்பதில் கம்பருக்கு ஒரு முடிவும் ஏற்பட்டிலது. எனினும், இராமபிரானுக்கு முடிசூட்டிய நிகழ்ச்சியைக் கூறும் ஓர் அழகிய செய்யுளில் கம்பர்,

"அரியணை அனுமன் தாங்க,
அங்கதன் உடைவாள் வாங்கப்,
பரதன்வெண் கவிகை யேந்த,
இருவரும் கவரி பற்ற,

விரைசெறி குழலி யோங்க,
வெண்ணெய்மன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி''

என்னும் செய்யுளில் வள்ளலின் முன்னோருள் ஒருவரை இராமாயண காலத்தில் அயோத்தியில் அரண்மனைக் கருவூலக் காப்பாளராக்கி, அவர் தம் கையால் முடியை எடுத்துத் தர, வசிட்டமாமுனிவர் அதை வாங்கி இராமபிரானுக்குப் புனைந்தார் என்று கூறி, தமது நன்றியைத் தலைக்கட்டுகிற அழகு யாவரும் உணர்ந்து இன்புறத் தக்கது.

சடையப்ப வள்ளலின் கொடைப் பயனைக் கம்பர் போன்ற கவிஞரேயன்றி, வேற்று நாட்டினரான வேந்தரும் பெற்ற செய்திகள் உண்டு. அதனால் இந்த வள்ளலின் கீர்த்தி தமிழ்நாட்டில் மட்டுமேயன்றி வெளிநாடுகளிலும் விளங்குவதாயிற்று. 'அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர் கொடுத்தார் எனப்படுஞ் சொல்' என்பது முதுமொழியன்றோ?

சடையப்ப வள்ளலின் ஆதரவில் கவலையற்று உண்டு வாழ்ந்திருந்த கவிஞர் ஒருவர் நாடுகாணும்பொருட்டு ஈழ நாட்டை யடைந்தார். அவர் அந்நாட்டின் ஒரு பகுதியாகிய கண்டி நாட்டை எய்தி, அங்குச் செங்கோல் செலுத்தி வந்த பரராச சிங்கன் என்னும் மன்னனைக் கண்டார். அச்சமயம் அந் நாடெங்கும் வற்கடம் சூழ்ந்திருந்தது. தமிழறிஞனை அவ்வேந்தன் புலவரை வரவேற்று உபசரித்தான். பஞ்சத்தால் மாந்தர் பலர் பட்டினிகிடக்க நேர்ந்திருப்பதையும், பலர் மரித்து வருவதையும் அவ்வரசன் வாயிலாகப் புலவர் அறிந்தார். உடனே அவர் அவனைத் தேற்றிச் சோழ நாட்டின் உண்டி வளத்தையும், அங்கு அறத்தை வளர்த்து வந்த வள்ளலாரின் கொடைத்திறத்தை

யும் எடுத்துரைத்து, வள்ளலின் உதவியை நாடும்படி அவனைத் தூண்டினர். குடியோம்பிக் கோலோச்சுங் கடப்பாடுடையவனுன அவ்வேந்தனும் அதற்கிசைந்து நம் வள்ளலுக்கு ஒரு செய்யுள் எழுதி விடுத்தனன். அச்செய்யுள் வருமாறு :—

'' இரவு நண்பக லாகி லென்? பகல்
இருளரா விரவாகிலென் ?
இரவி யெண்டிசை மாறிலென்? கடல்
ஏழு மேறிலென்? வற்றிலென்?
மரபு தங்கிய முறைமை பேணிய
மன்ன போகிலென்? ஆகிலென்?
வளமை இன்புறு சோழ மண்டல
வாழ்க்கை காரண மாகவே.
கருது செம்பொனின் அம்பலத்திலொர்
கடவுள் நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலே யொரு
கருணை மாமுகில் துயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையம்பதி
தங்கு மானிய சேகரன்
சங்கரன்தரு சடைய னென்ருெரு
தரும தேவதை வாழவே.''

—பெருந்தொகை 1135

'வளப்பம் மிகுந்த சோழநாட்டில் வாழும் பேறு ஒருவருக்கு வாய்க்குமாயின், இரவு நண்பகலாக மாறினு லென்ன? பகலின்றி இரவாகவே இருப்பினும் என்ன? சூரியன் எந்தத் திசையில் உதித்து எங்கே மறைந்தால்தான் என்ன? ஏழு கடல்களும் பொங்கிவரினும், அன்றி வற்றி வறண்டே போயினும் என்ன? குடிகளைக் காக்கும் நன் மரபிலுதித்த வேந்தர் வாழ்ந்தாலும் என்ன? தாழ்ந்தாலு மென்ன?' என்பது இச்செய்யுள் முற்பகுதியின் பொருள்.

இவ்வித இறுமாப்புக்குக் காரணமாவது யாது என்பதை அச்செய்யுளின் பிற்பகுதி விளக்குகின்றது. அது 'அந் நாட்டில் யாவரும் கருதி வழிபடும் பொன்னம்பலத்தில் ஒரு கடவுள் நின்று நடிக்கின்றது. மேலும் காவிரியின் நடுவிலேயுள்ள திருவரங்கத்தில் கருணையே வடிவெடுத்த காளமேகம் துயில்கின்றது. மற்றும் மரங்கள் வானளாவி வளர்ந்துள்ள புதுவையில் மன்னிவாழும் தலைவனும் சங்கரவள்ளல் புதல்வனுமான சடையன் என்ற ஒரு தரும தேவதை வாழ்கின்றது,' என்பதாகும்.

இப்பாடலில், சோழநாட்டில் வாழும்பேறு ஒருவருக்கு வாய்ப்பின், அவர் வயிறார உண்டு வாழ வழியுண்டு என்பது முற்பகுதியின் கருத்து. பின், அந்நாட்டின் ஏற்றத்திற்குச் சைவ வைணவ சமயங்களுக்குத் தாயகமான இரண்டு ஸ்தலங்களும் சோழநாட்டின்கண் அமைந்திருத் தலின் சிறப்பு உணர்த்தப்பட்டது. முடிவில் சோழநாட்டின் தனிச் சிறப்பிற்கு அடிப்படையாயுள்ளது 'தரும தேவதை யின் வாழ்வு' ஒன்றே என்று சொல்லப்பட்டுள்ளது. அத்தரும தேவதையும் சடையப்ப வள்ளலே யாவார் என்று கூறி, சோழநாட்டிற்குச் சிறப்பினை ஈட்டித் தந்தவர் 'செல்வத்தின் பயனே ஈதல்' என்ற வாக்கை மெய்ப்பித்த நம் வள்ளலே யாவார் என்பதை நிலைநாட்டுகின்றது இச் செய்யுள். மேலும் 'கருது செம்பொனின் அம்பலத்தில் **நடிப்பவனை**யும், காவிரித்திரு நதியில் **துயில்கின்றவனை**யும் நம்பாதேயுங்கள்; புதுவைச் சடையனுரே காப்பவர் அவரை அடைந்தவருக்குக் குறையில்லை' என்ற தொனிப் பொருளும் அமையச் சமத்காரமாகக் கூறியுள்ளது அறிந்து இன்புறத்தக்கது.

இந்த அரிய பாடலைக் கண்டிராஜன் எழுதி வள்ளலுக்கு அனுப்பியதும், 'ஈதல் இயலாத விடத்து இறத்தல் இன்பந் தருவது' என்பதைக் கடைப்பிடியாகக் கொண்ட அவ்வள்

ளல் ஆயிரம் மரக்கலங்களில் நெல் மூட்டைகளை ஏற்றி விடுத்து ‘வான் பொய்ப்பினும் தான் பொய்யாத’ காவிரி நாட்டின் வளத்தையும், தம் கொடைத்திறத்தையும் நிலை நாட்டித் ‘தருமதேவதை’ என்ற பெயருக்கு உரியவரானார். சுண்டிநாடும் பஞ்சம் நீங்கி உயர்ந்தது. ‘இறைத்த கிணறு ஊறும்’ என்பதற்கு ஏற்ப வள்ளலுக்கும் செல்வம் வளர்ந்து கொண்டேயிருந்தது. இத்தகைய சடையப்ப வள்ளலை **ஆயிரத்தில் ஒருவன்** என்றார் கவியரசர். கோடியில் ஒருவர் என்று சொல்லியிருக்கலாம் என்று நமக்குத் தோன்றுகிறது, இக்கால நிலையை நோக்குமிடத்து!

7. நானிலப் பாகுபாடு

தமிழர் தரைநூலறிவு

தரை நூல் வல்லாரும் புதை பொருளாராய்ச்சியாளரும் தமது ஆராய்ச்சியின் வாயிலாக உலகில் முதன் முதலாக மாந்தர் தோன்றிய இடம் தமிழகமே என்று உணர்த்தியுள்ளனர்.[1] 'தமிழகம்' என்னும் நிலத்தின் பெயரும் ' தமிழர் ' என்னும் மக்கள் பெயரும் மிகத் தொன்மை வாய்ந்தவை ; தமிழ் என்னும் மொழியினடியாக உண்டானவை.[2] தமிழர் பண்டைக் காலத்தில் பூமிக்கு வழங்கிய பெயர் ' நானிலம் ' என்பது. இப்பெயரினின்றே தமிழர் தரை நூலுணர்ச்சி உடையராயிருந்தனர் என்பது புலனாகும். நிலத்தின் இயற்கையமைப்பு, விளை பொருள்கள், மக்களின் தொழில், பழக்க வழக்கங்கள், ஒழுக்க முறை, வாழ்க்கை, வழிபாட்டு முறைகள் போன்றவையாவும் இலக்கண வாயிலாகக் கூறப்படுவதினின்றும் அவர்களது தரை நூலறிவு புலனாகும்.

நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும் ஆகிய எல்லையிடைப் பட்ட நிலம் ' தமிழகம் ' எனப்படும். இந்த எல்லைக்குள் அமைந்து கிடந்த நிலத்தை இயற்கையமைப்பினை அடிப்படையாகக் கொண்டு குறிஞ்சி, முல்லை,

---

1. ஸ்ரீ. P. T. ஸ்ரீநிவாச ஐயங்கார் எழுதியுள்ள "The Stone Age of India" பக். 3; ஸ்ரீ. V. R. இராமசந்திர தீக்ஷிதர் எழுதியுள்ள "Origin and spread of the Tamils" பக். 1. பக். 55, 56—அடிக் குறிப்பு.

2. மகாவித்வான் ரா. இராகவையங்கார் எழுதிய "தமிழ் வரலாறு" பக். 4—22.

மருதம், நெய்தல் என நான்காகப் பிரித்து, ஒவ்வொன்றைப் பற்றியும் பலவகைச் செய்திகளையும் முறைப்படுத்தி வகுத்துரைப்பாராயினர் ஆன்றோர்.

தொல்காப்பினர்,

'' மாயோன் மேய காடுறை யுலகமும்,
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்''

என்று இந்த நானிலப் பாகுபாட்டை அந்தந்த நிலத்திற்குரிய தெய்வத்தோடு உரைத்தல் காணலாம்.

மிகத் தொன்மையான ஒரு காலத்தில் தென் குமரிக்கும் தெற்கே வெகுதூரம் அமைந்திருந்த பெருநிலப் பரப்பிலும் தமிழர் வாழ்ந்திருந்தனர் என்றும், கடல் கோளினால் அந்நிலப்பகுதி யழிந்துவிட, தமிழர் வாழிடம் குமரியையே தன் தென்னெல்லையாகக் கொள்ள நேர்ந்தது என்றும் கூறுவதுண்டு. இக்கொள்கையை மேனாட்டு அறிஞர் சிலரும் ஏற்றுக் கொள்கின்றனர். கால்டுவெல் துரை மகனார் கொள்கை 'தமிழ் மக்கள் இமயமலைக்கு வடக்கிலுள்ள குளிர்ந்த நாடுகளிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறியவர்' என்பதாம். இக்கொள்கையை ஆதரிப்பவரும் உளர். ''தமிழர் தமிழ் நாட்டிற்குப் புதியவரல்லர். அங்கேயே தோன்றி வாழ்ந்தவரேயாவர்'' என்பதுதான் பெரும்பான்மையான தமிழறிஞரின் துணிபாகும்.

இத்தகைய தொன்மையுடைய தமிழர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமக்கென்று படைத்துக் கொண்ட வாழ்க்கை முறை ஒன்று உண்டு. நிலப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டெழுந்த இந்த வாழ்க்கை முறையை மிக அழகாக எடுத்துரைப்பது தொல்காப்பியம். அதிலுள்ள செய்திகளை நோக்குமிடத்து, தமிழர்

அகப்புற ஒழுக்கங்களாகப் படைத்திருந்த தனி நாகரிகம் நனி சிறந்தது என்பதும், வேறெந்த நாட்டினரின் நாகரி கத்துக்கும் அது பின்னடையாதது, பிற்பட்டதுமாகாது என்பதும் நன்கு விளங்கும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலப் பாகுபாடுபற்றி இனிச் சில கூறுவோம். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். குறிஞ்சி என்னும் மரம் இந்நிலத்திற்குச் சிறந்ததாதலால் இப்பெயர் வந்தது என்பர். காடுகளும் அவற்றைச் சார்ந்த இடமும் முல்லை நிலமாகும். இந்நிலத்தில் சிறப்புடையதாகக் கொள்ளப்பட்டது முல்லைக்கொடியாதலால் இப்பெயர் வழங்கலாயிற்று என்பர். வயலும் வயலைச் சார்ந்த வெளி களும் மருதம் எனப்பட்டது. மருதமரம் இந்நிலத்திற்குச் சிறந்ததாதலால் இப்பெயர் வழங்கலாயிற்று. கடலும் கடற் சார்பான இடமும் நெய்தல் நிலமாகும். நெய்தல் என்ற கொடி இந்நிலத்திற்கு உரியதாதல்பற்றி இப்பெயர் அமைந்தது. இத்தகைய பாகுபாட்டை ஆதாரமாகக் கொண்டு மக்கள் வாழ்க்கைத் திறங்கள் இலக்கண வாயிலாக நன்கு வரையறுக்கப்படுகின்றன.

குறிஞ்சி

இந்நிலப்பகுதி இயற்கை எழில் மிக்கது. இங்கு வாழ்ந்த பழந்தமிழ்க் குடிமக்களில் ஆடவர் **குன்றவர்**, **குறவர்** எனப் பெயர் பெற்றனர். மகளிர் **குறத்தியர்** ஆவர். மலைச்சார்பான இடங்களில் விளையத் தக்க மலைநெல், தினை ஆகியவற்றைப் பயிர் செய்தும், தேனழித்தும் கிழங்கெடுத்தும் வேட்டையாடியும் இவர்கள் வாழ்ந்துவந்தார்கள். இந்த மலைநிலத்திலே, அகில் தேக்கு வேங்கை முதலான மரங்கள் வானளாவி வளர்ந்து நிற்கும். கரடி, புலி, சிங்கம், யானைபோன்ற விலங்கு

களும், மயில் கிளி ஆகிய பறவைகளும் இங்கு வாழ்வன வாம். காந்தள், வேங்கை, சுனைக்குவளை முதலிய மலர்கள் இந்நிலமெங்கும் பூத்துக் காட்சி வழங்கும். மலைவீழ் அருவிகளும் சுனைநீரும் இந்நிலத்திற்கு நீரை அளிப்பன. மலைச்சாரலில் மாண்புடன் விளங்கிய சிறுகுடியில் இந்நிலமக்கள் இல்லம் அமைத்துக்கொண்டு வாழ்ந்துவந்தனர். குறிஞ்சி நிலத் தலைவனுக்குச் **சிலம்பன், வெற்பன், பொருப்பன்** என்னும் பெயர்கள் வழங்கின. இந்நிலத்திற்கு உரிய தெய்வம் **முருகன்** ஆவான். 'முருகு' என்னும் பெயர் அழகு என்னும் பொருளது. இயற்கையழகு குடிகொண்ட இந்நிலத்தில் வாழ்ந்தோர் அழகனை முருகனை வழிபட்டுவந்தனர். தொண்டகம் என்னும் சிறு பறையும், வெறியாட்டு அயர்தலாகிய விழாவும் இந்நிலத்திற்கு உரியவை. இந்நிலத்திலே தாம் கண்ட இன்பக் காட்சிகளைப் புலவர்கள் விவரிக்கும் திறம் சங்கநூல்களிலே காணத்தக்கது.

முல்லை

வளமான காடுகள் பசுமைக் காட்சி வழங்கும் முல்லை நிலத்திலே வாழ்ந்த பழந்தமிழ்க் குடிகள் ஆயர் எனப்படுவர். **குறும்பொறைநாடன்** இந் நிலத்துத் தலைவன் ஆவான். **ஆயர், இடையர்** என ஆடவரும், **ஆய்ச்சியர், இடைச்சியர்** என மகளிரும் அழைக்கப் பெற்றனர். இவர்கள் இந்நிலத்தில் வரகு சாமை முதலிய பயிர்களை விளைத்துவந்தனர். கொன்றை, காயா, குருந்தம் முதலியன இந்நிலத்தில் வளமுற வளரும் மரங்களாம். முல்லைப் பூவும் தோன்றிமலரும் இந்நிலத்தே நறுமணம் வீசும். கானக்கோழியும் மானினங்களும் முயல்களும் இந்நிலத்தில் களித்துத் திரியும் உயிரினங்களாம். பொங்கு புனலுடன் ஓடும் கான்யாறுகள் இந்நிலத்திற்கு நீர்வளம்

உதவும். "கான்யாற்று அடைகரை ஊர் இனிது" அன்றோ? பாடி, சேரி எனப் பெயர்கொண்ட வாழிடங்களில் இந்நிலத்தவர் வீடுகளமைத்துச் சீருடன் வாழ்ந்தனர். ஆநிரைகளை ஓம்புதல் இவர்களது சிறந்த தொழிலாகும். 'ஏறுதழுவுதல்' என்பது இவர்கள் மேற்கொண்டிருந்த விளையாட்டு என்பர். குழலூதியும் முல்லையாழில் சாதாரிப்பண்ணை இசைத்துப் பாடியும் இவர்கள் இன்புறுவர். மாயோனாகிய கண்ணனை இவர்கள் வழிப்பட்டு வந்தனர். 'செங்கண்மால்' எனப் பரிபாடலும்,[1]

"அங்கண் முல்லையின் தெய்வமென் றருந்தமி ழுரைக்கும்
செங்கண் மால்".[2]

என்று திருத்தொண்டர் புராணமும் கூறுதல் காண்க. ஆயர்பாடியில் ஒளித்து வளர்ந்த கண்ணபிரான் அந்நில மக்களிடையே வாழ்ந்து தம் குழலிசையால் அவர்களை வசமாக்கிய சரிதங்கள் தமிழ் இலக்கியங்களில் பெருவழக்குடையன.

"சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண்கோடச் செய்யவாய் கொப்பளிப்ப
குறுவெயர்ப் புருவங் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்துசூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங் கிச்செவி யாட்டகில்லாவே."

"கருங்கண் தோகை மயிற் பீலியணிந்து
கட்டிநன் குடுத்த பீதகவாடை
அருங்கல வுருவி னாயர்பெருமான்
அவனொரு வன்குழ லூதின போது

1. 3—81, 82
2. திருக்குறிப்புத் தொண்டர் புராணம்—18.

மரங்கள் நின்றுமது தாரைகைகள் பாயும்
மலர்கள் வீழும்வளர் கொம்புகள் தாழும்
இறங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற
பக்கநோக்கி அவை செய்யும் குணமே !''[1]

என்று முல்லை நிலத்திலே கண்ணன் குழலூதி நிலைத்திணை இயங்கு திணைப்பொருள்கள் அனைத்தையும் ஈடுபடுத்தியதைப் பெரியாழ்வார் பெருமிதந் தோன்றப் பாடியுள்ளார்.

'' ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையில் பற்றுமிளங் கன்றினமும்
தானுணர்வு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாம் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய.''

'' ஆடுமயில் இனங்களுமங் கசைவயர்ந்து மருங்கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமொடு புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந்தொழுகும்
கூடியவன் கோவலரும் குறைவினையின் துறைநின்றார்.''[2]

என்று சேக்கிழார் பெருமானும் முல்லை நிலத்தின் இயற்கை வளத்தைப் பாடுதல் அறிந்து இன்புறத் தக்கது.

மருதம்

வயலும் வயலைச் சார்ந்த இடமுமாகிய மருத நிலம் உழுது ஆருயிர் மருந்தாகிய நெற்பயிரை விளைத்தற்கு ஏற்றதாகும். கிணறுகளும் பொய்கைகளும் யாறுகளும் இந்நிலத்தை வளம்படுத்தும். இத்தொழில் புரிவோர் பெரும்பான்மையோராக இந்நிலத்தில் வாழ்ந்தமைபற்றி **உழவர், கடையர்** என்று பெயர் பெற்றனர். **கடைசியர், உழத்தியர்** என்னும் பெயர்கள் மகளிர்க்கு வழங்கின. பசுமைக் காட்சி வழங்கும் பயிர்நிலங்களை யடுத்துக்

1. பெரியாழ்வார் திருமொழி—3, 6,—7, 10.
2. ஆனாய நாயனார் புராணம் 30, 31.

காஞ்சி மருத மரங்கள் காணப்படும்; வஞ்சிக்கொடி வளமுற்றிருக்கும். தாமரையும் செங்கழுநீரும் குவளையு மாகிய நீர்ப்பூக்கள் இந்நிலத்திற்கு உரியவை. கழனிகளில் செந்நெல்லும் வெண்ணெல்லும் விளைக்கும் இந்நிலவாசி கள், அக்கழனிகளுக்கு இடையே அமைந்திருக்கும் மூதூர், பேரூர் என்று பெயர்பெற்ற ஊர்களிலே வாழ்ந்து வளங் கொழிப்பர். எருமை நீர்நாய் போன்ற பிராணிகளும், நாரை அன்னம் குருகு முதலான பறவைகளும் இந் நிலத்தைத் தம் வாழிடமாக உடையன. **ஊரன், மகிழ்நன்** எனப் பெறுவர் இந்நிலத்தலைவர். **இந்திரன்** இந்நிலத்திற் குரிய தெய்வமாவான். இங்கு வாழ்வோர் மருத யாழ் பயில்வதும், மருதப்பண் பாடுவதும் மரபு. விழாக்களும் நோன்புகளும் இந்நிலத்தவரால் ஏற்றபெற்றி கைக் கொள்ளப் பெற்றிருந்தன.

நெய்தல்

கடலும் கடற் சார்பான இடமுமாகிய இந் நிலத்தில் வாழும் ஆடவர் **பரதவர், நுளையர்** எனவும், பெண்பாலர் **பரத்தியர் நுளைச்சியர்** எனவும் அழைக்கப் படுவர். இவர்கள் கடற்கரையை அடுத்துள்ள **பட்டினம், பாக்கம்** எனப் பெயரிய குடியிருப்புகளில் மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்டு வாழ்வர்; உப்பும் மீனும் விற்றுப் பண்டமாற்றாக உணவுப் பொருள்களைப் பிற நிலத்தவரிடமிருந்து பெறுவர். இந்த நிலத்தில் புன்னைமரமும் தாழைச் செடிகளும் சிறப்பாகக் காணப்படும். தாழையும் நெய்தலும் இந் நிலத்திற்குரிய மலர்களாகும். கடலில் முதலையும் சுறுமீனும், கரைகளில் கடற்காகம், அன்றில், அன்னம் முதலான பறவைகளும் மிகுதியாக வாழும். மணற் கேணிகளும் உவர்க் கழிகளும் இங்குள்ள நீர்நிலைகளாகும். இந் நிலத்துத் தலைமகனுக்குத்

துறைவன், கொண்கன், சேர்ப்பன் என்னும் பெயர்கள் வழங்கின. நீருக்குக் கடவுளாகிய வருணனை இவர்கள் வழிபட்டு வந்தனர். நெய்தற் பறையும், விளரியாழும் செவ்வழிப் பண்ணும் இந்நிலத்திற்கு உரியவை.

இந்நானில மக்களும் தத்தம் நிலங்களிலே நிலைத்து வாழ்ந்துவந்த போதிலும், தங்கள் நிலத்து விளைபொருள் களைப் பிற நிலத்தவர்க்குக் கொடுத்தும், அந்நிலப் பொருள் களுள் தமக்கு வேண்டுவனவற்றைக் கொண்டும் பண்ட மாற்றால் வாணிகம் பெருக்கி வாழலாயினர். இயற்கையாக அமைந்த இந்நானில் மாந்தரும் தத்தம் நிலங்களிலே இயற்கை இன்பம் நுகர்ந்து நன்னெறியைக் கடைப் பிடித்து, ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்னும் ஐம்புலத்தாறையும் ஓம்பி வாழ்ந்த செய்திகளைத் தமிழிலக்கியங்களில் பரக்கக் காணலாம்.

பாலை

மேற்கூறிய நான்கு நிலங்களுள் முல்லையும் குறிஞ்சி யும் முறைமையில் திரிந்து பாலை நிலமாதல் உண்டு.

> '' முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
> நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
> பாலை யென்பதோர் படிவங் கொள்ளும். ''[1]

எனவரும் சிலப்பதிகார அடிகள் காண்க. குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடையில் இயல்பாகவன்றிச் செயற்கையால் பாழ்படுவதால் தோன்றும் பாலையைத் தொல்காப்பியர் **நடுவு நிலைத்திணை** என்பர். பிற்காலத்தவர் இதனை ஒரு தனி நிலமாகவே கொள்வர். முற்கூறிய நானிலங்களுமே தம் இயற்கை வளமிழந்து பாழ்பட்டுப் பாலையாகும் என்று கூறுவதும் உண்டு.

1. சிலப் - காடுகாண் காதை, 64-66.

" நானிலம் வாய்க் கொண்டு நன்னீரறமென்று
[கோது கொண்ட
வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ் பாலை. "[1]

என்ற நம்மாழ்வார் வாக்கால் இதனை அறியலாம். இங்கு வாழ்வாருள் ஆடவர்க்கு **எயினர், மறவர்** என்று பெயர். பெண்பாலர் **எயிற்றியர், மறத்தியர்** எனப்படுவர். இன்னோர் பயிர்த்தொழில் புரிவதற்கு ஏற்ற நிலவாய்ப்பு இன்மையால் வழிப்பறி செய்தும் கொள்ளையிட்டும் வாழ்க்கை நடத்தலாயினர். **உழிஞை, பாலை, இருப்பை** என்னும் மரங்கள் பாலைக்கு உரியவை. **குரா, மரா** என்ற மரப்பூக்கள் இந்நிலத்தில் உண்டு. இங்கே சிறப்பான நீர்நிலைகள் கிடையா ; நீர்வற்றிய பள்ளங்களும் பாழ்ங்கிணறுகளுமே காணப்படும். பாலை நிலத்தார் வாழும் ஊருக்குக் **குறும்பு** என்று பெயர். **விடலை, காளை** என்பவை இந்நிலத்துத் தலைமகனுக்கு வழங்கிய பெயர்கள்.

இவ்வாறு இயற்கையாக அமைந்த நிலங்களைப் பாகுபாடு செய்து, அந்தந்த நிலத்தைப் பற்றிய செய்திகளை யெல்லாம் இலக்கண வாயிலாகத் துறைப் படுத்தினர்கள், ஆன்றோர். அவ்விலக்கண அமைதியை அடிப்படையாகக் கொண்டு அறிஞர்களால் இலக்கியங்கள் எழுதப் பெற்றன. அவற்றைக் கற்குந்தோறும் தமிழ் இன்பம் நம்முள்ளத்தில் தழைக்கும் என்பதில் தடையில்லை.

இதுவரை கூறியவற்றால் பண்டைத் தமிழரது தரை நூலறிவும் அதை நுனித்துணர்ந்து இலக்கண இலக்கியங்கள் இயற்றிய அவர்களது திறனும் நன்கு புலனாகும்.

1. திருவிருத்தம் - 26.

8. ஆதிரையார்

கற்புத் திறம்

செந்தமிழ் நூல்கள் சிறப்பித்துரைக்கும் அரும்பெருங் குணங்களில் **வீரம் கொடை கற்பு** என்பவை சிறந்தவையாம். இவை மூன்றும் ஆண் பெண் என்னும் இரு பாலார்க்கும் பொருந்தி யிருத்தற்கு உரியவைகளே. இவற்றுள் கற்பாகிய பொற்பு ஆண்பாலார்க்கும் அமைவதேயாயினும், பெண்பாலார்க்கே சிறப்பாக உரியது என்பது முன்னோர் கொண்ட முடிபு. சிறையிருந்த செல்வியாகிய சீதாப்பிராட்டியின் ஏற்றங் கூறுவது இராமாயணம் என்று ஆன்றோர் கருதுவர். சங்க மருவிய நூலாகிய புறநானூற்றில், வள்ளல் வையாவிக் கோப்பெரும் பேகனது மனைவியான கண்ணகியின் கற்பின் திறத்தைக் கபிலர், பரணர், அரசிற்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகிய சங்கப் புலவர்கள் பேகனுக்கு அறிவுறுத்தும் வாயிலாக வியந்துரைக்கின்றனர். மற்றொரு கண்ணகியின் கற்பு நிலையைச் சிலப்பதிகாரம் சிறப்பிக்கின்றது. பாண்டியன் நெடுஞ்செழியனின் கோப்பெருந்தேவி கற்பின் பெருமையையும் அக்காப்பியம் கூறுகின்றது. இங்ஙனம் பற்பல மாதரசியின் கற்பு மேம்பாடுபற்றிய செய்திகளைத் தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். இவ்வருங் குணத்தையுடையாளது ஏற்றத்தை,

> ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
> திண்மையுண் டாகப் பெறின்''

எனத் திருக்குறளும் உரைக்கின்றது. பிற்காலத்துப் புலவராகிய புகழேந்தியாரும்,

" நாற்குணமே நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு "

என்னும் வெண்பாவில் ஒரு கற்பரசியின்பால் பொருந்தி யிருத்தற்குரிய அருங்குணங்களை அழகுற உணர்த்துவா ராயினர். இத்தகைய கற்பரசியருள் மணிமேகலைக் காப்பியத்துள் மாண்புடையாளாகக் கூறப்படும் ஆதிரை யாரும் ஒருவர்.

சாதுவனும் ஆதிரையும்

பண்டைக் காலச் சோழரது அரசிருக்கையாகத் திகழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில் திரைகடலோடித் திரண்ட பொருளீட்டிய வணிகர் குடியினர் பலர் விளங்கி னர். அவ்வணிகருள் **சாதுவன்** என்பான் ஒருவன். பெரு நிதிக்கிழவனை இவன் ஆதிரை என்பாளை மணந்து வாழ்ந்து வரும் நாளில், கணிகையொருத்தியின் வலையிற் பட்டு, தன் இல்லத்தை மறந்து வாழலானான். ஆதிரை பிரிவாற்றுமலும், தன் கணவன் ஒழுக்கக் கேட்டினை உன்னி மனம் மாழ்கியும் தனித்து உறைவாளானாள். இங்ஙனம் சில காலம் செல்ல, அவன் வட்டினும் சூதினும் இறங்கித் தன் வான்பொருள் அனைத்தையும் நாளடைவிலே இழக்கலாயினன்.

" விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டும்
துளக்கற நாடின்வே றல்ல—விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்பும்
கையற்ற கண்ணே யறும் " [1]

என்றபடி, சாதுவன் பொருள் வளமுடையவனாக இருந்த

1. நாலடியார்—371.

வரையில் அவனைப் பெரிதும் பேணிவந்த கணிகை, பொரு ளற்றவனானது கண்டு 'காணம் இலி' என அவனைக் கை விடலானாள். சாதுவன் அவளது வெறுப்பின் வாயிலாக நல்லறிவு பெற்று இல்லத்திற்கு மீண்டு, தன் தகாத செயலை நினைந்து வருந்தலானான். ஆதிரை நல்லாள் தேற்ற ஓரளவு மனந்தேறிய சாதுவன், வாணிகத்தால் பொருளீட்டும் பொருட்டு வங்கமேறி அயல்நாடுகளுக்குச் செல்லும் வணிகருடன் தானும் செல்லலானான். தன் கணவன் தகவிலனாகிப் பரத்தையுடன் உறவாடிய காலத்தில் பிரிவுத்துயரால் நலிந்த ஆதிரையை, அவன் பொருளீட்டும் பொருட்டு ஏகிய காலத்தும் பிரிவுத்துயர் வருத்தாதுவிட வில்லை. ஆயினும், பொறைக்கு உறைவிடமாக அவள் விளங்கினாள்.

மரக்கலமேறி வாணிகத்தால் பொருள் தேடச் சென்ற சாதுவனை அவன் ஊழ்வினை விடுத்ததில்லை. கடலிடையே கடுங்காற்றுவீச அவன் ஏறிச் சென்ற கலங் கவிழ்ந்தது. சாதுவன் அக் கலத்தின் ஒடிந்த பாய்மரத் துண்டம் ஒன்றைத் தெப்பமாகப் பற்றிக்கொண்டு நீந்தலானான். அலைகள் அவனைத் தள்ளிச் சென்று, நாகர் என்னும் சாதியார் வாழ்ந்த மலைப்பக்கமாக ஒதுக்கியது. சாகரத்தின் கரைகண்ட சாதுவன், கரையேறிச்சென்று, ஒரு மரநிழலை யடைந்து களைப்பு மிகுதியால் அயர்ந்து துயில்வானானான்.

இங்ஙனமாக, சாதுவனைப் போலவே அந்த வங்கத்தின் உடைமரம் பற்றிக் கடலில் நீந்திய வணிகர் சிலர் காவிரிப் பூம்பட்டினத்தை யடைந்தனர். வங்கம் சிதைந்த தால் இறந்தவருள் சாதுவனும் ஒருவன் என்று அவர்கள் கூறக் கேட்டனள் ஆதிரை. 'கணவன் இழந்தார்க்கு காட்டு இல்' ஆதலின் அவள் நளி எரிபுக முடிவுசெய்து, சுடுகாட்டை யடைந்து, குழிதோண்டுவித்து, அதிற் சிதையடுக்கச் செய்து தீமூட்டி,

“ மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவேன் ”

என்றுரைத்து அதில் புகுந்தாள். தீ அவளைச் சுடா தொழிந்தது.

“ படுத்துடன் வைத்த பாயற் பள்ளியும்
உடுத்த கூறையும் ஒள்ளெரி யுருஅ(து) ;
ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலிற்
சூடிய மாலையுந் தொன்னிறம் வழாது ;
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள்.........”

போல அவள் விளங்கினுள். தீ தன்னைப்பற்றி எரிக்காதது கண்ட ஆதிரை அருந்துயர் உழந்து, தீவினையுடையவ ளாகிய யான் யாது செய்வேன் ?' என மனந்தளர்ந்து புலம்பலானுள். அப்பொழுது அசரீரி “ ஆதிரை ! கேள். உன் கொழுநன் இறந்தானல்லன். அவன் ஓர் ஒடிமரம் பற்றி உயிர் பிழைத்து, நாகர் வாழும் மலைப்பக்கஞ் சேர்ந்தான். அவன் அங்கு அதிக நாள் இரான். சந்திர தத்தன் என்னும் ஒரு வணிகனது மரக்கலத்தில் ஏறி விரைவில் இங்குறுவான். நீ துயரம் ஒழிவாய் ” என்று கூறி அவளைத் தேற்றியது. அதுகேட்ட ஆதிரை துயர மொழிந்து இல்லமெய்தி, கணவன் வரவை எதிர் நோக்கிய வளாய் “ என் கண்மணியனையான் கடிது ஈங்கு உறுக ” என நோற்றவளாகிப் புண்ணியச் செயல்கள் புரிவதில் வழுவாதவளாகி வாழ்ந்திருந்தனள்.

சாதுவனும் நாகர் குருவும்

நிற்க, நாகர் வாழிடம் எய்திய சாதுவன் அயர்ச்சி யினுல் துயிலும்போது, அங்கு வந்த நாகர் சிலர் அவனைக் கண்டு, தமக்கு நல்ல உணவு கிடைத்தது என மகிழ்ந்து

அவனை எழுப்பினர். பன்மொழிப் பயிற்சியுடையவனை சாதுவன் விழித்தெழுந்து, அவர்களோடு அவர்களது மொழியிலேயே உரையாடினன். அதுகண்ட நாகர் வியப்பும் உவப்பும் எய்தி, அவனுக்கு இடுக்கண் ஏதும் இழைக்காது அவனை அழைத்துச் சென்று தம் குருமகன் பால் விடுத்தனர். அக்குருமகன் வீற்றிருந்த காட்சி சாதுவனை வியப்பும் திகைப்பும் அடையச் செய்தது.

"கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய இருக்கையில்
எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி நோக்கி"

அக்குருமகனோடு அளவளாவிப் பேசி அவனை மகிழ் வித்தான் சாதுவன். குருமகன் சாதுவனது வரலாற்றை உசாவியறிந்து, அவன் பசித்திருப்பது தெரிந்து, வேண்டிய அளவு கள்ளும் ஊனுந்தரும்படி ஏவலர் சிலரைப் பணித்தான். அவ்வுணவைச் சாதுவன் வெறுத்துரைக்க, அவையின்றி வாழ்வில் இன்பமில்லை என அதுவரை கருதி யிருந்த அக்குருமகனுக்குச் சாதுவன் அறநெறியுணர்த்தத் தொடங்கி,

"மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய் ;
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்"

என்று விளக்கினன். இதுகேட்ட குருமகன் அறிவு வரப் பெற்றவனாகித் தன் மனத்தில் எழுந்த ஐயங்களையெல்லாம் சாதுவனைக் கேட்டுத் தெளிந்தான். மறுபிறப்பு உண்டு

என்பதையும், புண்ணிய பாவங்களும் அவற்ருல் வரும் இன்ப துன்பங்களும் உண்டு என்பதையும் சாதுவன் அக் குருமகனுக்கு அறிவுறுத்தி, மாந்தர் தம் வாழ்நாளெல்லாம் கைக்கொண்டு ஒழுகத்தக்க நெறிகளையும் அவனுக்கு ஏற்றவாறு வகுத்துணர்த்தினுன். குருமகனும் சாதுவனது நல்லுரையை ஏற்று, அவனுக்குச் சந்தனம், அகில், துகில், நிதிக்குவை முதலியன அளித்தனன். சாதுவன் அவைகளை ஏற்றுக்கொண்டு சந்திரதத்தன் என்னும் ஓர் வணிகன் தன் மரக்கலத்துடன் அவ்வழியே வர, அதிலேறிக் காவிரிப்பூம்பட்டினத்தை எய்தி, ஆதிரையின் அகங் களிக்கத் தன் மனையிற் புகுந்து, அந்த அருங்கற்பினை ளோடு இனிது வாழ்ந்திருந்தான்.

ஆதிரையின் கற்பு மேம்பாடு

அந்நாளில், ஆதிரையின் கற்பு மேம்பாட்டை அந் நகரம் நன்கறிந்திருந்தது. அறவணவடிகள் முதலான பெரியோர் யாவரும் அவளது கற்புத்திறனைப் போற்ற லாயினர். மணிமேகலா தெய்வத்தால் வான வழியாக எடுத்துச் செல்லப்பெற்று மணிபல்லவம் என்னுந் தீவை யடைந்த மணிமேகலை, அமுத சுரபி என்னும் அட்சய பாத்திரம் பெற்று, தான் கற்ற மந்திரத்தின் வலியால் வான வழியாகவே காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து, தன் வரவை ஆவலுடன் நோக்கியிருந்த தன் தாயாகிய மாதவியை வணங்கினள். பிறகு அவளையும் சுதமதியையும் அழைத்துக்கொண்டு,

> ''நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்
> உரைமூ தாளன்.........''

ஆகிய அறவணவடிகளின் இருப்பிடத்தை உசாவியறிந்து, ஆங்குச் சென்று அவரை வணங்கினள். அவர் அந்த அட்சய பாத்திரத்தின் மகிமையை அவளுக்கு விளக்கி

யுரைத்து, அதில் முதன் முதலாகப் பிச்சையிடுந் தகுதி யுடையவர் ஆதிரையாரே என்று அறிவுறுத்தினர் எனின், அம் மாதரசியின் கற்புத்திறம் சொல்லும் தரத்ததோ! மணிமேகலை ஆதிரையாரை நாடிச்சென்று அட்சய பாத்திரத்தில் பிச்சை ஏற்றதும், அவர் "பாரக மடங்கலும் பசிப்பிணி யறுக" எனக் கூறியவண்ணம் அதில் அன்னமிட்டனள். இவ்வுத்தமியின் வாக்கில் எழுந்த வாழ்த்து, எத்துணைப் பரந்த நோக்கும் தாயுள்ளமும் உடையவர் அவர் என்பதை விளக்கப் போதிய சான்றாகு மன்றோ! இத்தகைய உள்ளம் படைத்த கற்புடைய மாதர் விளங்கியது தமிழகம் என்பதை நினைக்குந்தோறும் உள்ளத்தில் இன்பவெள்ளம் பெருகும் என்பதில் என்ன தடை!

9. கலிங்கம் எறிந்த கருணாகரன்

வரலாற்றுச் செய்திகள்

கருணாகரன் என்பது இராமபிரானுக்கு வழங்கிய நாமங்களில் ஒன்று. அத் திருப்பெயரே கொண்ட தொண்டைமானென தமிழ்நாட்டுத் தலைவன் ஒருவன் வாழ்ந்திருந்தான். இலங்கை எறிந்த கருணாகரனைப் போலவே, கலிங்கம் எறிந்தவன் இக் கருணாகரன். இவனது வீரச்சிறப்பையும் வெற்றிப் புகழையும் **சயங்கொண்டார்** என்ற புலவர் வாக்கால் நாம் அறிகின்றோம். வரலாற்றுத் தொடர்புள்ள இவனது சரிதம் நம்மனோர் தெரிந்து இன்புறுதற்கு உரியதாகும்.

சோழர் பேரரசை உயர்நிலையில் நிறுவிய பிற்காலச் சோழவேந்தருள் **முதற்குலோத்துங்கன்** ஒருவனாவான். இவனுக்கு **அபயன்** என்னும் பெயரும் வழங்கியது. இவன் கி. பி. 1070 முதல் 1118 வரை நாற்பத்தெட்டு ஆண்டுகள் கொண்ட நீண்டகாலம் சோழர் பேரரசைத் தாங்கி ஆட்சிபுரிந்தவன் என்று வரலாற்று நூலோர் கூறுவர். இக்காலத்தில் இவனடைந்த அளவற்ற புகழுக்கு முக்கிய காரணமானவர் இவனிடம் தானைத்தலைமை பூண்டிருந்த வீரர்களேயாவர். இவர்கள் எல்லோரும் சோழர் பேரரசின்கீழ்ச் சிற்றரசர்களாக இருந்தவர்கள் ; அபயன் ஆணையை நிறைவேற்றுவதில் ஈடற்றவர்கள் ; எட்டுத் திசைகளிலும் படைகொண்டு சென்று வெற்றியே பெற்று அபயனுக்கு வாகைமாலை சூட்டியவர்கள். இவர்களுள் முதலிடம் பெற்றவன் கருணாகரத் தொண்டைமான் ஆவான்.

கருணாகரன் குலோத்துங்கனது பெரும்படையைத் தானே நடத்திச்சென்று, கலிங்கரோடு கடும்போர் விளைத்துத் தன் தலைவனுக்கு வெற்றியை அளித்ததோடு, அக்கலிங்க வேந்தனைச் சிறைப்பிடித்துவந்து அபயன் முன்னே நிறுத்தினான்; இந்த அருஞ்செயலால் அபயனது அவைக்களப் புலவரான சயங்கொண்டார் தாம் பாடிய கலிங்கத்துப் பரணியில் பலவிடத்தும் சிறப்பித்துப் பாடும் பேறு பெற்றான்.

" இலங்கை யெறிந்த கருணா கரன்தன்
இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர் !
கலிங்கம் எறிந்த கருணா கரன்தன்
களப்போர் பாடத் திறமினோ "

என இராமபிரானது வெற்றியையும் இவனது வெற்றியினையும் நிகராக்கிச் சயங்கொண்டார் பாடுதல் காண்க. இவனது வரலாற்றினைக் கலிங்கத்துப்பரணி, வரலாற்று நூல், கல்வெட்டு ஆகியவற்றில் காணப்படும் செய்திகளைக் கொண்டு கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக் கருணாகரன் **வண்டை**நகரை ஆண்டுவந்த தலைவனாவான். "சுடர்க் கதிர்வாள் அபயனடி அருளினோடும் சூடினான் **வண்டை**நகர் தொண்டைமானே" என்னும் சயங்கொண்டார் வாக்கால் இதனை அறியலாம். இவன் பல்லவ வமிசத்தில் தோன்றியவன் என்பதும், தொண்டைமான் என்னும் சிறப்புப் பெயர் அடைந்தவன் என்பதும், "பல்லவர் தோன்றலைப் பாடீரே" (520) "வண்டைமன், தொண்டைமான்" (314) என்று பரணியில் வரும் தொடர்களால் அறியப்படும் செய்திகளாகும்.

பிற்காலச் சோழரின் ஆட்சி தமிழகத்தில் ஓங்கி வளர்ந்த காலத்தில் பல்லவ அரசர்கள் வலிகுன்றி, அச்

சோழவேந்தர் ஆட்சிக்குட்பட்ட குறுநிலத் தலைவர்களாகி வாழ நேர்ந்தது. தொண்டை நாட்டிற்கு உரியவராயிருந்த அப்பல்லவ மன்னர்கள் தம் நாட்டிலும் சோழநாட்டிலுமுள்ள பற்பல ஊர்களுக்குத் தலைவராகி ஆட்சி நடத்தினர். அத்தகைய பல்லவ வேந்தருள் ஒருவனே கருணாகரத் தொண்டைமான். இவன் சோழநாட்டிலுள்ள **வண்டாழஞ்சேரி** என்னும் ஊர்க்குத் தலைமை பூண்டவன். இவ்வூர் திருநறையூர் நாட்டைச் சார்ந்தது என்றும், **வண்டை** என இலக்கிய வழக்குப் பெற்றது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.[1] இவனது மனைவியின் பெயர் அழகிய **மணவாளனி மண்டையாழ்வார்** என்பது. இத்தலைவனுக்குப் பல்லவர்க்கரசு என்னும் பெயருள்ள தமையன் ஒருவன் இருந்தனன் என்றும், அவன் அபயனது துணைத் தானைத் தலைவருள் ஒருவனாக இருந்தவன் என்றும் சயங்கொண்டார் கூறுகின்றார்.[2] இவன் அபயனது அரசியல் அதிகாரியாகவும் விளங்கினான்.

கலிங்கப் போர்

கருணாகரத் தொண்டைமான் அபயன் ஆணையைச் சிரமேற்கொண்டு கலிங்கப்போரை நடத்தி வெற்றியுடன் மீண்ட வரலாற்றைச் சுருக்கிக் கூறுவோம்.

சோழ நாட்டின் தலைநகரமாக விளங்கியவற்றுள் கங்கை கொண்ட சோழபுரம் என்பதும் ஒன்று. முதல் இராசேந்திரன் பெண் வயிற்றுப் பேரனும், சாளுக்கிய இராசராசன் மகனுமான **விசயதரன்** என்பவன், சோழ வமிசத்திற்கு நேரான சந்ததி இல்லாததால், அந்த வமிசத்

1. ஆராய்ச்சித் தொகுதி—பக் 428.
2. கலிங்கத்துப்பரணி—364.

துக்கு உரியவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, கங்கை கொண்ட சோழனது தேவியான அவன் பாட்டியாரால் வளர்க்கப்பட்டு வந்தான். இவனது தாய் மாமனாகிய வீரராசேந்திரன் தலைமையில் சோணாட்டின் ஆட்சி நடை பெற்று வந்தது. விசயதரன் தக்க வயதடைந்து கல்வி கேள்விகளிலும் போர்ப் பயிற்சியிலும் வல்லவனாகி, உத்தம அரசர்க்குரிய அருங்குணஞ் செயல்கள் யாவும் பொருந்தியவனாக விளங்கினான். இக்காலத்தில் வட நாட்டரசனான சக்கரக் கோட்டத்துத் தாராவர்ஷன் என்பவன் மேல் படையெடுக்க நேர்ந்தது. இந்த அரச காரியத்தை வாலிபப்பருவ மெய்தியிருந்த விசயதரன் தானே மேற் கொண்டு வடநாடு சென்றான். சென்றவன், போர் வென்று வாகை சூடிய சமயத்தில், கங்கை கொண்ட சோழபுரத்தில் இவனது தாய் மாமனான வீரராசேந்திரன் இறந்தான். இவன் தலைநகரில் இல்லாதிருப்பதை ஏற்ற வாய்ப்பாகக் கொண்டு, சோழ வமிசத்தைச் சேர்ந்த வேறுசிலர் அரசுரிமையை அடையும் பொருட்டுக் கலகம் விளைத்தனர். நாட்டில் குழப்பம் உண்டாயிற்று.

வடநாட்டிலிருந்த விசயதரனுக்கு இச்செய்தி எட்டியது. உடனே இவன் விரைந்து வந்து தலைநகரை யடைந்து கலகத்தை யடக்கியும், குழப்பத்திற்குக் காரணமானவரை ஒறுத்தும் அமைதியை நிலைநாட்டிச் சிங்காதனம் ஏறினான். இவனுக்கு இராசேந்திரன், குலோத்துங்கன், அபயன் என்னும் வேறு பெயர்களும் வழங்கலாயின. நீதி தவறாத இவன் ஆட்சியில் சோழநாடு வளங் கொழித்தது. இவனது வல்லமையைக் கண்ட பகையரசர் அடங்கி யொடுங்கி வாழ்ந்ததுடன், திறையளந்தும் வந்தார்கள்.

இக்காலத்தில், அபயன் வேட்டையில் விருப்புற்று வெளியேறிப் பல இடங்களை யடைந்து காஞ்சியை எய்தினான். அந்நகரின் தென்மேற்கு மூலையில் விளங்கிய

பொன்மயமான சித்திர மண்டபத்தில் இவன் வீற்றிருந்த தாகச் சயங்கொண்டார் கூறுகின்றார் :

'' அம்பொன் மேருவ துகொலி துகொலென்
றுயிரங்கதிர் வெய்யவ னையுறுஞ்
செம்பொன் மாளிகைத் தென்குட திக்கினிற்
செய்த சித்திர மண்டபந் தன்னிலே ''

வீற்றிருந்தபோது, இவனைச் சூதர் மாகதர் முதலியோர் புகழ்ந்து பாடலாயினர். அரசர்க்குரிய சிறப்புக்களுடன் இவன் அரியாசனத்தில் விளங்க, சிற்றரசர்கள் வந்து பணிந்து திறை செலுத்தினர். அரசன் ஆணைப்படி அவன் கட்டளைகளை யெழுதி அவைகளை நிறைவேற்றுபவனுன திருமந்திர வோலையாள் அங்கு அபயன் முன்னிருந்து, அப்பொழுது திறையளந்த அரசர்கள் இன்னுரென்றும், அவர் செலுத்திய திறைப்பொருள்கள் இன்னவென்றும் கணக்கிட்டு வந்தான். இதன்பின் '' இதுகாறும் திறை செலுத்தாத அரசர்களும் உளரோ?'' என்று அபயன் வினவ, '' வடகலிங்க நாட்டரசன் இரண்டுமுறை திறை செலுத்தத் தவறினன் '' எனத் திருமந்திர வோலையாள் விண்ணப்பஞ் செய்தான். இதுகேட்ட அபயன் முகத்தில் கோபக்குறி சிறிதும் காணப்படவில்லை. அவன் சிறிது புன்னகை புரிந்தான் ; தன்னவையை அலங்கரித்திருந்த தானைத்தலைவரை நோக்கி,

'' எளிய னென்றிடினும் வலிய குன்றரணம்
இடிய நம்படைஞர் கடிதுசென்(று)
அளிய லம்புமத மலைகள் கொண்டணைமின்
அவனை யுங்கொணர்மின்......''

என்று ஆணையிட்டான். அதனைக் கேட்டதும் எழுந்தனன் கருணுகரத் தொண்டைமான்.

" இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமவை
எறிவ னென்றுகழல் தொழுதனன்
மறைமொ ழிந்தபதி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே."

என்று சயங்கொண்டார் பாடுகின்றார். கருணாகரன் தலைமையில் படைகள் திரண்டெழுந்தன. பல்லவர்க்கரசு, வாணகோ வரையன், முடிகொண்ட சோழன் ஆகியோர் தானைகளை நடத்த, பல்லவர் கோனும் வண்டை நகர்த் தலைவனுமான கருணாகரன் 'இரை வேட்ட பெரும் புலி போல்' இகல் வேட்டு, களிற்றின்மீது ஏறிச் சென்றான். அப்பெரும்படை பாலாறு, குசைத்தலை, பொன்முகரி, கொல்லி, பெண்ணை, வயலாறு, பேராறு, கோதாவரி, கம்பை, சந்தநதி, கோதமையாறு ஆகிய யாறுகளைக் கடந்து கலிங்க நாட்டிற் புக்குச் சூறையாடியும் தீயிட்டும் வழியிலுள்ள ஊர்களைப் பாழ்படுத்திய வண்ணம் தலைநகரை நோக்கிச் சென்றது. படையின் கொடுமைக் காற்றாத குடிமக்கள் அல்லோலமிட்டு அலறியோடித் தம்மரசனை **அனந்த பதுமன்** என்பவனை அத்தாணி மண்டபத்திற் கண்டு முறையிட்டனர். அவர்களது அலங்கோலமான நிலையைச் சயங்கொண்டார் உருக்கமாகச் சித்திரிக்கின்றார் :

" உரையிற் குழறியும் உடலிற் பதறியும்
ஒருவர்க் கொருவர்முன் முறையிட்டே
அறையிற் றுகில்விழ வடையச் சனபதி
அடியிற் புகவிழு பொழுதத்தே."

குடிகளின் முறையீட்டைக் கேட்ட வேந்தன் வெகுண்டெழுந்தான். வெய்துயிர்த்துக் கைபுடைத்து வியர்த்து நோக்கினான் ; தன் வீரத்தைப் பாராட்டிப் பேசினான் ; வந்துள்ள படையின் வலியை ஆராயாது சீற்றங்கொண்டு

போருக் கெழலானன். அப்பொழுது அவனருகிலிருந்த அமைச்சனை எங்கராயன் எழுந்து பணிந்து,

> " அரசர் சீறுவ ரேனும டியவர்
> உரைசெ யாதொழி யார்களு றுதியே "

என்றுரைத்து, " பஞ்ச பாண்டியர், சேரர், வத்தவ மன்னன், ஆரும் விக்கிரமாதித்தன் முதலான பெரு வேந்தரை நிலைகுலைந்து ஓடச் செய்தது இப்பொழுது இங்கு வந்துள்ள படைதான். இதுவே, சேரரது கடற்றுறையைக் கைப்பற்றி விழிஞம் என்னும் ஊரை அழித்தது ; காந்தளூர்ச்சாலை என்னுமிடத்தில் சேரரது மரக்கலங்களை யழித்துச் சேரமன்னன் கடற்படை வன்மையைச் சிதைத்தது. இவைகளை நோக்கும்போது நாம் இப்படைக்கு எம்மாத்திரம்? ஆதலின், மாற்றான் வலியும் தன் வலியும் நோக்கிப் போருக்கெழுவதே சீரிது. நீ இப்பொழுது கொண்ட சீற்றந்தவிர்ந்து, அபயனுக்கு இடுதற்குரிய திறையைக் கொடுத்துவிடுதலே ஏற்றது " என அறிவுரை கூறினன்.

> " அறிகொன் றறியா னெனினும் உறுதி
> உழையிருந்தான் கூறல் கடன் "

என்ற பழமொழிக்கிணங்க அமைச்சன் அறிவுறுத்தினை னயினும், அனந்த பதுமன் சீற்றந் தணியாது வீரந் தூண்டப் போருக்கெழுந்தனன்.

கலிங்கர் படையும் சோழவேந்தனது பெரும்படையும் கைகலந்தன. பெரும்போர் மூண்டது. கருணாகரன் களிற்றின்மீது இவர்ந்து பொருகளத்தில் நுழைந்தனன். சோழர் படைஞர் ஊக்கமுடன் போரிட்டுக் கலிங்கர் சேனையைச் சிதறவடித்தனர். அபயன் படையின் தாக்கு தலுக்கு ஆற்றாத பகைப் படை நிலைகுலைந்து தோற் றோடியது. தோற்ற வீரர் பலர் உயிர்தப்பும் பொருட்டு

மாறுவேடம் பூண்டு மறைவாக நீங்கினர். கருணகரன் கலிங்கரது களிறு குதிரை தேர் ஒட்டகம் நிதிக்குவை முதலான செல்வமெல்லாம் கைப்பற்றினன். கலிங்கர் வேந்தன் உயிர்தப்பியோடி ஒளித்தனன். இவ்வாறு பெரு வெற்றிபெற்ற வண்டையர்கோன், ஒற்றர் வாயிலாகக் கலிங்க அரசன் ஒளித்திருந்த இடத்தையறிந்து, அவனைச் சிறைப்பிடித்துவரச் செய்தான். ''கலிங்கன் வலிய குன்றரணம் இடிய, களிறுகளைக் கைப்பற்றி அவனையும் சிறைப் பிடித்துக் கொணர்மின்'' என்ற அபயன் ஆணையை அணுவளவும் குறைவின்றி நிறைவேற்றிய கருணகரன் வாகை சூடித் திரும்பலாயினன்.

'' கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளி னேடும்
சூடிஞன் வண்டையர்கோன் தொண்டைமானே ''

என்று இவனது கலிங்கப் போர் வெற்றியைச் சயங் கொண்டார் கொண்டாடலானர்.

கருணகரனைப்பற்றி இங்கே கூறிய செய்திகள் கவியாகிய சயங்கொண்டார் புவியைச் சயங்கொண்டவனை முதற் குலோத்துங்கனது கலிங்கப் போரைப் பற்றிப் பாடியுள்ள கலிங்கத்துப் பரணியாலும், ஆராய்ச்சியாளர் உணர்த்தியுள்ள முடிவுகளாலும் அறியப்பட்டவை. வீரச் செயல்களை விரித்துரைக்கும் இப்பரணி, சோழவேந்தனின் தண்டநாயகனை கருணகரனுக்கு அளித்துள்ள பெருமை பாராட்டத்தக்கது.

10. வீரத் தாய்மார்

சங்க நூல்களிலே தமிழ் நன்மக்களுடைய கல்வி, கொடை, வீரம், சீர்மை, போர்த்திறல், அரசியல் நெறி முதலியவற்றின் உயர்ச்சியை விளக்கும் நிகழ்ச்சிகள் பல மிளிர்கின்றன என்பது வெள்ளிடை மலே. அவற்றுள், **புறநானூறு பதிற்றுப்பத்து** என்பவை தமிழகத்து முடி மன்னர்கள், வரையா ஈகை வள்ளல்கள் ஆகியோரின் வண்மை வாண்மை போன்ற ஒப்புயர்வற்ற இயல்புகளே எடுத்தியம்புகின்றன. இத்தகைய நூல்கள் போற்றி யுரைக்கும் பொருள்களுள் தமிழகத்து மெல்லியல் நல்லாரின் வீரமும் ஒன்ருகும்.

ஒல்காப் புலமைத் தொல்காப்பியனுர் "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த, நிச்சமும் பெண்பாற்குரிய வென்ப" எனக் கூறியுள்ளது கொண்டு, பெண்பாலார்க்கு அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு ஆகிய குணங்களே யன்றி, ஆண்பாலார்க்குரியதான வீரமும் உண்டோ எனச் சிலர் ஐயுறலாம். மேற்கூறிய அச்ச முதலான குணங்கள் பெண்பாலார்க்கு உரிய சிறப்பியல்களாதலின், அவை பாராட்டிக் கூட்டப்பட்டனவேயன்றி, வேறன்று. வீரம் என்ற குணம் அவர்கள்பால் அமைந்திருக்கத் தகாதது அன்று. உயிர்கட்கெல்லாம் பொதுவான குணங்களாக நூலோர் வகுத்துரைக்கும் அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு முதலான முப்பத்திரண்டி னுள் வீரமும் ஒன்று என்பதும், அது இருபாலார்க்கும் உரியதே என்பதும் நாம் உய்த்துரைத்தக்கவை. இன்றி யமையாத இடத்து இக்குணம் பெண்பாலாரிடத்தும் தோன்றுதல் உண்டு என்பதற்குத் தமிழிலக்கியங்களில்

அநேக சான்றுகள் உள. இதுபற்றியே மறக்குடியுள் தோன்றிய மகளிர் வீரமுடையராயிருந்தனர் என்று புறப் பொருள் நூலார் கூறுவாராயினர்.

" அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கும் மறமிகுத் தன்று "

என்பது **புறப்பொருள் வெண்பா மாலை.** இது அவ் வீர மகளிரின் பெருமித இயல்பினை இயம்புவதாகும். இதனை **மூதின் முல்லை** என்ற துறையாக அவ்வெண்பா மாலை கூறுகின்றது. இத்துறைக்கு எடுத்துக்காட்டாக அதன் ஆசிரியர் தருவது,

" வந்தபடை நோனுள் மகவூட் டொழித்தாங்கு
வெந்திறல் எஃகம் இறைகொளீஇ—முந்தை
முதல்வர்கற் றுன்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு "

என்னும் வெண்பாவாகும். இச்செய்திகளால் வீரம் என்பது பெண்பாலார்க்கும் உரியதே என்பதும், வீரத் தாய்மார் பலர் தமிழகத்தில் விளங்கினர் என்பதும் பெறப்படும். இனி, அத்தகைய வீரத்தாய்மார் சிலரைப் பற்றிக் கூறுவோம்.

புறநானூறு என்னும் தொகைநூலில் தமிழ்த் தாயரின் வீரச் செயல்களைக் கூறும் பாடல்கள் சில உண்டு. இப் பாடல்களை இயற்றியவரும் நல்லிசைப் புலமை மெல்லியலா ராகவே அமைந்திருப்பது வியக்கத்தக்கது. புலமை நிரம்பிய இப்பெண்பாலார் உள்ளத்தில் வீர உணர்ச்சியும் பொருந்தியிருந்தமை பாராட்டத் தக்கதேயன்றோ? வீரச் சுவை ததும்பும் அப்பாடல்களையும் அவற்றில் அமைந் துள்ள கருத்துக்களையும் நோக்குவோம்.

"மறக்குடியிலே தோன்றிய வீரமுள்ள மகள் ஒருத்தி யிருந்தாள். முன்னாளில் நடந்த போரொன்றில் அவளது தந்தை யானை ஒன்றினைக் கொன்று தானும் வெங்களத்திலே உயிரிழந்தனன். முந்தின நாளிலே அவள் கணவன் ஆநிரையை மறித்து நின்று தன் ஆவி போக்கினான். இவ்வாறாகியும் அவள் அன்று போர்ப் பறையின் ஒலியைக் கேட்டதும், வீரம் தூண்டத் தன் ஒரே மகனை அழைத்தாள்; சிதர்ந்திருந்த அவன் தலைமயிரில் எண்ணெய் தடவி வாரி முடித்தாள்; வெண்மையான ஆடையொன்றை எடுத்து அவனுக்கு உடுத்தினாள்; வேற்படையை அவன் கையிலெடுத்துக் கொடுத்துப் போர்க்களம் செல்லும்படி யனுப்பினாள்." இவ்வீரத் தாயின் பெருமித இயல்புதான் என்னே! தன் குடியின் ஒழுக்கத்தைக் கைவிடாது போற்றிய இவளது வீரச் செயல் போற்றத்தக்கதேயன்றோ? இதனை விளக்கும் புறப்பாட்டு பின்வருவது :

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்(கு) இவன்தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே.
நெருநல் உற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே.
இன்றும், செருப்பறைகேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கை கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே" (279)

தன் தந்தையையும் கொழுநனையும் இழந்தவள் இவள். அவளுக்கிருந்த புதல்வனும் ஒருவனே. அவனை யன்றி

அவளுக்கு ஆதரவாயுள்ளவர் வேறு எவரும் இல்லை. அவ்வாறிருந்தும், போர்க்களஞ் செல்பவன் உயிருடன் திரும்புவான் என்ற உறுதி யில்லாதிருந்தும், தன் குடிக்கு இயல்பான வீர உணர்ச்சியால் அவனையும் இழக்கத் துணிந்தே அவனைப் போர்க்களம் புகுமாறு தூண்டினுள் என்னும் செய்தி எத்துணை அருமையும் பெருமையும் வாய்ந்தது! இக்கருத்தமைந்த செய்யுளைப் பாடியவர் ஒக்கூர் மாசாத்தியார் என்பவர்.

மற்ருெரு வீரத்தாயின் செயலைக் காண்போம். கருங் குயிலின் நிறம்போன்ற கூந்தலானது, கொக்கின் உள் ளிறகுபோல வெளுத்து நரைத்த முதுமகள் ஒருத்தி. அவள் அத்துணை முதுமைப் பிராயத்திலும் வீரங் குன்றின ளல்லள். அவளுடைய புதல்வன் போர்க்களம் சென்றிருந் தான். அவன் வரவை அவள் ஆவலுடன் நோக்கியிருந் தாள். அப்பொழுது செருக்களத்தினின்று மீண்டோர் சிலர் அவளைக் கண்டு "அன்னய்! நின் புதல்வன் படுகளத்தில் நெடுங்களிறு ஒன்றினை எறிந்து தானும் பட்டான்" எனக் கூறினர். அதுகேட்ட முதுமகள் அவனை ஈன்ற காலத்தில் தானடைந்த உவகையிலும், அவன் வீரத்தை வியந்து பெரிதும் அழுதாள் எனின் அவளது வீரச் சிறப்பினை என்னென்று புகழ்வது! உவகைக்கலுழ்ச்சியாக வமைந்த இப்பாடலைப் பாடியவர், பூங்கணுத்திரையார் என்பவர். அப்பாடல் வருமாறு :

"மீனுண் கொக்கின் தூவி யன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனன் என்னு முவகை
ஈன்ற ஞான்றிலும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே." (277)

காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் புலவர் பாடிய மற்றொரு பாட்டு இத்தகைய வீரச்சுவையை விளக்குவதாய் அமைந்துள்ளது. ஆனால், இதில் காணப் படும் நிகழ்ச்சிமட்டும் வேறுபாடு உடையது. வீரங் குன்றி னான் தன் வயிற்றிலே உதித்தவன் என்ற உணர்ச்சியால் மனங்கொதித்த வீரத்தாய் ஒருத்தியின் கூற்றாக இச் செய்யுள் அமைந்திருப்பதே அந்த வேறுபாடாகும். உடம்பில் நரம்பெல்லாம் எழுந்து தோல் வற்றிய கிழவி யான அவள், தன் வீரக் குடியின் மானத்திற்குக் கேடுதரும் செய்தி கேட்டதும், துடித்தெழுந்து கூறிய வீரவார்த்தை நயந்தோன்ற இப்பாடலில் மிளிர்கின்றது. அவ்வீரமும் தன் குடியின் மானங் காத்தலைக் குறிக்கோளாகக் கொண்டே எழுந்ததாகும்.

'' மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் ''

என்பது மறைமொழியன்றோ! உயிரைக் கொடுத்தாயினும் மானக்கேட்டைத் தடுத்தல் என்னும் உயரிய பண்பாட்டை உடையவர் தமிழராதலின், இவ்வீரத்தாய் வீறுகொண் டெழுந்ததில் வியப்பில்லை. இனி, அத்தாயின் மானக்கேட் டிற்குக் காரணமாகக் கருதப்பட்டது யாது என்பதைக் காண்போம். போர்க் களத்தினின்று மீண்டோர் சிலர், தன் புதல்வன் போர்க்களத்தில் எடுத்த வாட்படையை எறிந்து விட்டுப் புறங்கொடுத்து மீண்டான் என்று சொல்லக் கேட் டதே காரணமாகும். இச்செய்தி கேட்டதும் சிலிர்த் தெழுந்த அத்தாய் '' என் புதல்வன் தான் தோன்றிய வீரக் குடிக்கு இழுக்கினைத் தரும் இச்செயலைச் செய்திருப்பா னாயின், அவனுக்குப் பாலூட்டிய என் மார்பை அறுத் தெறிவேன் '' என வஞ்சினங் கூறினள். தன் மகன் அவ்

வாறு செய்திருன் என்ற எண்ணமும் அவள் உள்ளத்தில் உண்டாயது. போர்க்களத்திற் சென்று, உண்மை காண வேண்டும் என்ற நோக்குடன் அவள் வாளேந்தியவண்ணம் அடுகளத்தை அடைந்தனள். அங்கே கிடந்த பிணங்களை யெல்லாம் புரட்டிப் பார்க்கும்போது, தன் புதல்வன் உடல் பகைவரது படைக்கலங்களால் மார்பில் ஏற்ற விழுப் புண்களுடன் கிடந்ததுகண்டு, அவனை இழந்ததற்கு வருந்தாமல் மகிழ்ச்சியால் கண்ணீர் பெருக்கினுள். இச்செயல் அவளது தறுகண்மையை விளக்கி நம்மை உவப்பிக்கின்றது. பின்வரும் புறப்பாட்டு இதனை விளக்குவதாகும்:

'' நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
'படையழிந்து மாறினன்' என்றுபலர் கூற,
'' மண்டமர்க் குடைந்தன ஞயின் உண்டவென்
மார்பறுத் திடுவென் யான்''எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றுகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.'' (278)

இத்தகைய வீரத்தாயரின் விழுமிய செயலைக் கூறும் புறப்பாட்டுக்கள் மூன்றும் வீர உணர்ச்சியும் புலமைச் செல்வமும் ஒருங்கே எய்தியிருந்த பெண்பாற் புலவரால் பாடப்பெற்றவையாம். இதனுல், பண்டைநாளில் பெண்பாலார் பலர் எய்தியிருந்த கல்வி மேம்பாட்டை நாம் அறியலாம்.

இனி, தகடூர் யாத்திரை என்னும் பழந்தமிழ் நூலிற் காணப்படும் இவ்வித வீரச்சுவை யமைந்த பாடல்களினின்றும் உணரத்தகும் செய்திகளைக் காண்போம். வீரத்

தாய் ஒருத்தி தன் மகனைப் போருக்கு அனுப்பினாள். அவனும் முதலில் தீரமாகப் பகைவரைத் தாக்கித் தன்னை எதிர்த்து வந்த களிற்றின்மீது தன் கையிலிருந்த வேலை எறிந்தான். அது அக்களிற்றின் உடலில் புதையுண்டது. அதன்பின் அவன் போர்க்களத்தை விட்டு நீங்கிச் சென்றான். இதனை யறிந்த தாய், வீரங்குன்றியவனை மகனாகப் பெற்ற தன்னையும், அவன் தங்கியிருந்த தன் வயிற்றையும் நொந்து, "என்வயிற்றிலறைந்து கொண்டு உயிர் மாய்வேன்" என்று கூறினளாம்.

"வாதுவல் வயிறே! வாதுவல் வயிறே!
நோவேன் அத்தை நின்னீன் றனனே!
பொருந்தா மன்னர் அருஞ்சமம் முருக்கி
அக்களத் தொழிதல் செல்லாய்! மிக்க
புகர்முகக் குஞ்சரம் எறிந்த எஃகம்
அதன்முகத் தொழிய நீபோந் தனையே!
அதனால்,
எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை ஈன்ற வயிறே."

"எம் இல் செய்யாப் பெரும்பழி செய்த கல்லாக் காளை" என்ற அவள் வார்த்தையால், தன் உயிரைக்காட்டிலும் தன் குடிப் பெருமையைக் காத்தலில் அவள் கருத்தூன்றி யிருந்தவள் என்பது பெறப்படும். "நின்னீன்றனனே" என்பது "உன்னையும் ஒரு பிள்ளையென்று யான் பெற்றேனே!" என்ற இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற நிற்பதாகும்.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என்றபடி, கைவேலினைக் களிற்றின்மீது எறிந்த தன்மகன் பின்னும் போர்மேல் விருப்பங் கொள்ளாது, 'புரந்தார்கண்

நீர் மல்க' சாகாது, புறம் போந்த செயலே அவள் மனத்தைப் புண்படுத்தி, இவ்வாறு நொந்து பேச வைத்தது போலும்.

வீரங்குன்றிய தனது புதல்வனை நொந்த தாயின் வீர உணர்ச்சி இவ்வாறுக, வீரம் செறிந்த தனது காளையின் உடல் போர்க்களத்திற் கிடந்த கிடக்கையைக் கண்டு, உவகை யெய்திய வீரத்தாய், அவன் பிரிவுக்காற்றுது தன் இன்னுயிர் விடுத்த மற்றெரு நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் பாடலொன்றும் தகடூர் யாத்திரையில் உள்ளது.

> " எற்கண் டறிகோ எற்கண் டறிகோ
> என்மக னுதல் எற்கண் டறிகோ
> கண்ணே கணைமூழ் கினவே, தலையின்
> வண்ண மாலையும் வாளிவிடக் குறைந்தன
> வாயே, பொங்குநுனைப் பகழி மூழ்கலின் புலாவழித்(து)
> ஆவநாழிகை அம்பு செறித் தற்றே.
> நெஞ்சே வெஞ்சரம் கடந்தன, குறங்கே
> நிறங்கரந்து பலசரம் நிரைத்தன, அதனுல்
> அவிழ்பூ அப்பணைக் கிடந்தோன்
> கமழ்பூங் கழற்றீங் காய்போன் றனனே "

நெடுங் கோளன் என்பவன் படுகளத்தே உடலுறுப்புகள் சிதைந்து அம்புப் பாயலிற் கிடந்த நிலையை அவன்தாய் கண்டு உரைத்ததாக அமைந்துள்ள இப்பாடலில், தனயன் வீரமும் அதனைப் பாராட்டிய தாயின் வீர உணர்ச்சியும் நம்மனேர் அறிந்து இன்புறத்தக்கவை. இனி, மற்றெரு வீரத்தாயின் செய்தியைக் காண்போம்.

காவற் பெண்டு என்பவர் ஒரு பெண்பாற் புலவர். இவரது பாடலொன்று புறநானூற்றிற் காணப்படுகின்றது. அவரை நோக்கி " நும் மகன் எங்கே யுள்ளான்? " என்று ஒருவன் வினவினுன். அதற்கு அவர், " சிறிய வீட்டின்

நற்றூணைப் பிடித்த வண்ணம் என்னை நோக்கி, ''உன்மகன் எங்கேயுள்ளான்'' என்று நீ வினவுகின்றுய். அவன் எங் குள்ளான் என்பதை யான் அறியேன். புலி மலைக் குகை யிலே தங்கிவிட்டு வெளியேறுகிறது. அது எங்கே சென்றது என்பதைக் குகை எவ்வாறு அறியாதோ, அதுபோலவே என்மகன் சென்ற இடம் இன்னதென்பதை யானு மறியேன். ஈன்ற வயிறு இது. இவ்வளவே எனக்கும் அவனுக்குமுள்ள தொடர்பு. மலை முழையினின்றும் வெளிப்படும் புலி இரைவேட்டுச் செல்லுதலே இயல்பு. அதுபோல என்வயிற்றில் தங்கிய புதல்வன் போர்வேட்டுச் செல்லும் இயல்பினன். ஆதலின், போர்க்களம் செல்லின் நீ அவனை காணலாம்'' என விடை யிறுத்தனர். ''ஈன்ற வயிரே இது ; இந்த வயிற்றிற் பிறந்தவன் வீரம் குன்றுன். புலிபோன்ற அவன் இருத்தற்குரிய இடம் போர்க்களமே'' என்னும் கருத்துப்பட விடையளித்த வீரத்தாயான காவற் பெண்டின் பாடல் பின்வருமாறு :

'' சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னேவென வினவுதி ; என்மகன்
யாண்டுள னயினும் அறியேன் ; ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிரே இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.'' (86)

மறக்குடியிற் பிறந்த மற்றெருரு தாயின் கூற்ருக அமைத்து, **பொன்முடியார்** என்ற பெண்பாற் புலவர் ஒரு நாட்டிலுள்ள அரசன் முதலான பலருடைய கடமைகளை உணர்த்துகின்றுர். அவற்றுள், தன்னுடை யதைத் 'தலைக்கடன்' என்றும் கூறுகின்றுர். ஒவ்வொரு தாய் வயிற்றினின்றும் பிறந்த காளையின் கடமை ''ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக், களிறு எறிந்து

பெயர்தல்'' என்று கூறுவதால், இளைஞர் தம் நாட்டின் பொருட்டு ஆற்றுதற்குரிய அருங்கடன் இன்னதென்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. இனிப் பொன்முடியார் வகுத் துரைக்கும் கடமைகளை நோக்குவோம் :

'' ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.'' (312)

வீரங் கொண்டிருந்த தாய் தன் குலத்தார் வீரச் சிறப்புக்களை எடுத்துரைத்துப் பெருமை பாராட்டுவதும் வழக்கம். முன்னோர் வீரச்செயலைக் கூறிப் பின்னோர்க்கும் வீர உணர்ச்சியை ஊட்டுதல் பண்டைத் தாய்மாரின் இயல்பாகும். தமிழ்த் தாய்மாரிடம் இயல்பாகவே காணப் பட்ட இவ்வருங் குணத்தைப் புறப்பொருள் வெண்பாமாலை யுடையார்,

'' கன்னின்றான் எந்தை ; கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் பின்னோடி
எய்போற் கிடந்தானென் ஏறு ''

என்னும் வெண்பாவில் அமைத்துப் பாடுதல் அறிந்து மகிழத்தக்கது.

இதுகாறும் கூறியவற்றால் தமிழகத்தில் முன்னாளில் வாழ்ந்த தாய்மாரின் வீர உணர்ச்சியும், அவ்வுணர்ச்சியை ஊட்டி வளர்க்கப்பட்ட வீரப்புதல்வரின் விழுமிய செயல் களும், நேரிய முறையில் வீரத்தைப் பயன்படுத்தி அரசனின்பொருட்டுத் தம் ஆவியை அர்ப்பணம் செய்தவர்

அவ்வீரப்புதல்வர் என்பதும் நன்கு விளங்கும். இவைகளை யெல்லாம் ‘கவிகளின் கற்பனை’ என்று புறக்கணியாது, ஆன்றோரது அரிய பாடல்களில் ததும்பும் வீரச் சுவையை நுகர்ந்து, தமிழ் மொழியையும் தமிழகத்தையும் தம் வீரத்தால் காத்தல் தமிழ் மாணவரின் சீரிய கடமை யன்றோ ?

11. அறநெறி உணர்த்திய அறிஞர்

உலக வாழ்வில் மக்கள் உள்ளத்தைப்பற்றி யலைக்கும் தன்னலப் பேயை ஒழித்து, பலவகையான மனநிலையும் பழக்க வழக்கங்களும் உணர்ச்சியும் குணமும் உடைய ராக வாழ்பவரை நல்வழிப் படுத்தி இன்பந்துய்க்கச் செய்யும் அறிவுடையார் பலர் தோன்றிய வண்ணமாகவே யிருப்பர். அவர்களது பொருள் பொதிந்த பொன்மொழிகள் மாந்தர் உள்ளத்திற் பதிந்து அவர்களை நன்னெறியிற் செலுத்தும்; அக்காலத்தில் வாழும் மக்களுக்கேயன்றிப் பிற்காலத்தவர்க்கும் வழிகாட்டும். அறிவுவளம் பெற்றவர், அறிவுகுன்றியவர் என்னும் இருவகையினரையுடையது உலகம். அறிவுடையார் எல்லாம் உடையவராவர். அறிவு குறைந்தவர் அறிவுடையார் பொருளுரையின் வழி நடந்து வாழ்தலே சீரியது. இறைவன் அருளால் பெற்ற கூர்த்த மதியுடன் கல்வி கேள்விகளால் நிரம்பிய அறிவுடையராக விளங்குவோர் அருமை பாராட்டத் தக்கவர். ஆதலின் 'அறிவுடை யொருவனை அரசும் விரும்பும்'.

> " அறிவுடையார் ஆவ(து) அறிவார்; அறிவிலார்
> அஃ(து) அறி கல்லா தார் "

எனத் திருவள்ளுவனர் அறிவுடையார்க்கும் அறிவிலார்க் கும் உள்ள வேறுபாட்டினைக் கூறியதற் கிணங்க, இன்னது செயலால் இன்னது உண்டாகும் என்பதை முன்னரே அறியும் வல்லமை யுடையவரான அறிவாளிகள் முன் னிகழ்ச்சியைக் கொண்டு பின்விளைவினை யறிந்து நடப் பவராவர்.

உலக நலம் பேணுவோர் தன்னலம் நாடுவதை நாம் எங்கும் காண்பதில்லை. ஆதலின், இத்தகைய அறிவுச் செல்வர் தமக்கு நேரிது என்று பட்டதைப் பிறர்க்கு அஞ்சாது அறிவுறுத்தியே வாழ்ந்தனர்; தம்பால் குடி கொண்டிருந்த அருளால் இருளைத் தடிந்தனர்; தாமே வலியச் சென்று இடித்துரைத்தும் இன்சொற் கூறியும் அறிவூட்டி வந்தனர். அவர்களது பூத உடல் அழிந்து விட்டது. அது மண்ணோடு மண்ணாகி மறைந்தும் போயிற்று; புகழுடம்போ அழிவிலதாய் நின்று இன்று நமக்கு அறிவுறுத்துகின்றது. அவர்களது அறிவுரைகள் சிலவற்றைக் காண்போம்.

கணியன் பூங்குன்றனார்

சங்கநாளில் வாழ்ந்திருந்த புலவர் பெருமக்களுள் கணியன் பூங்குன்றனார் என்பாரும் ஒருவர். 'கணியன்' என்பது இவர் சோதிடம் வல்லவர் என்பதை உணர்த்தும் அடைமொழி. **பூங்குன்றம்** என்னும் ஊரிலே பிறந்து, தம் சோதிடக் கலையறிவாலும் தமிழ்ப் புலமையாலும் பெரும்புகழ் பெற்றதால் பூங்குன்றன் என்ற பெயர் இவர்க்கு அமைவதாயிற்று. அது சிறப்பை உணர்த்தும் 'ஆர்' விகுதி பெற்றது. பூங்குன்றம் என்னும் ஊர் இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளது. பூங்குன்ற நாடு என்ற நாடொன்றின் சிறந்த ஊராக விளங்கியதால், இவ் வூரின் பெயரே அந்நாட்டிற்கும் பொருந்தி வழங்க லாயிற்று.

இப்புலவர் பெருந்தகை தாம் பெற்ற புலமைச் செல் வத்தை மாந்தர்க்கு நல்லறிவு ஊட்டும் பொது நலப்பணியில் பயன்படுத்தி வாழ்ந்தவராவார். அதற்கேற்ற மனநிலையும் அவர்பால் பொருந்தியிருந்தது. பரந்த நோக்கமும்

விரிந்த உள்ளமும் உடைய இவர், நடுநிலை பிறழாத வாழ்வு வாழ்ந்து, அந்நெறியினை மக்கள் அனைவருமே கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்ற ஆர்வமுடைய வராகிப் பெரிய ஞானியாக விளங்கினர். அரசர் முதலாக அனைவரும் கடைப்பிடித்து ஒழுகத்தக்க அருள் நிரம்பிய அறவாழ்வினை எடுத்துரைத்த அருளாளர் இவர். "நமர் எனக் கோல் கோடாது, பிறர் எனக் குணங் கொல்லாது" நடுநிலை கொண்ட நெஞ்சு முடையவராய் வாழ்தற்குரிய நெறியை வகுத்துரைத்த இவர்,

> "கேடும் பெருக்கமும் இல்லல்ல ; நெஞ்சத்துக்
> கோடாமை சான்றோர்க் கணி"

என்ற தமிழ் மறை மாந்தர் வாழ்க்கையின் குறிக்கோளாக அமைய வேண்டும் என்றும், அதனால் எங்கும் அமைதியும் அருளறமும் குடிகொள்ள வேண்டும் என்றும் ஆவல் கொண்டிருந்தவர். இந்த ஆவல் நிறைவேறுவதற்கு அடிப்படையாவது மெய்யுணர்வு—அதாவது, உலக வாழ்க் கையின் உண்மைகளை உள்ளவாறு அறிதல்—என்பதை இவர் உணர்ந்திருந்தார். மக்கள் அறிவால் உயர்ந்தா லன்றி மெய்யுணர்வு தோன்றாது. மெய்யுணர்வு உண்டானா லன்றி அருளுள்ளம் அமையாது. உள்ளத்தில் அருள் பெருகியிருந்தாலொழிய அமைதியும் இன்பமும் தோன்ற மாட்டா. இவையனைத்தையும் விளக்கி இவர் அருளிய பாடலொன்று புறநானூற்றில் திகழ்கின்றது. பொன்னே னப் போற்றத்தகும் அப்பாடலில் பொதிந்துள்ள ஒவ்வொரு கருத்தும் எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் எச்சமயத் தார்க்கும் பொருந்துவதாக மிளர்தல் காணலாம்.

" யாதும் ஊரே, யாவருங் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன ;
சாதலும் புதுவ தன்றே ; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் று மிலமே ; முனிவின்
இன்னா தென்றலும் இலமே ; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் ; மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே " (192)

மக்களிடையே நல்லறிவும் நல்லறமும் பரவவேண்டுமாயின், ஒவ்வொருவரும் மேற்கொண்டொழுகத்தக்க நன்னெறியொன்று உண்டு. அது " யாதும் ஊரே, யாவரும் கேளிர் " என்பதுதான். இதுவே மற்ற மெய்யுணர்ச்சிகள் தோன்றுவதற்கு அடிப்படையானது. தமது நன்மையை நாடுவோர் நண்பர் எனவும், தமக்குத் தீமை செய்பவர் பகைவர் எனவும் கருதும் மனப்பான்மையே பெரும்பாலோர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு நிற்பது. இதுதான் உலகில் காணப்படும் வேற்றுமை உணர்ச்சிக்குப் பிறப்பிடமாவது. உண்மையை நாடும் அறிவு நலம் உடையார்களே " யாவரும் கேளிர் " என உணரும் பண்பாட்டினை எய்துவர். யாவரும் கேளிர் என்னும் உணர்வு ஒருவன் உள்ளத்தில் குடிகொண்டு விடுமாயின், அவனுக்கு எவ்வூரில் வாழ்வாரும் கேளிரேயாதலின், தன்னூர் வேற்றூர் என்னும் வேற்றுமையான மனப்பான்மை உண்டாகாது ; " யாதும் தன் ஊரே " யாகும். இனி " யாவரும் கேளிர் " என்னும் மெய்யுணர்வு வேரூன்றுவதற்கு ஆதார

மாயுள்ளவை மற்ற அடிகளில் கூறப்பட்ட பேருண்மைகள் என்பது ஊன்றி நோக்குவார்க்குப் புலனுகும்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் மெய் யுணர்வு பெற்றவன், அவை தம் ஊழ்வினையால் ஊட்டப் பட்டவை, பிறரால் செய்யப்பட்டவையல்ல என்று உணர் வான். அதனுல் தீமையால் வரும் நோதலையும், நன்மை யால் விளையும் அந்நோதலின் தணிதலையும் தானே யடை வாறுதலின் "நோதலும் தணிதலும் அவற்ருே ரன்ன" என்னும் பேருண்மையைக் காண்பவனுவான். இது அவன் உள்ளத்திற் பதிந்துவிடுமாயின், தீமையால் வரும் துன்பத்தைத் தாங்கும் ஆற்றல் அவனுக்கு ஏற்படும். இவ் வாற்றல் வளர்ச்சியடைவதனுல், "சாதல் புதுவது அன்று" என்னும் உண்மை புலப்படும். சாவைப் பொருட்படுத்தாத நெஞ்சுரம் பெற்ற அவனுக்கு வாழ்வில் இன்பம் என்று கருதி மகிழத்தக்கதும், துன்பம் எனக்கொண்டு துயருறக் கூடியதும் இலதாகும். "வாழ்தல் இனிதென மகிழ்ந்தன் றும் இலமே, முனிவின் இன்னுது என்றலும் இலமே" என்னும் அடிகள் இதனை வலியுறுத்துகின்றன.

இவற்ருல் விளங்கத்தக்கது "மழையால் பெருகி வரும் பெருவெள்ளத்தின் வழியே செல்லும் மிதவைபோல, உயி ரானது ஊழ்வினையின் வயமாகி, அதன் வழியிலே இயங்கு வதாகும்" என்னும் பேருண்மையாகும். பல்பெருஞ் சமயஞ் சொல்லும் உண்மையும் இதுதான். "எல்லாம் எனையாளும் ஈசன் செயல்" என்ற முடிபையே இப்பாட லும் வலியுறுத்துகின்றது. இந்த மனநிலை கைவரப்பெற்ற வர், "பெரியோரை வியத்தலும், சிறியோரை இகழ்தலும்" செய்யார் என்பது திண்ணம். இவ்வுண்மையை எளிய முறையில் தெளிவாக உணர்த்தியவர் பூங்குன்றனர் ஆவார்.

மனிதன் நாடுவதெல்லாம் கவலையற்ற இன்ப வாழ்வே

யாகும். துன்பத்தைக் கண்டு துடிப்பதும், இன்பத்தினைத் துய்த்து நன்மையுறுவதும் மாந்தர் இயல்பு. இன்பதுன் பங்களை ஒன்றுகவே மதித்து வாழும் மாண்புடையார் மெய்ந்நெறியை உணர்ந்த சீலர்களாவர். நாட்டில் வேற்றுமையுணர்ச்சி நீங்கி, ஒற்றுமை நிலைபெற்று, அறமும் அருளும் வளர உழைக்கும் தகைமையுடையவர் இவர்களே யன்றோ ?

பிசிராந்தையார்

அறம் உணர்த்திய ஆன்றோருள் பிசிராந்தையாரும் ஒருவர். இவர் பாண்டிய நாட்டிலுள்ள **பிசிர்** என்னும் ஊரினர். ஆதன்தந்தை என்னும் இவரது பெயர் ' ஆந்தை ' என மருவி, ஆந்தையார் என வழங்கலாயிற்று. **பாண்டியன் அறிவுடை நம்பியின்** காலத்தவரான இவர், அம்மன்னனுக்கு அரசியலில் கைக்கொண்டு ஒழுகுதற் குரிய அறநெறியை உணர்த்தியதாக அமைந்த அரிய பாடலொன்று புறநானூற்றின்கண் மிளர்கின்றது.

" விளைந்து முதிர்ந்த நெல்லை யறுத்து உணவாக்கிக் கொண்டால், ஒருமா என்ற அளவிற்கும் குறைந்த நிலத்தி லிருந்து கொள்ளப்பட்ட நெல்லும், கவளங்கவளமாக உண்பார்க்குப் பல நாளைக்கு ஆகும். நூறு செய்யளவு பரப்புள்ள நிலத்தில் விளைந்த கதிராயினும் யானை தனிந் துப் புகுந்து உண்ணுமாயின், அதன் வாயில் புகுந்த நெல்லினும் காலால் மிதியுண்டு சிதறிக் கெட்ட நெல் மிகுதியாகும். அதுபோலவே, அறிவுடைய அரசன், குடிகளிடம் இறைகொள்ளும் நெறியை அறிந்து கொள்வா னயின், அவன் நாடு கோடி பொருளினை அவனுக்கு ஈட்டித் தருவதுடன், தானும் தழைக்கும். அவ்வாறன்றி, அரசன் தன் உரிமையையே பாராட்டி வலிமையைப் பயன்படுத்திக்

குடிகளை வருத்தி இறைகொள்வானாயின், அந்த யானை புகுந்த புலம்போலத் தானும் உண்ணப் பெறான்; அவன் நாடும் சீர்கெடும்.'' என்பது பிசிராந்தையார் கூறிய அறிவுரை.

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை(வு) இல்லதும் பன்னாட்(கு) ஆகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக்(கு) உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமுங் கெடுமே.'' (184)

இதனைப் புலவர் பாண்டியன் அறிவுடை நம்பி என்பவனுக்குக் கூறலுற்றார். நாடு செழிக்கவும் குடிவளம் தழைக்கவும் செங்கோன்மை சீருடன் விளங்கவும் காரணமான இந்த அறிவுரையை அறிவுடை நம்பி என்னும் பெயரமைந்தவன், அப்பெயர்க்குப் பொருத்தமாகப் போற்றிக் கொண்டனன்.

நாடெங்கும் நல்வாழ்வு பெருகவேண்டும். அதற்கு அடிப்படையாவது அறநெறி வழுவாத அரசியல். அரசியல் தலைவனை வேந்தன் தன் கடமை யுணர்ந்து ஒழுகுதல் வேண்டும். இப்பெருநோக்கங் கொண்டு அரசியலுக்கு ஆதாரமான உண்மைகளைப் பிசிராந்தையார் அறிவுடை நம்பிக்கு உவமை முகத்தான் உணர்த்துவாரானார். அறிவுள்ள அரசன் அதனைப் பாராட்டுவான் என்பதே அவர் துணிபு. அவன்பால் புலவர் நாடியது பரிசன்று; பட்டாடையுமன்று; வரிசைகளும் அல்ல. தன்னலங்

கருதி அவர் அவனைப் பாடியவருமல்லர். பொது நலம் போற்றிய அவரது பொன்மொழிகளைச் "செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்" ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லை யன்றோ?

இனி, இப்புலவர் பெருந்தகையின் மற்றொரு அறிவுரையினை நோக்குவோம். பிசிராந்தையார் பாண்டிய நாட்டினரேயாயினும், அவரது புகழ் சோழநாட்டிலும் பரவியிருந்தது. கோப்பெருஞ் சோழன் அவரை நேரிற்கண்டு அளவளாவி மகிழ்ந்தவன் அல்லனாயினும், அவரது பெருமையை அறிந்து, உணர்ச்சியால் அவரோடு ஒற்றுமை கொண்டவனாகி வாழ்ந்து வந்தான். நாளடைவில் இவ்விருவரிடையே நட்பாங்கிழமை நிலை கொள்ளலாயிற்று. சோழன் உலக வாழ்வை வெறுத்து வடக்கிருக்க நேர்ந்தபொழுது, பிசிராந்தையார் அங்குற்றார். அறிஞர் பலர் சூழக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரை வரவேற்றான். அங்கே குழுமியிருந்த புலவர்கள் பிசிராந்தையாரை நேரிற் கண்டதும் வியப்பும் உவப்பும் எய்தினர். அவருள் ஒருவர் பிசிராந்தையாரை நோக்கி, "பெருந்தகையீர், யாங்கள் தங்களைப்பற்றி நெடுநாளாகக் கேள்விப் படுகின்றோம். அக் காலஅளவைக் கணக்கிட்டுப் பார்த்தால், நீர் நரையும் திரையும் உடையவராக இருத்தல் வேண்டுமே! அங்ஙனம் ஆகாததன் காரணம் யாதோ?" என்று வினவினர். அதற்கு விடையாகப் பிசிராந்தையார் "ஐயன்மீர், எனக்கு யாண்டு பலவாயின என்பது உண்மையே. ஆயினும் நரையில்லை. அதன் காரணத்தைக் கூறுவேன்: என் மனைவி மனைமாட்சியில் சிறந்தவள். என் மக்களும் மாண்புடையவரே. எனக்குக் குற்றேவல் புரியும் இளையரும் நற்குணத்தால் நிரம்பியவர்; யான் எண்ணியவாறே இயற்றும் தன்மையர். எமது வேந்தனை பாண்டியனும் குடியோம்பிக் கோலோச்சும் கொற்றமுடையவன். மற்றும்,

யான் வாழும் ஊரில் சான்றோர் பலர் உளர். அதனால், கவலையற்று வாழ்ந்த எனக்கு நரையுண்டாகவில்லை" என்று கூறினர்.

> " யாண்டுபல வாக நரையில வாகுதல்
> யாங்கா கியர்என வினவுதிர் ஆயின்,
> மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர் ;
> யான்கண் டனையர்என் இளையரும் ; வேந்தனும்
> அல்லவை செய்யான் காக்கும் ; அதன்தலை
> ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர்யான் வாழும் ஊரே " (191)

என்ற அவரது மெய்யுரையானது ஒரு வீடு, ஒரூர், ஒரு நாடு ஆகியவற்றின் இன்பவாழ்விற்கான இயல்புகளை யெல்லாம் விளக்குவதாகும். இத்தகைய சான்றோரை நண்பராகக் கொண்டிருந்த பேரரசரான கோப்பெருஞ் சோழனும் பாண்டியன் அறிவுடை நம்பியும் தலைமை தாங்கி நடத்திய அரசியல் நாட்டிற்கு நலம் விளைப்பதாகவே இருந்திருக்கும் என்று நாம் கொள்வதில் தடையில்லை.

இளம்பெருவழுதி

புலமைச் செல்வம் பெற்றவர் அரசியல் நன்கமைவ தற்கு ஆதாரமான கொள்கைகளை அறிவுறுத்தியதினும், அரசியல் தலைமை தாங்கியவர் அவற்றை உணர்ந்து கூறிய உரைகள் சிறப்புடையனவன்றோ ? முன்னாளில் வாழ்ந்திருந்த அறிவுடைய அரசர் சிலர் குடிநலம் பேணும் கொள்கைகளைத் தாம் மேற்கொண்டொழுகியதோடு, பிறர்க் கும் அறிவுறுத்துவாராயினர். இவர்களிடம் அரசச் செல் வத்தோடு செவிச் செல்வமும் பொருந்தியிருந்தது. அன்னாருள் பாண்டியர் மரபிலுதித்த இளம்பெருவழுதி என்பவர் ஒருவர்.

இளம்பிராய முதலே பேரறிவினராக விளங்கியவர் இவர். 'கடலுள் மாய்ந்த' என்னும் அடைமொழி இறந்த பின் இவரை இன்னர் என்று குறிக்கும் பொருட்டு வழங் கப்பெற்றது. "உலகம் நல் வாழ்வு பெறுவதற்கு இத் தன்மையோர் காரணராவார்" என்பதை இவர் நயம்படக் கூறும் பாடலொன்று புறநானூற்றில் உள்ளது. "தேவாமிர் தமே கிடைத்த போதிலும், அருமையும் இனிமையும் கருதி, அதனைத் தாமே உண்ணாது, பிறர்க்கும் அளித்தே உண் பர். வாழ்வில் யாரிடமும் வெறுப்புக் கொள்ளார். பிறர்க்கு நேரும் அஞ்சத்தக்க துன்பங் கண்டு தாமும் அஞ்சுவார்; அது தீரும் வரையில் தாம் துயிலவுமாட்டார். புகழ் பெறு வதற்கு காரணமான நற்செயல் புரியும் வாய்ப்புக் கிடைத் தால், அதன் பொருட்டுத் தம்முயிரையும் கொடுப்பர். உலகமுழுவதும் தமக்கு வயமாவதாயினும் பழிக்குக் காரணமான தீச்செயலைச் செய்யார்; எந்நாளிலும் சோர்வு அடையார்; தன்னலங்கருதி முயலார்; பிறர் நலம் பேணியே முயன்று உழைப்பார். இத்தகைய சான்றோர் சிலரேனும் வாழ்ந்திருப்பதால்தான் உலகம் அழியாதிருக் கின்றது" என்னும் பொருளுரை கொண்டது அப்பாடல். உலகம் அழியாது நிலைபெற்றிருப்பதற்குத் தன்னலமற்ற சான்றோர் பெருமையே காரணம் என்றுரைக்கும் அவரது பரந்த உள்ளம் எத்தகைய உயர்நிலையில் அமைந்திருத்தல் வேண்டும் என்பது உணரத் தக்கது.

" உண்டால் அம்மஇவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவ(து) அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்

தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே'' (182)

இத்தகைய உணர்ச்சி பொருந்திய அரசர் நாட்டின் தலைவராக அமைவராயின், அந்நாட்டு மக்களே பெரும் பேறு பெற்றவராவரன்றோ? நாட்டின் வாழ்வு அங்குள்ள மக்களின் மனநிலையைச் சார்ந்ததாகவே அமையும் என்னுங் கருத்தினை அழகாக உணர்த்திய வழுதிக்கு உலகம் கடப்பாடுடையது.

நல்வாழ்விற்கு அடிப்படை நல்ல உள்ளம். அது அமைவதற்கு நல்லார் இணக்கம் வேண்டற்பாலது. ஆதலின், ஒருவன் தான் எத்தகையாருடன் உறவாடலாம், எத்தன்மையினரோடு பழகலாகாது என்பவைகளை ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும். சான்றோர் உறவு ஒருவன் மனத்தைப் பண்டுபடுத்தி நல்வழியிலே செலுத்தும்; இன்சொல் கூறச்செய்யும்; நற்செயலில் இறங்கத் தூண்டும்; தன்னலத்தை நசிக்கச் செய்து, பொதுநலத்தில் மனத்தை ஊன்றுவிக்கும். உலகம் நன்மையும் தீமையும் ஒருங்கே உடையது. நல்லோரும் தீயோரும் நம்மிடையே உள்ளனர். இவர்கள் வாழும் வாழ்க்கை வேறுபாடு உடையது. தன்னலமே உருக்கொண்டவர் பொது நலம் கருதார்; தன்னலங்கருதிப் பிறர்க்குத் தீமையும் புரிவர். தன்னலமற்றவர் பிறர் நலமே தன்னலமென்று கொண்டு உழைப்பர்; தன் உடல் பொருளாவியாகிய மூன்றையும் உலக நன்மைக்காகவே ஈவர். அவர்களால் தான் இவ்வுலகமும் நிலைபெற்றிருக்கின்றது.

சோழன் நல்லுருத்திரன்

உயர்நோக்குடன் உலகாண்ட மன்னருள் இவனும் ஒருவன். தன்மானம் காத்தலும் முயற்சி குன்றாதிருத்

தலும் மாந்தரிடம் அமைதற்குரிய அருங்குணங்களாகக் கொண்டவன் இவன். உலகில் நாம் இன்னாரோடு பழக வேண்டும், இன்னாரோடு பழகலாகாது என்பதை இவன் உவமை முகத்தால் விளக்கும் புறப்பாட்டு ஒன்றுண்டு. எலி போன்றவருடன் உறவுகொள்ள லாகாது; புலியனை யாரோடு பழகுதலே ஏற்றது என்பது இவன் அறிவுரை. இரைவேட்ட புலியொன்று தான் செல்லும் வழியில் பன்றி யொன்று எதிர்ப்பட்டு, அதைக் கொல்ல நேர்ந்தால், இறந்த அப்பன்றி தன் இடப்பக்கத்தில் விழுமாயின், அதை உண்ணாது.[1] மறுநாள் உணவை நாடிச் சென்று பெரிய களிறு ஒன்றைத் தாக்கி, அது தன் வலப்பக்கத்தில் விழுமாறு செய்து அதனைத் தின்னும். அப்புலியைப் போன்றவர் தளர்ச்சியின்றி முயற்சியுடையவராய், ஊக்கம் குன்றாது உழைத்து, அதனால் கிடைக்கும் ஊதியத்தை யடைந்து உண்டு வாழ்வர்; தமது உழைப்பால் பிறர்க்கும் தாம் பயன்பட வாழ்வர். இத்தகைய வாழ்வுடையார் உறவே கொள்ளத்தக்கது என்பது நல்லுருத்திரனது கொள்கை.

எலிபோன்றவர் வாழ்க்கையை வெறுத்துரைக்கின்றான் அவ்வேந்தன். எலி தானே வருந்தி யுழைக்காமல், பிறர் முயற்சியின் பயனை எதிர்பார்த்திருந்து, திருடிக்கொண்டு வந்து, பிறர் அறியாதபடி தன் வளையிலே சேர்த்து வைத்துத் தானே உண்ணும் தாழ்ந்த குணமுடையது. விளை நிலத்தில் பயிர்களிலே கதிர்கள் முற்றும் காலம் பார்த்திருந்து, நெல் முதலிய தானிய மணிகளைக் கொண்டு வந்து தன் வளையிலே சேர்த்துவைக்கும் இழிகுணத்தை அவ்வேந்தன் வெறுக்கின்றான். தம்முடைய செல்வத்தை நுகராது இறுகப்பிடிக்கும் இத்தகையாரோடு பொருந்தும்

---

1. "கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம் வீழ்ந்த துண்ணா திறக்கும்" (நாலடியார் 300)

நட்பு தனக்கு இல்லாதொழியவேண்டும் என்றும், புலி போன்ற நேர்மையும் முயற்சியும் உடையாரோடு கொள்ளும் நட்பினையுடையதாயின், சிறிதேயாயினும், அந்த வாழ்நாள் தனக்கு உளதாகவேண்டும் என்றும் அவன் வேண்டுவானாயினான். இவ்வாறு அவன் தனது கொள்கையை வெளியிடும் வாயிலாக, உலகிற்கு உண்மை வாழ்வின் தன்மை இன்னதென்று உணர்த்தினான். உழைப்புக்குப் பின்வாங்கும் ஊக்கமில்லாதார், பிறர் முயற்சியை எதிர்பார்த்துப் பொருள் சேர்த்துத் தனக்கும் பிறர்க்கும் பயன்படாதபடி அதனை ஒளித்துவைக்கும் வாழ்வு நாட்டிற்குத் தீமை பயப்பதேயாகும். பலரும் அடைந்து துய்த்தற்குரிய பொருள் இத்தகையவரிடம் சிறைப்பட்டு, ஏனையோர்க்குப் பயன்படாமற் போவதாகிய தீமையே இவரால் விளைவதாகும். நாட்டில் வறுமை பெருகக் காரணமாயுள்ளவர் இவர்களேயாவர். நாட்டில் வறுமை நீங்கிப் பொருள் பரவி யாவரும் நல்வாழ்வு அடைவதற்குப் புலிபோன்ற உழைப்பாளிகளும், தம் உழைப்பால் கிடைத்ததில், தாம் உண்டதுபோக எஞ்சி யதைப் பிறர்க்கு உதவும் பெருந்தகையாளரும் நிறைய வேண்டும் என்பதே நல்லுருத்திரன் நோக்கமாகும்.

> ''விளைபதச் சீறிடம் நோக்கி, வளைகதிர்
> வல்சி கொண்டளை மல்க வைக்கும்
> எலிமுயன் றனைய ராகி உள்ளதம்
> வளன்வலி யுறுக்கும் உளமி லாளரொ(டு)
> இயைந்த கேண்மை இல்லா கியரோ ;
> கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
> அன்(று) அவண் உண்ணா தாகி, வழிநாள்
> பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்(து)
> இருங்களிற்(று) ஒருத்தல் நல்வலம் படுக்கும்
> புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்(து)

உரனுடை யாளர் கேண்மையொ(டு)
இயைந்த வைகல் உளவா கியரோ'' (190)

என்னும் பாட்டு சோழன் நல்லுருத்திரனால் பாடப்பெற்றது.

'' பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''.

என்று வள்ளுவனார் வகுத்துக்கூறிய வாழ்க்கை நெறிக்கு விளக்கமாக அமைந்துள்ளது இப்பாடல். இத்தகைய பொருளுரை பொதிந்த பாடல்கள் மக்களுக்கு ஒழுக்க நெறியை உணர்த்தும் அழியாச் செல்வமாகும்.

12. பேகன்—கண்ணகி

புலவரும் புரவலரும்

அன்பும் அறமும் அடிப்படையாக உடையது இல்வாழ்க்கை. அத்தகைய வாழ்வே உலகில் இன்பத்தைத் தந்து அருள் நெறிக்கு வழிகாட்டி அருந்துணை புரியும். இவ்வகையான இல்வாழ்க்கையுடையார் நாடெங்கும் சிறந்து விளங்குவாராயின் அந்நாடே பொன்னுடு எனப் போற்றத் தக்கதாகும். இதற்கு ஆணிபோல் இருப்பது அரசியல். ஒரு நாட்டின் ஆட்சிமுறை நன்னெறியில் நடைபெறுமாயின், அங்கு வாழும் குடிகளின் வாழ்க்கையும் செம்மையுடையதாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. ஆட்சிமுறை நன்னெறியில் நடைபெறுதற்கு அடிப்படையானவன் வேந்தனேயாவன். "அரசன் எவ்வழி அவ்வழி குடிகளும்" அன்றோ? மன்னன் நன்மனம் படைத்தவனுதல் மட்டுமே சாலாது; அவன் அறிவுடையவனுகவும், அறிஞர் அறிவுரைகளுக்குச் செவிசாய்த்து அவற்றின்படி ஒழுகுபவனுகவும் இருத்தல் வேண்டும். அறிஞரைப் போற்றி அவர்களுக்கு எவ்வகைத் துன்பமும் ஏற்படாதவாறு காத்தலும் அவ்வேந்தனது கடமையாகும்.

தமிழகத்தில் திகழ்ந்த அறிவுச் செல்வங்களாகிய புலவர்களைப் போற்றி வாழ்ந்த புரவலர் பலர் திகழ்ந்தனர். வண்மையின் எல்லையை எய்தி, வரையாது வழங்கி, அதற்கு ஈடாக அழியாப் புகழை ஈட்டிய அருளாளரான அவர்களது பெயர் புலவர்களது செந்நாவினின்றெழுந்த செய்யுட்களில் நாயகமாக அமைந்துள்ளது. இவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகள் அந்நாளில் வாழ்ந்தோருக்கு மட்டுமேயன்றி எந்நாளிலும் எந்நாட்டிலும் வாழும்

மாந்தர்க்கும் அறநெறியுணர்த்தி அருள் உணர்வை ஊட்டுவனவாயுள்ளன.

கடையெழு வள்ளல்கள் என்போர் இத்தகைய கொடை வளமும் அருள் உணர்வும் உடையவராக விளங்கினர்; இவர்கள் ஒரோருகால் நெறி தவறி நடந்த போதிலும், அறிஞர் அறிவுரைகளை மேற்கொண்டு திருந்தி வாழ்ந்தனர். இங்ஙனம் இவர்கள் வாழ்ந்தமைக்குக் காரணமானவர் அருள் உள்ளமும் ஆன்ற ஒழுக்கமும் அஞ்சா நெஞ்சமும் பெற்ற சான்றோரேயாவர். இவர்களது தன்னலமற்ற பொதுநலம் பேணும் தகைமை நாடெங்கும் நல்வாழ்வைப் பரவச் செய்தது.

சங்கச் சான்றோரால் பாடப்பெற்ற கடையெழுவள்ளல்கள் அருள் உணர்வு மிக்கவர்கள்; "தாம் இன்புறுவது பிறர் இன்புறக்கண்டு" என்பதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்கள். முல்லைக்கொடி பற்றிப் படர்வதற்குத் தன் தேரையே நல்கிய அருள் உணர்வு மிக்கவன் **பாரி** என்னும் சீரியோன் ஆவான். ஏற்றவர்க்குப் பரியும் கரியும் வழங்கியதோடு தனது நாட்டையும் அளித்து, ஈத்துவக்கும் இன்பத்தில் திளைத்தவன் வண்புகழ்க் **காரி** என்பவன். ஆலமர் செல்வனுக்குத் தன் நீலப்பட்டாடையை வழங்கி, இரவலர் பலர்க்கும் தன் பொருளையும் ஊர்களையும் உவந்தளித்தவன் **ஆய்** என்னும் அருளாளன் ஆவான். 'பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட' தும், ஆயுள் வளர்ச்சி அளிப்பதுமான 'சிறியிலை நெல்லித் தீங்கனி' யைத் தான் உட்கொள்ளக் கருதாமல், புலமைச் செல்வியான ஔவையார் சாதல் நீங்கி நீண்ட நாள் உலகில் வாழ்ந்து அருளறத்தைப் பரப்ப வேண்டும் என்ற நல்லுணர்வுடன் அவருக்கு அளித்து அகமகிழ்ந்தவன் **அதிகமான்**. புலமைச் சுற்றமும் நட்பினரும் நலமுடன் வாழ்வதே தன் இன்பவாழ்வாக மதித்து வாழ்க்கை நடாத்தியவன்

நள்ளி என்னும் நல்லோன். பாணரும் கூத்தரும் படரின்றி வாழ்ந்து தம் கலைகளை வளர்க்கப் பொருள் வழங்கிக் களி கூர்ந்தான் ஓரி என்ற வள்ளல். காரின் வரவு கண்ட கான மயிலொன்று களிப்புற்று ஆடியது நோக்கி, அது குளிர் பொறுக்கமாட்டாமல் நடுங்கியது என்று எண்ணித் தான் போர்த்திருந்த போர்வையால் அதனைப் போர்த்த புரவலன் **பேகன்** என்பான். இந்தக் கடையெழு வள்ளல்களுள் யாம் இங்கே விவரிக்கப் போந்தது பேகனது வாழ்க்கை நிகழ்ச்சிகளில் ஒன்றேயாகும்.

பேகனது வாழ்க்கை

பேகன் மலைநாட்டினையாண்ட ஒரு சிற்றரசனுவான். **வையாவிக்கோப் பெரும்பேகன்** என இவன் பெயர் பெற்றிருந்தான். இந்த அடைமொழியாலும்,

"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திற லணங்கிய னுவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகன்"

எனவரும் சிறுபாணாற்றுப்படை (85-7) அடிகளாலும் இவன் ஆவியர் குடியிற் பிறந்தவன் என்று தெரிகிறது. இவனது அரசிருக்கையாக விளங்கியது **நல்லூர்** ஆகும். இவனது வள்ளன்மையைப் பரணர்,

"எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண்மையே"[1]

எனப் பாராட்டுவாரானுர். 'தன்னால் இயன்றவெல்லாம் ஈதலே நன்மை தருவது. இவ்வாறு வழங்குவது மறுமை கருதியன்று; பிறர் வறுமைத் துன்பத்தை உட்கொண்டே

1. புறம்—141.

யாகும்'' என்பதே இவன் கொள்கை. இவ்வருங்குணச் செல்வனோடு நெருங்கிப் பழகிய புலமைச் சான்றோர் **பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார்** என்போராவர். இவர்கள் இவனுக்குத் தமிழின்பம் வழங்கி வந்தார்கள்.

இத்தகைய வள்ளலின் வாழ்க்கையில் ஒரு சிறு மாசு படியலாயிற்று. அது அவனது இல்லற வாழ்க்கையைப் பற்றியதாக இருந்தது. அதனையறிந்த புலமைச் செல்வர்கள் அவன்மேல் தமக்கிருந்த ஆதரத்தால் மனம் மறுகி, அவனைத் திருத்துங் கடமையில் தலைநின்றனர். அதற்கு அவர்கள் கைகொண்ட முறையும் வியக்கத்தக்கது. அவ் வள்ளலின் வாழ்க்கையில் காணப்பட்ட மாசுதான் யாது? அது அவன் வாழ்க்கைத் துணைவியாகிய கண்ணகி என்பாளை வருந்தும்படி நீத்து, வேறு ஒருத்தியோடு வாழ்ந்து வந்ததேயாகும். கண்ணகி குறையுடையவள், குற்றமற்றவள் என்பதையும் அப்புலவர்கள் உணர்ந்தனர். பேகனும் குற்றமில்லாதவனே யாவான். ஆயினும், மயிலுக்குப் போர்வையீந்த அவ்வருளாளன் உள்ளம் தன் வாழ்க்கைத் துணைவியிடத்தில் அருளின்றி யிருந்தமை புலவர்களுக்குத் திகைப்பை உண்டாக்கியது. கண்ணகியின் துயரத்தைத் துடைத்தல் ஒன்றே அவர்கள் நோக்கமன்று; பேகனது வாழ்க்கை மாசற்றதாய்,

> '' அன்பும் அறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
> பண்பும் பயனு மது''

என்ற மறைமொழிப்படி, யாவரிடம் கொள்ளத்தக்க அருள் வாழ்விற்கு அடிப்படையான அன்புவாழ்க்கையாய் அமைய வேண்டும் என்பதே அவர்கள் விருப்பம். இனி, அப்புலவர் பெருமக்கள் பேகனையடைந்து, அவன் குற்றத்தை உணர்த்தித் திருத்திய வகையைக் காண்போம்.

பரணர்

சங்க காலத்தில் விளங்கிய தமிழ்நாட்டுத் தலைவர் பலரால் நன்கு மதிக்கப்பெற்றவரான இப்புலவர் பெருமான் பேகனையடைந்து இரண்டு பாடல்களால் நயமான நாகரிகமான முறையில் அவனைத் திருத்த முயன்றார்: "அருள் குடிகொண்ட உள்ளமுடையவனே! நீ அருளை மறந்திருப்பது கொடுமையானது. மாலைப்பொழுதில் யாம் எமது சிறிய யாழை இசைத்துச் செவ்வழி என்னும் இரங்கற் பண்ணிலே மேகம் தவழும் நினது கானத்தைப் பாடிய வண்ணம் நின்வாயிலை யடைந்தோம். அடைந்ததும், நெய்தல் மலரையொத்த தனது கண்களினின்றும் நீர் பெருக, அது அவளது அணிகலனை நனைப்ப நின்றழுதாள் ஒருத்தி. உடனே யாம் அவளை நோக்கி, "அம்மா! எமது நண்பனுன பேகனுக்கு நீ உறவினளோ?" என்று வினவினேம். வினவியதும், அவள் காந்தள்முகை போன்ற தனது விரலினுல் கண்ணீரைத் துடைத்தவளாய், 'யாம் அவனுக்கு உறவினள் அல்லேம். அவன் வேறு ஒருத்தியின் அழகில் ஈடுபட்டு வாழ்கின்றனனும்' என மறுமொழி புகன்றாள்" என்று பரணர் பகர்ந்தார்.

அருளாய் ஆகலோ கொடிதே! இருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக,
நீனறு நெய்தலின் பொலிந்த உண்கண்
கலுழ்ந்துவார் அரிப்பணி பூணகம் நனைப்ப
இனைத லானுள் ஆக, " இளையோய்!
கிளையை மன்எம் கேள்வெய் யோற்(கு)? " என,
யாம்தன் தொழுதனம் வினவக், காந்தள்
முகைபுரை விரலின் கண்ணீர் துடையா

"யாம்அவன் கிளைஞரேம் அல்லேம் ; கேள்இனி
எம்போல் ஒருத்தி நலன்நயந் தென்றும்
வரூஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென ஒலிக்குந் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே." [1]

என்பது பரணர் அரிய பாடல். இதில், கண்ணகியின் இளமையழகும், அவளது குற்றமற்ற நிலையும், பேகனிடம் அவள் கொண்டிருந்த காதலும், அவனைப் பிரிந்து வாழ நேர்ந்ததால் அவள் படும் துயரமும், தவறு பேகனுடையதே என்பதும் நயமுடன் உணர்த்தப்பட்டிருத்தல் காணலாம். 'யாம் தொழுதனம் வினவ' என்றதால் புலவர் அவளது தொழத்தக்க கற்புநிலையையும் உணர்த்தினர் ; 'அணிகலன் நனையும்படி கண்ணீர் சொரிந்தாள்' என்று கூறி, அவன் உள்ளத்தில் அவள் திறத்தில் மங்கியிருந்த அருளை ஒளிரச் செய்தார்.

பரணர் கூறியதைக் கேட்ட பேகனுக்கு உணர்ச்சி உண்டாயிற்று. ஆயினும், கண்ணகியை ஏற்றுக் கொள்வதில் காலந்தாழ்த்தினன் போலும். தமது அறிவுரையை ஏற்றும், அக்காரிகைக்கு அருள் செய்வதில் அவன் காலந்தாழ்த்தலைப் புலவர் கண்டார். தமக்குப் பரிசில் அளிக்க வந்த வள்ளலை நோக்கி,

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக !
பசித்தும் வாரேம் ; பாரமும் இலமே
களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்

---

1. புறம்-144

நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள் வெய்யோய் என
இஃதியாம் இரந்த பரிசில் அஃ(து)இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்று(து) உறைவி அரும்படர் களைமே ''[1]

என மீண்டும் அவனை அருள்புரியும்படி வேண்டினர். '' உன்னைப் பாடிப் பசித்துன்பத்தைப் போக்கிக் கொள்ள யாம் வந்தேமல்லேம். எம்மால் காக்கப்படவேண்டிய சுற்றமும் எமக்கில்லை. பொருள் நச்சி யாம் உன்னை நாடி வரவில்லை. யாம் உன்பால் பெறவிழையும் பரிசில் ஒன்றே. அது நீ அருளுடையவனாகி மணியொலிக்கும் நின் பெரிய தேரிலேறிச் சென்று உனது துணைவியின் துயரத்தைத் துடைத்தலேயாகும் '' என்றார் புலவர். '' கான மயிலுக்கு அருளினாய் நீ '' என்றதால், '' நின் இல்லத்திற் பொருந்தி வாழ்தற்குரிய மயிலுக்கு அருளாயாதல் அறமன்று '' என்பது தொனிக்கச் சொன்னார் ; '' அரும்படர் களைமே '' என்ற தொடரைப் பாடலின் ஈற்றில் அமைத்து அவள் துயரின் மிகுதியையும், அதனை உடனே போக்கியருள வேண்டும் என்பதையும் புலப்படுத்தினார்.

கபிலர்

கபிலர் ஒரு பாண்டியநாட்டுப் புலவர் ; திருவாதவூரில் தோன்றியவர். வேள்பாரியின் ஆருயிர் நண்பராகவும் அவைக்களப் புலவராகவும் விளங்கியவர் இவர். தம் காலத்துத் தமிழ் வேந்தர் பலராலும் நன்கு மதிக்கப்பெற்ற இப் புலவர்பெருமானின் அருள் உள்ளம் கண்ணகியின் பொருட்டுப் பேகனை நாடிப் பாடுமாறு இவரைத் தூண்டியது. '' கைவண்மையாற் கொடுக்கும் கொடைவளம் படைத்தவனே ! யாம் நேற்றுச் சுரத்தில் நடந்து வருந்திய

1. புறம்-145

எமது சுற்றத்தின் பசியைத் தணிக்கும்பொருட்டு, முரசு போல் ஒலிக்கும் அருவியையுடைய பெரிய உயர்ந்த மலைச் சாரலிலுள்ள உனது சிற்றூரையடைந்து, உன் வாயிலை எய்தி, உன்னையும் உன் மலையையும் பாடிநின்றேன். அந்த வாழ்த்துரையைக் கேட்டதும், துன்பமிகுதியால் கண்ணீர் பெருக்கி, அதைத் தடுக்கும் வன்மையில்லாதவளாய், விம்மியழுதாள் ஒருத்தி. பாவம்! அவள் யாரோ? இரக்கத்திற்கு உரியவளாகவே இருந்தாள்" என்று நயமுற அறிவுறுத்தினர் கபிலர்.

" கைவள் ஈகைக் கடுமான் பேக !
யார்கொல் ? அளியள் தானே நெருநல்
சுரன் உழந்து வருந்திய ஒக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளியிருஞ் சிலம்பின் சீறூர் ஆங்கண்
வாயில் தோன்றி வாழ்த்தி நின்று
நின்னும் நின்மலையும் பாட இன்னு(து)
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
மார்பகம் நனைய விம்மிக்
குழலினை வதுபோல் அழுதனள் பெரிதே." [1]

என்னும் அவரது நயவுரையில், முதலில் அவனது கைவண்மையை உணர்த்தி அருள் உணர்வைத் தூண்டினர். பேகனல் புறக்கணிக்கப்பட்ட கண்ணகியே அவள் என்பதைத் தாம் அறிந்தும், "அவள் யாரோ? பாவம்! இரங்கத்தக்கவள்" என்று அறியாதவர்போலக் கூறினர். 'யார் கொல்? அளியள்தானே" என்ற அவர் வாக்கு, "அவள் யாராயிருப்பினும் அருளத் தக்கவளேயாவாள். நின் துணைவியே யாதலின் அருளுதல் நின் தலைக்கடன்" என்பது தோன்ற நின்றது. யான் உனது மலையையும்

1. புறம்—143

உன்னையும் பாடியதைக் கேட்டதும், அவள் "விம்மிக் குழல் இனைவதுபோல் அழுதனள் பெரிதே" என்றதால், பேகன்பால் அவள் கொண்டிருந்த காதல் இத்தகையது என்பதையும், பிரிவினால் அவள் படும் துயரம் கரையில்லாதது என்பதையும் விளங்கச் செய்தார். குழலிசை போல இருந்தது அவள் குரலோசை, அதனைக்கேட்டு இன்புறும் நலனை நீ எய்துதல் வேண்டும் என்றும் சொன்னார். அவர் அறிவுரையின் பெருமிதந்தான் என்னே!

அரிசில் கிழார்

இப் புலவர் பெருந்தகை சோணாட்டினர். கொள்ளிடத்தின் வடபாலுள்ள அரியலூர் இவரது பிறப்பிடமாகும். வேளாண் மரபினரான இவரும் பேகனைப் பாடி அவனோடு அளாவளாவி மகிழ்ந்தவரேயாவார். இவர் தமிழ் மன்னர் பலரைக்கண்டு பாடிப் பரிசில் வாழ்க்கை நடத்தியவர். கண்ணகியின் கடுந்துயரமானது கனிவுள்ளம் படைத்த இவர் கருத்தை ஈர்த்தது. பேகனை எய்தி இவர் உரைத்ததாவது—

"அன்ன ஆகநின் அருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேம்; அடுபோர்ப் பேக!
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட, என்னை நயந்து
பரிசில் நல்குவை ஆயின், குரிசில்! நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்
அருந்துயர் உழக்கும்நின் திருந்திழை அரிவை
கலிமயிற் கலாவம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே."[1]

1. புறம்—146

''பேகனே! நீ அளிக்கும் ஆபரணமும் செல்வமும் எமக்கு வேண்டா. யாழ் வாசித்து நினது மலைநாட்டை யாம் பாடக் கேட்டு, எம்மீது அன்புகொண்டு நீ பரிசில் தருகுவையாயின், யாம் வேண்டும் பரிசில் அதுவன்று. உனது அருளைப் பெருமையால் - கண்டார் இரங்க மெலிந்து, பெருந்துயரத்தால் வருந்தும் அவள் துயர் களைதலே யாம் பெற விரும்பும் பரிசில். நீ ஏறிச் செல்லு தற்குரிய தேருக்குக் குதிரை பூட்டுக. நீ செல்லின் உன் னருளை ஆவலுடன் நோக்கியிருக்கும் அணங்கு துயரம் நீங்குவாள். அவிழ்ந்து அணிபெறுது வறிதே தவழும் அவள் கூந்தல், உன்னருளால் புகையூட்டப்படும். மலர் சூடவும் பெறும்'' என அரிசில்கிழார் அருமை தோன்றக் கூறினர்.

''கலிமயிற் கலாவம் கால்குவித் தன்ன, ஒலி மென் கூந்தல்'' என்றது கண்ணகியின் கூந்தலழகைப் பேகனுக்கு நினைவூட்டியதோடு, அவன் மயிலுக்கு அருளி யதையும் மறைமுகமாக உணர்த்தியதாகும். உடனே தேரேறிச் சென்று அவள் துயரத்தை நீக்குதலே தமக்குப் பரிசிலாகும் என்றுரைத்து, அவனைச் செய்கையில் தூண்டினர் நம் புலவர் பெருந்தகை.

பெருங்குன்றூர் கிழார்

வேளாண்மரபினரே இப்புலவர் பெருந்தகையும். சேர மான் குடக்கோ இளஞ்சேரல்இரும்பொறை என்பவனைப் பாடிப் பெரும் பரிசில் பெற்றவர் இவர். இவரால் பாடப் பெற்ற அரசர் பலர் உண்டு. கண்ணகியின் கரையிலாத் துயரம் இவர் கருத்தையும் கவர்ந்து பாடுவித்தது. இது குறித்து இவர் பாடியுள்ள செய்யுளாவது :

" கன்முழை யருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததை
கார்வான் இன்னுரை தமியள் கேளா
நெருநல் ஒருசிறைப் புலம்புகொண் டுறையும்
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன்எம் பரிசில் ஆவியர் கோவே. "[1]

" கல்முழைகளினின்று விழும் அருவியையுடைய பல மலைகளையும் நீந்துவனபோல மிகவும் வருந்திக் கடந்து வந்து யாழ் வாசித்தோம். கார்காலத்து மழையின் இனிய துளி விழுகின்ற ஓசையைத் தனித்தவளாகக் கேட்டு வாடியிருந்தாள் அவள். செவ்வரி பரவிய குளிர்ந்த கண்ணும், நெய் துறந்த மைபோன்ற கரிய கூந்தலு முடைய அவள் மலர்சூடி மகிழுமாறு இன்றே நீ செல்வா யாயின், அதுவே யாம் பெறவிரும்பும் பரிசில் " என்று அறிவுறுத்தினர் அரிசில்கிழார்.

'ஆவியர்கோவே' என்று அவன் குலப்பெருமையை யும், 'கன்முழை அருவிப் பன்மலை நீந்தி' என்று தாம் அரும்பாடுபட்டு வந்தமையையும், அதற்கு ஈடு செய்யத் தக்கது அவன் திரும்பிச்சென்று அவள் துயர் களைதலே யாகும் என்பதையும் புலவர் வற்புறுத்தினர். அவளது கண்ணழகு, கூந்தலழகு ஆகியவற்றையும் அவனுக்கு நினைப்பூட்டி, 'இத்தகைய அழகியை துயரப்படத் தனிமை யில் விட்டு, நீ இங்கே இருத்தல் உன் குடிக்கும் உன் அருள்வண்மைக்கும் பொருந்துவது அன்று' என்பதையும் புலப்படுத்தினர்.

இதுகாறும் கூறியவற்றால், புலவர் பெருமக்கள் தாம்

1. புறம்—147

மேற்கொண்டிருந்த பொதுநல வாழ்க்கை இத்தகையது என்பது தெள்ளிதின் விளங்கும். அருள்குடி கொண்ட உள்ளத்தவரை நாடி, அவர்கள்பால் சிறு குறைகள் காணப்படின் அவற்றைத் தம் நாவன்மையால் போக்க முயன்று, திருத்தும் கடமையில் தலைநின்று, அருளறம் பூண்டு வாழ்ந்த அரிய வாழ்வே அவர்கள் வாழ்க்கை. அவர்களது தெளிந்த உள்ளத்தினின்று எழுந்த பாடல்கள், அன்று அவரால் பாடப்பெற்றவர்க்கும், இன்று யாவர்க்கும் பொருந்திய அறிவுரைகளைத் தந்து, தமிழின்பம் பயப்பவையாகும். வாழ்க தமிழ் உள்ளம்! வாழ்க தமிழ் இன்பம்.

SENTAMIL IN

BY

S. V. VARADARAJA AYYANGAR,
46, T. P. COIL STREE
TRIPLICANE : : MADRAS-5.

Price Rs. 1—8—0